கோகுலம்

GOKULAM


ஜூன் 84 ரூ.2





ஹெலன் கெல்லர்

பிறந்த நாள் : ஜூன் 27



கோகுலம்

மலர்—2 இதழ்—5 1984 ஜூன் மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-

கோகுலம்
அருமைச் சிறுவர் சிறுமியரே!

உங்களுக்கு ஒரு நல்ல செய்தி.

அடுத்த மாதத்திலிருந்து 'மாதம் ஒரு மணிக் கதை'யை நீங்கள் படித்துச் சுவைக்கப் போகிறீர்கள்; பயன் அடையவும் போகிறீர்கள். முதல் கதையின் பெயர் 'நல்விருந்து'. யாருக்கு இந்த நல்விருந்து அளிக்கப் படுகிறது என்பதைப் படித்ததுமே, 'நமக்கும் இது ஒரு நல்விருந்துதான்' என்ற முடிவுக்கு வந்துவிடுவீர்கள். இப்படி மணி மணியான கதைகளை மாத தோறும் நமக்குத் தொடர்ந்து வழங்கப் போகிறவர் யார்?

குழந்தைகளிடத்திலே மிகுந்த அன்பும், அவர்களின் எதிர் காலத்திலே பூரண நம்பிக்கையும் வைத்துள்ள

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்தாம் இக்கதைகளை வழங்கப் போகிறார்கள்.

கோ. சி. ச. உறுப்பினர் எண்ணிக்கை ஏழாயிரத்தை எட்டிவிட்டது. புதிதாகச் சேர்ந்தவர்களுக்கு விரைவில் உறுப்பினர் அட்டை அனுப்பப் பெறும்.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பங்கு கொள்ளும் பிருந்தாவனம், பிருந்தாவனக் கதையரங்கம், பிருந்தாவனக் கவியரங்கம் எல்லாமே வளர்ந்து வரும் குழந்தைகளின் கற்பனை வளத்தையும், எழுத்துத் திறத்தையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இப்பகுதிகளில் பங்கு பெறுவோரில் பலர் வருங்காலத்தில் சிறந்த கவிஞர்களாகவும் எழுத்தாளர்களாகவும் விளங்க வாய்ப்பு உண்டு. எதை எழுதினாலும் அது உங்கள் சொந்தமாக இருக்கட்டும் என்பதை மீண்டும் ஒரு முறை வற்புறுத்துகிறோம்.

ஆண்டுத் தேர்விலே வெற்றி பெற்ற அனைவருக்கும் 'கோகுல'த்தின் நல்வாழ்த்துக்கள். ஒருசிலர் வெற்றி பெறும் வாய்ப்பை இழந்திருக்கலாம். இதற்காகச் சோர்ந்துவிடக் கூடாது. முழு மூச்சுடன் முயற்சி செய்தால் அடுத்த தேர்வில் நிச்சயம் அவர்கள் வெற்றி பெறுவார்கள். தன்னம்பிக்கையும் தளராத முயற்சியுமே தேவை.


அழ. வள்ளியப்பா



இந்த இதழ் எழுத்தாளர்கள்



பிருந்தாவனக் கதாசிரியர்கள்



ஜி. [illegible] கோ. ஸ்ரீதர் எல். விஸ்வநாதன் இரா. மணிகண்டன்

பிருந்தாவனக் கவிஞர்கள்



கே. ஸ்ரீராம் ஆர். ஸ்ரீராம்

கோ. மா. கோ. இளங்கோ

முகப்பு வண்ணப் படம்: அஷு • குழந்தைப் பெயர்: ப்ரியா
பின்புறப் புகைப்படம்: எம். நடராஜன்

மின்மினிக் கதைகள்

(மிகுந்த மதிநுட்பம் உடையவர் அப்பாஜி. விஜய நகரப் பேரரசராகிய கிருஷ்ணதேவராயரிடம் அமைச்சராக இருந்த அவரின் அறிவுக் கூர்மையை விளக்கும் கதைகள் பல. அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம். —ஆசிரியர்.)

பெண்களின் பேச்சு!

ஒருநாள் கிருஷ்ண தேவராயர் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். வெய்யில் கடுமையாக இருந்ததால், ஒரு குளக்கரையில் உட்கார்ந்து களைப் பாறிக் கொண்டிருந்தார்.

அப்போது அவ்வழியாகச் சென்ற மூன்று பெண்கள் ஒரு பெரிய ஆலமரத்தைக் கண்டார்கள். அவர்களிலே ஒருத்தி, 'காலும் கழியும் ஒன்றடி' என்றாள். மற்றொருத்தி, 'இறகும் இலையும் ஒன்றடி' என்றாள். இன்னொருத்தி, 'வாயும் கனியும் ஒன்றடி' என்றாள்.

அவர்கள் எதைப் பற்றிக் கூறுகிறார்கள் என்பது கிருஷ்ண தேவராயருக்கு விளங்கவில்லை. அவர் அரண்மனைக்குத் திரும்பியதும், தம் சபையில் இருந்தவர்களிடம், அந்தப் பெண்கள் பேசிக் கொண்டதைக் கூறி, ''உங்களுக்கு அவர்கள் என்ன பேசினார்கள் என்பது புரிகிறதா?'' என்று கேட்டார். எவருமே பதில் கூறவில்லை.

மதிநுட்பம் மிக்க அப்பாஜி எழுந்தார்; பதில் கூறினார்:

''அந்த ஆலமரத்தில் ஒரு கிளி இருந்ததைப் பார்த்துத்தான் அவர்கள் அப்படிக் கூறியிருக்க வேண்டும். கிளியின் கால்களும் ஆலமரக் கிளையிலுள்ள கழிகளும் ஒன்று போல் இருந்ததால், 'காலும் கழியும் ஒன்றடி' என்று முதல் பெண் சொல்லியிருக்கிறாள். கிளியின் இறகும், ஆல இலையும் ஒரே நிறத்தில் இருந்ததால், 'இறகும் இலையும் ஒன்றடி' என்று இரண்டாவது பெண் கூறியிருக்கிறாள். கிளியின் வாய் ஆலம் பழம் போல் சிவப்பாயிருந்ததால், மூன்றாவது பெண் 'வாயும் பழமும் ஒன்றடி' என்று சொல்லியிருக்கிறாள்.'' அப்பாஜி சொன்னது முற்றிலும் சரி என்று கூறி அரசர் பாராட்டினார்.





எலுமிச்சம்பழ அளவு பொன்

கிருஷ்ண தேவராயருக்கு அவருடைய நாவிதர் வழக்கம்போல் அன்று காலையில் முகச் சவரம் செய்து கொண்டிருந்தார்.

அப்போது அரசர், 'நம் குடி மக்களெல்லாம் எப்படி இருக்கிறார்கள்?' என்று நாவிதரிடம் கேட்டார்.

''தங்கள் ஆட்சியில் எவருக்கும் எந்தக் குறையுமே இல்லை. ஒவ்வொருவரும் குறைந்தது ஓர் எலுமிச்சம்பழ அளவு பொன்னாவது வைத்திருக்கிறார்கள்'' என்றார்.

நாவிதர் சொன்னது, அப்போது அந்தப் பக்கமாக வந்த அப்பாஜியின் காதுகளில் விழுந்தது. உடனே, அவர் நாவிதர் கொண்டுவந்திருந்த பெட்டியைப் பார்த்தார். அதில் எலுமிச்சம்பழ அளவு பொன் இருந்ததைக் கண்டார் நாவிதருக்குத் தெரியாமல், அதை மெல்ல எடுத்து வைத்துக்கொண்டார்.

நாவிதர் சென்றபின், அப்பாஜி, அந்தப் பொன்னை அரசரிடம் கொடுத்து, ''நாளை நாவிதன் வரும்போது, 'குடிமக்கள் எப்படி இருக்கிறார்கள்?' என்று கேளுங்கள். என்ன பதில் சொல்லுகிறான், பாருங்கள்'' என்றார்.

மறுநாள் காலை நாவிதர் வந்ததும், ''நம் குடிமக்களெல்லாம் எப்படி இருக்கிறார்கள்?'' என்று அரசர் கேட்டார்.

''அதை ஏன் கேட்கிறீர்கள்? ஒரு எலுமிச்சம்பழ அளவு பொன்கூட இல்லாமல் எல்லோரும் துன்பப்படுகிறார்கள்.'' என்றார் நாவிதர்.

உடனே அரசர், நாவிதரைப் பார்த்து, ''உன் நிலையை வைத்தே ஊராரை மதிப்பிடுகிறாய். இப்படி உன்னைப் போலத்தான் இந்த உலகில் பலர் இருக்கிறார்கள்'' என்று கூறி, அப்பாஜி தம்மிடம் தந்த பொன்னை அவரிடமே திருப்பிக் கொடுத்தார்.

மூன்று சிலைகள்

விஜயநகர அரசருக்கு டில்லி பாதுஷாவிடமிருந்து மூன்று வெண்கலச் சிலைகள் வந்தன. மனித உருவத்தில் இருந்த அந்தச் சிலைகள் மூன்றும் ஒரே மாதிரியாக இருந்தன. எந்த வித்தியாசமும் தெரியவில்லை. சிலைகளுடன்



பாதுஷா ஒரு கடிதத்தையும் அனுப்பியிருந்தார்.

''சிலையாக இருக்கும் இந்த மூவரும் வெவ்வேறு வகையானவர்கள்; எப்படிப் பட்டவர்கள் என்பதைக் கண்டுபிடித்து, ஒவ்வொரு சிலையின் அடியிலும் எழுதித் திருப்பி அனுப்பி வையுங்கள்''

என்று அக்கடிதத்தில் இருந்தது.

ஒவ்வொருவராகச் சிலைகளைச் சோதித்துப் பார்த்தார்கள். 'வித்தியாசமே தெரியவில்லை' என்றார்கள். கடைசியில் அப்பாஜி, அச்சிலைகளை உற்றுப் பார்த்தார். ஒவ்வொரு பக்கமாகச் சோதித்துப் பார்த்தார். மூன்று சிலைகளின் காதுகளிலும் துவாரங்கள் இருப்பதைக் கண்டுகொண்டார்.

பிறகு ஒரு மெல்லிய குச்சியை முதற்சிலையின் காதுக்குள் அனுப்பினார். அது வாய் வழியாக வந்தது. இரண்டாவது சிலையின் ஒரு காதிலே விட்ட குச்சி, மற்றொரு காது வழியாக வெளியில் வந்தது. மூன்றாவது சிலையின் காதுக்குள் நுழைத்த குச்சி, எந்த வழியாகவும் வெளிவரவில்லை.

உடனே அப்பாஜி சொன்னார்:

''காதால் கேட்ட இரகசியத்தை வாயால் வெளிப்படுத்துபவன் மட்டமானவன்; இரகசியத்தைக் காதால் வாங்கி, மற்றொரு காதால் வெளியிடுபவன் இடைப்பட்டவன்; இரகசியத்தைக் காதால் கேட்டு யாரிடமும் கூறாமல் அடக்கி வைத்துக் கொள்பவன் உயர்ந்தவன்.''

அப்பாஜி சொன்னதை ஒவ்வொரு சிலையின் அடியிலும் எழுதி, டில்லி பாதுஷாவுக்கு மகிழ்ச்சியுடன் அனுப்பி வைத்தார் கிருஷ்ணதேவராயர். பாதுஷா அப்பாஜியின் அறிவுக் கூர்மையை அறிந்து மிகவும் பாராட்டினார்.

எதற்கு ஏற்றது?

பகல் நேரம். கிருஷ்ண தேவராயரும் அப்பாஜியும் மாறுவேடத்தில் நகரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார்கள்.

ஒரு வயல் ஓரமாக அவர்கள் சென்றபோது, அங்கே மூன்று பெண்கள் அந்த வயலைப் பார்த்தபடி பேசிக் கொண்டிருந்தார்கள்.

''இந்த நிலம் முகத்துக்கு ஆகும்'' என்றாள் முதல் பெண்.


''இல்லை, இல்லை; இது வாய்க்குத்தான் ஆகும்'' என்றாள் மற்றொரு பெண்.

''இரண்டுக்கும் ஆகாது. பிள்ளைக்குத்தான் ஆகும்'' என்று சொன்னாள் மூன்றாவது பெண்.

அவர்களின் பேச்சுக்கு என்ன பொருள் என்று அரசர் கேட்டார்.

''அரசே, இந்த நிலத்தில் முகத்தில் பூசும் மஞ்சள் பயிரிடலாம் என்பதைத்தான் 'முகத்துக்கு ஆகும்' என்று முதல் பெண் கூறியிருக்கிறாள். 'வாயில் போடும் வெற்றிலை பயிரிடலாம் என்பதைத்தான், 'வாய்க்கு ஆகும்' என்றாள் இரண்டாவது பெண். தென்னம்பிள்ளை வைக்கலாம் என்பதைத்தான், 'பிள்ளைக்கு ஆகும்' என்றாள் மூன்றாவது பெண்'' என்று அப்பாஜி விளக்கிக் கூறினார்.

உடனே அரசர், அந்தப் பெண்களிடம் சென்று, அவர்கள் கூறியதன் பொருள் என்ன என்று கேட்டார். அப்பாஜி சொன்னதையே அவர்களும் கூறக் கேட்டு அரசர் ஆச்சரியத்தில் மூழ்கினார்.





பாதுஷா யார்?

அமைச்சர் அப்பாஜியின் மதிநுட்பத்தைக் கேள்விப்பட்ட பாதுஷா, அவரை டில்லிக்கு அழைத்துத் தக்க முறையில் கௌரவிக்க விரும்பினார். கிருஷ்ணதேவ ராயருக்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்தார்.

கிருஷ்ணதேவ ராயர், ஒரு தேதியைக் குறிப்பிட்டு, அன்றைக்கு அப்பாஜி டில்லிக்கு வருவார் என்று பாதுஷாவுக்குத் தெரிவித்தார்.

அப்பாஜி தமது சபைக்கு வரும் நாளில், பாதுஷா ஒரு வேடிக்கை செய்தார். அரசாங்கக் காவலாளிகளில் ஒருவனுக்குப் பாதுஷா மாதிரி வேஷம் போட்டுச் சிம்மாசனத்தில் உட்கார்த்தி வைத்தார். பிறகு, பாதுஷா, ஓர் அமைச்சரைப் போல் உடை உடுத்திக் கொண்டு, மற்ற அமைச்சர்களும், சேனைத் தலைவர்களும் அமர்ந்திருந்த வரிசையில் உட்கார்ந்துகொண்டார்.

அப்பாஜி அரச சபைக்கு வந்ததும், சிம்மாசனத்தில் இருந்தவரைப் பார்த்தார். பிறகு வரிசையாக இருந்த அமைச்சர்களையும் சேனைத் தலைவர்களையும் உற்றுப் பார்த்தார். உண்மையான பாதுஷா யார் என்பதை எளிதிலே கண்டுபிடித்து, அவருக்கு வணக்கம் செலுத்தி, அவர்முன் கிருஷ்ண தேவ ராயர் கொடுத்து அனுப்பிய பரிசுகளையும் வைத்தார்.

பாதுஷாவுக்கு ஒரே ஆச்சரியம்!

''அப்பாஜி, நான்தான் பாதுஷா என்று எப்படிக் கண்டுபிடித்தீர்?'' என்று கேட்டார்.

''அரசே, நான் உள்ளே நுழைந்ததும் சிம்மாசனத்தில் இருப்பவரைப் பார்த்தேன். அவர் தங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். மற்றவர்களும் தங்கள் முகத்தையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். உடனே, சிம்மாசனத்தில் இருப்பவர் போலி பாதுஷா என்பதையும் தாங்கள் தான் உண்மையான பாதுஷா என்பதையும் தெரிந்து கொண்டேன்'' என்றார் அப்பாஜி.

அப்பாஜியின் பதிலைக் கேட்டு பாதுஷா பூரித்துப் போனார். அவரைத் தக்க முறையில் கௌரவித்து அனுப்பினார்.

தொகுத்தவர்: **நம்பி**

ந. பழநியப்பன் எழுதி வள்ளுவர்பண்ணை வெளியிட்டுள்ள 'இராயர் அப்பாஜி கதைகள்' என்ற புத்தகத்தில் காணப்படும் சில கதைகள் இங்கே சுருக்கித் தரப்பட்டுள்ளன.

கருணை விழிகள்



ஆர். பொன்னம்மாள்

(5)

மோகன் திடுக்கிட்ட அதே சமயத்தில் ராமுவின் அப்பாவும் ஆச்சரியத்திலே மூழ்கினர். என்ன கேட்பது, எப்படிக் கேட்பது என்றே தெரியாமல் திணறினர்.

''தம்பி...நீ....நீ... அன்னிக்கு பஸ்ஸிலே....''

''ஆமாம் சார், நானேதான். கல்யாணம் நல்லா நடந்ததா சார்?'' என்று விசாரித்தான்.

''உன் புண்ணியத்திலே நல்லா நடந்தது'' என்று கூறிய அவர், மனைவியின் பக்கம் திரும்பி, ''என்ன முழிக்கிறே, ஒண்ணும் புரியலையா? பஸ்ஸிலே பணத்தைப் பறி கொடுக்க இருந்தேன், ஒரு பையன் காப்பாத்தினான்னு சொன்னேனே! இன்னும் விளங்கலையா? அதாண்டி ஜெயந்தி கலியாணத்துக்குப் பண்டாபீசிலே நான் லோன் வாங்கின பணம்...'' என்று சொன்னதும்,

''ஓ! ஓ! அந்தப் பையனா இவன்! ஏண்டாப்பா, அந்தப் பெருமாள்தான் உன் ரூபத்திலே வந்து அடிக்கடி கஷ்ட நிவாரணம் பண்றாரே!'' என்று ராமுவின் தாயார் புலம்ப, ராமுவின் தந்தை, ''உஸ், பேசாமலிரு'' என்று அவளை அடக்கியபடி,

''என் பேர் சௌந்தரராஜன், ராமுவின் அப்பா. இவள் ராமுவின் அம்மா. பேரு கோமளா'' என்று அறிமுகப்படுத்திவிட்டு,

''ராமு எங்கே இருக்கான்?'' என்று கேட்டபடியே எழுந்து போய் சீராக உடையணிந்துகொண்டு வந்தார்.

மோகனுக்கும் இமா அதிர்ச்சி. ராமுவின் அப்பா தனக்கு முன்பே அறிமுகமானவராயிருப்பார் என்று அவன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அவன் போட்டு வைத்த பிளானில் எதிர்பாராத திருப்பம்.

நோட்டீஸ் போர்டுக்கு எதிரில் காத்திருக்கும் மாணவன் போல், தன் வாயிலிருந்து வரும் வார்த்தைக்காகக் காத்திருக்கும் ராமுவின் தாயைப் பார்த்தான்.

சாவகாசமாய் வந்து உட்கார்ந்த ராமுவின் தந்தை, ''அப்புறம் ராமுவைப் பற்றி ஒண்ணுமே சொல்லலியே?'' என்று ஊக்கப்படுத்தினர்.

''சார், முதலிலேயே ஒரு விண்ணப்பம். பர்ஸ் கிடைத்தவுடனே ஏதாவது உதவி செய்யணும்னு ஆசைப்பட்டீங்க இல்லையா?'' என்று கேட்க, அவர் சிரித்தபடி, ''ஆமாம். நன்றியைக் காட்ட ஏதாவது பதிலுக்கு செய்யணும்னு ஆசைப்பட்டேன். படிக்கிறியான்னுகூடக் கேட்டேனே!'' என்றார்.

''ஆமாம். அந்த உதவியை இப்ப நான் எப்படி வேணுமானாலும் கேட்கலாமில்லையா?''

''செய்யக் கூடியதாகக் கேட்டியானா சந்தோஷமாக இருக்கும்!''

இவர்கள் சம்பாஷணையில் குறுக்கே புகுந்தாள் கோமளா.

''முதலிலே ராமுவைப் பத்திக் கேளுங்களேன்!''

''சொல்றேம்மா... உங்க ஆவலும் அவசரமும் எனக்குப் புரியுது'' என்றவன், அவர் பக்கம் திரும்பி, ''உங்களாலே முடியக் கூடியதுதான்'' என்றான்.

''அப்பக் கேளு... கைகேயி வரம் கேட்டமாதிரி இல்லாமலிருந்தால் சரி'' என்றார் சௌந்தரராஜன்.

''முதலிலே நான் கேட்கிறதுக்கெல்லாம் பதில் சொல்லிக் கிட்டே வாங்க சார்! ராமு, வீட்டுக்கு வரப் பயப்படுகிறான். நீங்க அடிப்பீங்களோன்னு பயம். அவனைச் சும்மா குத்திக் காட்டறதில்லே... அடிக்கிறதில்லேன்னு வாக்குத் தரணும்.''

சௌந்தரராஜன் விரக்தியாகச் சிரித்தார்.

''அதெல்லாம் அடிக்கமாட்டாரப்பா. நான் பார்த்துக்கறேன். வேளா-வேளைக்குச் சாப்பிடாமே எங்கே என்ன அவஸ்தைப் படறானோ என் குழந்தை!'' — கோமளா மறுபடியும் புலம்ப ஆரம்பித்து விட்டாள்.

''அவன் செய்ததெல்லாம் சொன்னானா?'' ராமுவின் தந்தை விசாரித்தார்.

''ஏதோ தகாத சேர்க்கை சார்... நான் சின்னப் பையன். உங்களுக்குச் சொல்லக் கூடாது. இப்ப ராமு ரொம்ப மாறிட்டான். பார்த்தால் ஆச்சரியப் படுவீங்க.... அவன் எனக்கு நேத்து ராத்திரிவரை அட்ரஸை சொல்லவில்லை. இல்லேன்னா அவனுக்குத் தெரியாமலாவது இங்கே வந்திருப்பேன். அவன் வேலை செய்து சம்பாதிக்கிறானம்மா'' மளமளவென்று இருவரையும் மாறி மாறிப் பார்த்துப் பேசினான் மோகன்.

''ஐயோ, என் கண்மணி இந்த வயசிலே வேலை செய்கிறானா? என்ன வேலையப்பா? ராத்திரி எட்டடிச்சா தூக்கம் வந்துடுமே'' — பெற்றவளின் அன்பைப் பார்த்துப் பிரமித்திருந்தான் மோகன்.

''ஓர் அச்சகத்திலே அச்சுக் கோக்கற, எழுத்து அடுக்கிற வேலை. இப்போத்தான் கத்துக்கறான். இதுக்கே இப்படித் தவிக்கிறீங்களே! அவன் தற்கொலை செய்துக்கக் கடலிலே குதிச்சதைக் கேட்டால் எப்படித் துடிப்பீங்களோ!''

''என்ன! சமுத்திரத்திலே விழுந்தானா?... ஐயோ! உங்க மனசென்ன கல்லா... இப்படி இடிச்ச புளியாட்டம் இருக்கீங்களே! ஒரே பிள்ளையைப் பறிகொடுக்க இருந்தேனே! அம்மா பகவதி!'' பெரிதாக ஓலமிட்டாள் ராமுவின் தாய்.

''யாரப்பா காப்பாத்தினாங்க?'' ராமுவின் தந்தையும் அதிர்ந்து போயிருந்தார்.

''அன்னைக்கு உங்க கிட்டே ஜேபடி அடிக்கப் பார்த்துத் தப்பிச்சு ஓடினானே அவன்தான்!''

மோகனை அவர் ஒரு மாதிரியாகப் பார்த்தார். அவனை அவர் நம்பவில்லை என்பது தெரிந்தது. அந்தப் பார்வையிலே.

''ஜேம்ஸ்பாண்ட் படக் கதை சொல்றியா?'' என்று கேட்டார்.

''உண்மைச் சம்பவங்கள் சினிமாக் கதையைவிட த்ரில்லா இருக்கும் சார்! அவன் பேர் கபாலி. ஒரு நாள் பீச்சிலே தன் நண்பர்களைக் கூட்டிக்கிட்டு வந்து என்னைப் போட்டு அடி அடின்னு அடிச்சுட்டான். நல்ல காயம்! கொஞ்ச நாள் பொறுத்து ஒரு நாய் அவனைத் துரத்தும்போது, நான் காப்பாத்தினேன். அதிலேயிருந்து அவன் என் சிநேகிதனாயிட்டான்! ஒரு நாள் கூட அவன் என்னைப் பார்க்காமல் இருக்க மாட்டான். கெட்ட பழக்கத்தை யெல்லாம் விட்டுத் திருந்திட்டான். ஒரு நாள் நாங்க ரெண்டு

தமிழகத்துக்குப் பெருமை!



டிசம்பர் 83 கோகுலம் இதழில் 'நைனி ஏரியில் ஒரு ரோபாட்' என்ற கதை வெளிவந்திருக்கிறது. அக்கதையில் விவேக் என்னும் தமிழ் விஞ்ஞானி ரோபாட்டுகளைப் பற்றி ஆராய்ச்சி புரிகிறார். ஆனால், உண்மையிலேயே தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் பிட்ஸ்பர்க்கில் உள்ள பல்கலைக் கழகத்தில் ரோபாட்டுத் துறையின் இயக்குநராக உள்ளார்.

மனிதர்கள் தொழு நோயாலோ, எலும்புருக்கி நோயாலோ பீடிக்கப்பட்டுள்ளனரா என்பதைக் கண்டு பிடிக்க உதவும் கம்ப்யூட்டர்களை அமைப்பதில் இவர் வெற்றி கண்டுள்ளார். இதைப் பாராட்டும் வகையில் அண்மையில் பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் பெயர் என்ன தெரியுமா? **Dr. Dabbala Raj Reddy** என்பதே இவர் பெயர்! இவர் தமிழ் நாட்டில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய சகோதர சகோதரிகளின் எண்ணிக்கையோ பதினொன்கு! தம்முடைய தளராமுயற்சியால் முன்னுக்கு வந்தவர் டாக்டர் ரெட்டி.

நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்


பெரும் பீச்சிலே பேசிக்கிட்டிருக்கிறப்போ ராமு கடலிலே விழுவந்தான்.''

''என்ன! ராமு கடலிலே குதிச்சிட்டானா?'' என்று பதட்டத்துடன் கேட்டாள் ராமுவின் அம்மா.

''ஆமாம்மா! நல்லவேளை. கபாலி ஓடிப்போய்க் காப்பாத்திட்டான். எனக்கு நீந்தத் தெரியாது. வேணுமின்னு கத்திக் கூட்டம் சேர்த்திருப்பேன்.... அப்போ பீச்சிலே கூட்டம்கூட அவ்வளவா இல்லே... அதிலேயும் நாங்க இருந்த இடம் ஆல் இண்டியா ரேடியோவுக்குக் கொஞ்சம் தள்ளி..''

''ராமுவுக்கு ஒண்ணும் ஆபத்து ஏற்படவில்லையே! நீங்க நல்லா இருக்கணும்'' என்றாள் அம்மா.

மோகன் ராமுவின் அப்பாவைப் பார்த்து, ''பழக்கம்தான் மனுஷனை எப்படி மாத்துது பார்த்தீங்களா? ராமு குமாரா மார்க் வாங்கினுக்கூடத் தட்டிக் கொடுங்க... உதவாக்கரை உதவாக்கரைன்னு திட்டினால், நாம எதுக்கும் லாயக்கு இல்லையோன்னு தன்னம்பிக்கை இழந்து விடுவான். அவன் பெரிய கிரிக்கெட் பிளேயரா வருவான். ஊக்கம் கொடுத்து ஸ்போர்ட்ஸ் கிளப்பிலே சேருங்கோ. உலகம் பூரா விளையாடி கோல்ட் மெடல் வாங்கப் போறான், பாருங்கோ! மயிலுக்கு நீந்த வராது. 'மீன் தோகை விரிச்சு ஆடாது. அதுக்காக மயிலையோ, மீனையோ யாரும் இளப்பமாப் பேசறதில்லே! எல்லாருமே முதல் மாணவனா ஆக முடியாது. பழுதில்லாமப் படிச்சா, விட்டுடுங்கோ... நான் போன வருஷம் ராமுவோட படித்ததாலே அவனைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். 'ராமுவை



கிரிக்கெட்டிலே முன்னுக்கு வர உதவி பண்றேன். அவன் டியூஷன் பணத்தைச் செலவு பண்ணினதைக் குத்திக் காட்டி மனசைப் புண்படுத்த மாட்டேன்'னு வாக்குக்கொடுத்தாப் போதும் சார்... இதுதான் நான் கேட்ட வரம்.''

சௌந்தரராஜன் சிலையா யிருந்தார்.

''உங்கம்மா கொடுத்து வச்சவ. அவ வயத்திலே நீ மாணிக்கமாப் பிறந்திருக்கிறயப்பா... பிரகலாதன் மாதிரி என்ன விவேகமாப் பேசறே? இப்படி ஒரு பிள்ளை எங்களுக்குப் பிறக்கலையேன்னு இருக்கு'' — உணர்ச்சி வசப்பட்டுப் போனாள் கோமளா.

சௌந்தரராஜன் எழுந்து கொண்டார். ''மோகன், வா போவோம். போய் ராமுவை அழைச்சுக்கிட்டு வரலாம். என் மனசு எப்படி இருந்தாலும், உன்னைப் பார்த்து என்னை மாத்திக் கொண்டுட்டேன். ராமுவை ஒரு வார்த்தை சொல்றதில்லே, போதுமா?'' என்றவர் மனைவி பக்கம் திரும்பி,

''கோமளா, வயித்திலே பிறந்தாத்தான் பிள்ளையா? ராமுவை இன்னிக்கு உயிரோட பார்க்கறது இவனாலே! இவனும் நம்ம பிள்ளைதான்... நான் போய் ராமுவை மட்டுமில்லே; மோகனையும் அவன் பாட்டியையும் கூடவே அழைச்சு வரேன்.'' என்றார்

உடனே மோகன், ''மறிச்சுப் பேசறேன்னு நினைக்காதீங்க சார். உங்க அன்புக்கு ரொம்ப நன்றி. எங்க பாட்டியும் நானும் அங்கேயே இருந்துக்கறோம். அடிக்கடி நான் வந்து பார்க்கறேன் சார்... எங்க பாட்டி இந்த ஏற்பாட்டுக்கெல்லாம் ஒத்துக்க மாட்டாங்க சார்.''

''ஏம்பா?'' — ஆதங்கமாகக் கேட்டாள் கோமளா.

—''உதவி வேணுங்கிறபோது கட்டாயமா வரேன். இப்ப விட்டுடுங்கோ''

மோகனைப் பார்த்து ராமுவின் பெற்றோர் பிரமித்தனர்.

✻ ✻ ✻

ராமு, மோகனையும் பாட்டியையும் விட்டுப் பிரிய மனமில்லாமல் பிரிந்தாலும், தன் தந்தையிடம் சொல்லி மோகனுக்கு ரீச்சில் கடை போடப் பணம் வாங்கித் தந்தான். மோகன் அதை முதலில் மறுத்தான். ஆனால், ராமு விடவில்லை.

''ஏன், உனக்கு மட்டும்தான் பிறத்தியாருக்கு உதவி செய்து அவங்க முகம் மலரும்போது சந்தோஷம் உண்டா

எழுத்து மாறினால்..

மகிமை நாதன்

1. மூன்று எழுத்து அழகாகப்பாடுமாம்; முதல் எழுத்தை மாற்றினால் நமது தேசியப் பறவையாம்! அது என்ன?
2. நான்கு எழுத்து மலர்ச்செடிகளில் காணலாம்; முதல் எழுத்தை மாற்றினால் கடித்து ருசிக்கலாம். அது என்ன?
3. நான்கு எழுத்தைச் செய்தால் அடி படலாம்; முதல் எழுத்தை மாற்றினால் கடிபடலாம். அது என்ன?

விடைகள்:—

1. குயில் — மயில்,
2. அரும்பு — கரும்பு,
3. குறும்பு — எறும்பு

கணுமோ? இதுகூட ஒரு வகை சுயநலம் தான்! நீயாக் கேட்டால் யாசகம். நாங்களாத் தருவதை மறுத்தால் அது நட்பை அவமதிப்பதாகும். நான் உங்க வீட்டிலே வித்தியாசம் பாராட்டாமல் சாப்பிடலையா? இதுகூட நீ கொடுத்த டிரஸ்தான். ஓசியா வாங்கிக்க வேண்டாம். கடனா வாங்கிக்க. லாபம் வந்ததும் திருப்பிக் கொடு! என்ன பாட்டி?'' என்றதும் பாட்டிக்கும் மோகனுக்கும் பதில் பேச வழியில்லாமல் போய் விட்டது.

கடை ஆரம்பிக்க எல்லா உதவிகளையும் செய்தார் சௌந்தரராஜன்.

ராமுவும் மோகன் சொன்னபடியே படித்தான். முழு ஆண்டுத் தேர்வும் நெருங்கிக் கொண்டிருந்தது.

''பாட்டி,வடையெல்லாம் காலியா?'' என்று விசாரித்தான் கபாலி.

''ஆமா, எல்லாம் காலியாயிடுச்சு'' பாட்டி பாத்திரங்களை அடுக்க ஆரம்பித்தாள்.

''இன்னும் கொஞ்சம் போட்டிருக்கணும்... மணி எட்டே. முக்கால்தான் ஆகுது. கொஞ்சம் பஜ்ஜி போடுங்களேன்...''

''வேண்டாம் கபாலி. பாட்டி ரொம்பக் களைச்சுப் போயிருக்காங்க... வடை ஒண்ணேகால்படி போட்டாங்க. வர்ரவங்களெல்லாம் வடைதான் கேட்கறாங்க! அதனாலே சீக்கிரம் தீர்ந்துடுச்சு'' என்றான் மோகன்.

''அதிக ஆசை வேண்டாண்டா கபாலி! போட்டது செலவானால் சரி, நீயும்தான் பாக்டரியிலே உழைச்சுட்டு இங்கேயும் வந்து எத்தனை ஒத்தாசை செய்யறே! இன்னும் போய்க் குளிக்கணும், சாப்பிடணும்....''

''சரி பாட்டி, உங்களை ஒரு ஆட்டோவிலே ஏத்தி அனுப்பறோம். நானும் கபாலியும் கொஞ்ச நேரம் இங்கே பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்திடறோம்'' என்றான் மோகன்.

''ரொம்ப நேரம் இருந்திடாதீங்க சீக்கிரம் வந்திடுங்க. நான் போறேன்.'' என்றாள் பாட்டி.

பாட்டியையும், அவளுக்கு உதவிக்குச் சேர்த்திருந்த பெண்மணியையும் சாமான்களோடு ஆட்டோவில் ஏற்றி அனுப்பிவிட்டு மணலில் வந்து உட்கார்ந்து கொண்டனர் மோகனும் கபாலியும்.

''இன்னிக்கு ராமுவைக் காணுமே? பரீட்சைக்குப் படிக்கிறான் போல இருக்கு'' மோகன் மௌனத்தைக் கலைத்தான்.

கபாலி பேசாமல் இருக்கவும்,

''ஏன் ஒண்ணும் பேச மாட்டேங்கறே? பாட்டியை பஜ்ஜி போட வேண்டாம்னு சொன்னேனே, அதுக்குக் கோபமா? பாட்டிக்கு இன்னிக்கு வேலை ரொம்ப அதிகம்... அதான்...'' மோகன் இழுத்தான்.

''சேச்சே, என்னை என்ன அப்படி நினைச்சுட்டே! பாட்டியம்மா கஷ்டப்படணும்னு நினைப்பேனா? நிறைய வியாபாரம் பண்ணி சீக்கிரம் உனக்குப் பணம் சேரணும்கிற ஆசையிலேதான் சொன்னேன். அவ்வளவுதான்! நான் எடுத்துத் தந்த டிரஸ்ஸைத்தான் ராமுவுக்குத் தானம் பண்ணிட்டே! உன்னை நல்ல டிரஸ்லே பார்க்க மாட்டோமான்னு சபலம்...'' என்று கபாலி சொன்னதைக் கேட்ட மோகன் கடகடவென்று சிரித்தான்.

''நீ தந்த சட்டையை நான் ராமுவுக்குக் கொடுத்தது உனக்குப் பிடிக்கலேன்னு எனக்கு எப்பவோ தெரியும். நானுக் கேட்டா அதெல்லாம்

இவர்கள் யார்?

(1) சென்னை நகரின் முதல் மேயர் யார்?

(2) இந்தியாவிலேயே சென்னையில் நண்பர்கள் சிலரின் உதவியுடன் வானொலி நிலையம் அமைத்தவர் யார்?

(3) 'சென்னை மாகாணம்' எனப் பெயர் இருந்தபோது கல்வி அமைச்சராக இருந்த ஒருவர், கல்வி அமைச்சர் என்ற முறையில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராக இருந்தார். அப்போது அவரது தந்தையார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராக இருந்தார். இப்படி ஒரே சமயத்தில் தந்தையும் மகனும் இணை வேந்தர்களாக இருந்தார்கள். அத்தகைய பெருமையைப் பெற்ற மகன் யார்?

(4) சென்னை மாகாண அறநிலைய அமைச்சராக இருந்த ஒருவர், தனியார் வசம் இருந்த திருப்பதி தேவஸ்தானத்தை அரசாங்கமே ஏற்று நடத்த ஒரு மசோதா கொண்டு வந்து நிறைவேற்றினார். அவர் யார்?

(5) சென்னையில் உள்ள அண்ணாமலை மன்றத்தைவிட அளவில் பெரிய தமிழிசை மண்டபத்தை மதுரையில் அமைத்தவர் யார்?

(6) 'தமிழிசைக் காவலர்' என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர் யார்?

இத்தனை சிறப்புக்களையும் பெற்றவர் ஒருவரேதான்! ஆம், மே மாதம் 12ஆம் தேதி அமரரான பத்மபூஷண் செட்டி நாட்டரசர் டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களேதான்!



இல்லேன்னு மறுப்பாய்! புகையிறது என்றைக்காவது எரியத்தான் செய்யும்! தானா வெளிவரட்டுமின்னு இருந்தேன்! நிஜமாகவே நீ அதுக்குச் சந்தோஷப்படணும்...!

''என்கிட்டே வேறே நல்ல டிரஸ்ஸே கிடையாது. அதனாலே நீ எனக்கு அன்பளிப்பாத் தந்ததை ராமுவுக்குக் கொடுத்தேன். ஒருத்தருக்கு ஒரு சாமானை அன்பளிப்பாத் தரோம். அது அவங்களுக்குச் சொந்தமில்லையா? அதை அவங்க இஷ்டப்படி அனுபவிக்க உரிமை யில்லேன்னா அதுக்குப் பேர் அன்பளிப்பா?''

''அப்படிச் சொல்லாதே. ஆசையாக் கொடுத்ததை அவங்களே அனுபவிச்சா ஆனந்தமா யிருக்கும்...அதை விட்டு...''

''சரி... கல்யாண வீட்டிலே ஒருவர் மொய் எழுதறார்... அவங்க பின்னாலேயே போய், அதை அவங்க எப்படி உபயோகிக்கறாங்கன்னு பார்ப்பாரா?''

''மொய் எழுதறதும் இதுவும் ஒண்ணாயிடுமா? அவ்வளவுதான் நீ என்னைப் புரிஞ்சுக்கிட்ட லட்சணம்... என்ன இருந்தாலும் உனக்கு அந்த ராமு மேல் தான் அதிகப் பிரியம்... சொல்லிட்டுப் போயேன்.. நான் திருட்டுப் பய... கீழ் ஜாதி....''

மோகன் விரைந்து கபாலியின் வாயைப் பொத்தினான்.

''என்ன பேச்சுப் பேசிட்டே கபாலி! உன்னை விட்டு இந்தத் தாழ்வு மனப்பான்மை போகவே போகாதா? ஜாதி வித்தியாசம் என் மனசிலே என்னிக்கும் தோணினதே யில்லை... அப்படி இருந்தால் உன் கிட்டத் தொடர்பு வைச்சிட்டிருக்கவே மாட்டேன்! நீ ராமபத்ரன் மகளையும், ராமுவையும் காப்பாத்தின அன்னிக்கே செய்கையாலே உயர்ந்துட்டே... இனிமேல் நீ திருட்டைப் பத்திப் பேசறதா இருந்தால், நான் உன்னைச் சந்திக்கவே மாட்டேன். அந்தச் சட்டைக்கான ரூபாயை நான் உனக்குத் தந்திடறேன். அதுக்கேன் இத்தனை மனஸ்தாபம்!'' மோகன் வருத்தமாகப் பேசவும், தலைகுனிந்த கபாலி, குரல் கம்ம,

'அப்படி யெல்லாம் செஞ்சு என்னைச் சித்திரவதை செய்திடாதே மோகன்! என்ன இருந்தாலும் நான் படிக்காத முட்டாள்தானே! கன்னா பின்னான்னு பேசிட்டேன்'' என்றான்.

''பார்த்தியா! மறுபடி ஆரம்பிச்சுட்டியே. இப்போ உனக்குப் பெருக்கல்வரை வந்தாச்சு. அடுத்தாற்போல வகுத்தல் ஆரம்பிக்கலாம். பன்னிரண்டாம் வாய்ப்பாட்டை மனப்பாடம் பண்ணிட்டியா?''

''பாதி வந்திருக்கு...''

''அவசரமில்லே. மெதுவாப் படிச்சாலும் நல்லாப் படிச்சுடணும்... எனக்குத் தெரிஞ்சவரை சொல்லிக் கொடுத்திடறேன். அப்புறம் உனக்கு வயசாச்சு பாரு... நேரே எட்டாவது எழுதிடலாம்... இப்பத்தான் அஞ்சல் வழிக் கல்வி வசதி இருக்கே! நல்ல இடமாப் பார்த்து இரண்டு பேரும் சேர்ந்துக்கலாம். இப்ப உன் படிப்பு நாலாவது, அஞ்சாவது வரை வந்தாச்சு. இன்னும் ஏன் படிக்காதவன்னு குறைச்சிக்கறே!... ஆமாம், உன் முதலாளி மகனுக்கு எப்படி இருக்காம்?''

ஆறுதல் சொல்லிக் கொண்டே வந்த மோகன், பேச்சை வேறு திசைக்குத் திருப்பினான்.

''பார்த்தியா... சொல்ல மறந்துட்டேனே! பம்பாயிலேயிருந்து நேத்து ராத்திரி கூட்டிட்டு வந்துட்டாங்க... பையன் ரொம்ப மோசமா இருக்கான். தொழிலாளர்கள் யாரும் இப்பப் பார்க்க வரவேண்டாம்னு சொல்லிட்டாங்க. இல்லேன்னா இன்னிக்கு எல்லாரும் போறதா இருந்தோம்....''

''ஒரு மாசம் ஆயிடுச்சில்லே? புண்ணெல்லாம் ஆறிட்டுதா?''

''மானேஜர் பார்த்துட்டு வந்தார். பையன் எதுவும் பேச மாட்டேங்கிறானாம்... ரொம்ப பயங்கரம்! அவனுடைய இரண்டு கண் இருக்கிற இடத்திலே கறுப்பா குழி விழுந்து... பாவம்.... அம்மாதான் ரொம்ப மெலிஞ்சுட்டாங்களாம்... தந்தி வந்தன்னிக்கு என்ன அமர்க்களம் தெரியுமா? 'பாபு, பாபு'ன்னு அந்த அம்மா அலறித் துடிச்சு மயக்கமாயிட்டாங்களாம்!''

(தொடரும்)



டாக்டரின் பதில்

நட்டுவனார்: டாக்டர் சார், என் பல் ஒண்ணு ஆடிக்கிட்டே இருக்கு.

பல் டாக்டர்: கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்.

- அன்பிற்கினியவன்



ஒலிம்பிக் விளையாட்டு பயிற்சி அளிக்கும்
ஜிம் ஓ'டோஹர்த்தி கூறுகிறார்:

"காம்ப்ளான்® ஒண்ணுதான் வலுவையும் தெம்பையும் உருவாக்குகிறது."

ஒலிம்பிக் வீரர் ஜிம்ஓ'டோஹர்த்தி, இந்தியா உள்பட உலகம் முழுவதிலுமுள்ள இளம் விளையாட்டு வீரர்களுக்கு கடினமான போட்டிகளுக்காக பயிற்சி அளித்துள்ளார். 'பிறக்கும்போதே சாம்பியன்களாக பிறப்பதில்லை அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்'. என்பதை அவர் நம்புகிறார். ஒருவரை வெற்றியாளராக்குவது கட்டுப்பாடான சக்தி—<u>மற்றும்</u> உடல் சக்தி.

"நீச்சல் வீரர்கள், ஓட்டம் மற்றும் களவிளையாட்டு வீரர்கள், குறிப்பாக வளரும் குழந்தைகளுக்கு இதை சிபாரிசு செய்கிறேன்" என்கிறார் ஜிம் ஓ'டோஹர்த்தி. ஒரு பரிபூரண உணவாகும் காம்பளான்—எளிதில் ஜீரணிக்கவல்லது. தெம்பு அபிவிருத்தி செய்யும் ஆரோக்கிய வளர்ச்சிக்கான 23 மூலதார ஊட்டச்சத்துக்களுடன் கூடியது."

ஜிம் ஓ' டோஹர்த்தி கூறுவதை எடுத்துக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான முழுமையான வளர்ச்சிக்கு உங்கள் குழந்தைக்கு அன்றாடம் வழங்குங்கள் காம்ப்ளான். குழந்தைகள் விரும்பிடும் இனிய சுவைகளில் கிடைக்கிறது காம்ப்ளான்.



காம்ப்ளான்®

-திட்டமிட்ட பரிபூரண உணவு

GLC.9-2012 TAM



மாவட்ட வினா-விடை

கேள்வி கேட்பவர்: **சிற்பி சோமு**
பங்கு கொள்வோர்: **பி. ரவி**
எஸ். உஷாராணி, பி. ஹேமா.

சிற்பி சோமு: சென்ற இரண்டு மாதங்களில் இராமநாதபுரம், செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள சிறப்பு அம்சங்களைத் தெரிந்துகொண்டோம். இப்போது நமது புதுக்கோட்டை மாவட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்வோமா? முதலில், இம் மாவட்டம் புதிதாக உருவாக்கப் பட்டது எப்போது என்று தெரியுமா?

ஹேமா: ஒரு பொங்கல் திருநாளில்—அதாவது 1974 ஜனவரி மாதம், 14ம் நாள்.

சிற்பி: அடடே, ஹேமா தேதியைக் கூடச் சரியாகச் சொல்கிறாளே! நமது மாவட்டம் முன்பு சுதேச சமஸ்தானமாக இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது எவ்வாறு அழைக்கப்பட்டது?

உஷா: 'தொண்டைமான் புதுக்கோட்டை' என்று அழைப்பார்களாம்.

சிற்பி: ஆம். சமஸ்தானத்தை அரசாண்ட அரசர்களின் பெயர்களோடு 'தொண்டைமான்' என்ற பட்டப் பெயர் இருந்ததால் அவ்வாறு அழைத்தார்கள். நம் தேசம் விடுதலை பெற்றதும் அப்போது ஆட்சி புரிந்து வந்த இராஜகோபாலத் தொண்டைமான் என்பவர், சமஸ்தானத்தை இந்திய அரசிடம் ஒப்படைத்து விட்டார். உடனே அது திருச்சி மாவட்டத்துடன் இணைக்கப் பட்டது. பிறகுதான் ஹேமா சொன்னது போல் 1974ல் புதுக்கோட்டை மாவட்டமாகியது. சரி, இம்மாவட்டத்தின் தலைநகராகிய புதுக்கோட்டையின் மக்கள் தொகை எவ்வளவு என்று தெரியுமா?

ரவி: ஒரு லட்சம் இருக்குமா?

சிற்பி: கிட்டத்தட்ட ஒரு லட்சம் தான். சமஸ்தானமாக இருந்த போது புதுக்கோட்டை நகரத் தெருக்களையெல்லாம் திட்டமிட்டு மிக அழகாக அமைத்தார் ஒரு திவான். அவர் பெயர் தெரியுமா?

ஹேமா: திவான் சேஷய்யா சாஸ்திரி.

சிற்பி: சரியாய்ச் சொன்னாய். அவர் காலத்தில்தான் நமக்குக் குடிநீர்ப் பஞ்சம் வராதபடி ஒரு குட்டிச் சமுத்திரம் போன்ற புதுக்குளம் அமைக்கப்பெற்றது. விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டவரும் காமராஜரின் அரசியல் குருவாக விளங்கியவருமானஒருவர் நமது மாவட்டத்தில் பிறந்து, நமக்கெல்லாம் பெருமை தேடித் தந்திருக்கிறார். அவர் யார்? அவர் பிறந்த ஊர் எது?

உஷா: ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள். திருமயம் அவர் பிறந்த ஊர்.

சிற்பி: சரியான விடை. திருமயத்திற்கு உங்களில் யாராவது சென்றிருக்கிறீர்களா? அந்த ஊரின் சிறப்புக்கள் என்ன, என்ன?

ரவி: சென்ற வைகுண்ட ஏகாதசிக்கு அங்கே போயிருந்தேன். திருமயம் கோட்டை மிகப் பிரசித்தி பெற்றது. இங்கு மலையின் அடிவாரத்தில் மிகப் பெரிய சிவாலயம் ஒன்றும் விஷ்ணு ஆலயம் ஒன்றும் உள்ளன. இரண்டு கோயில்களுக்கும் ஒரே நுழைவாயில்!

சிற்பி: சபாஷ்! நன்றாக அறிந்து வைத்திருக்கிறாயே! நமது மாவட்டத்தில் மிகவும் புகழ் பெற்ற சிவாலயம் ஒன்று இருக்கிறது. எங்கே என்று தெரியுமா?

ஹேமா: ஆவுடையார் கோவிலில்.

சிற்பி: ஆவுடையார் கோவிலுக்குத் திருப்பெருந்துறை என்ற பெயரும்

உண்டு. இங்குள்ள சிவாலயத்தைக் கட்டியவர் யார்?

உஷா: மாணிக்கவாசகர்.

சிற்பி: ஆம். மாணிக்கவாசகர் பாண்டி நாட்டில் அமைச்சராக இருந்தார். மாணிக்க வாசகர் கட்டிய கோவில் மற்றக் கோவில்களிலிருந்து வேறு பட்டது. எப்படி என்று தெரியுமா?

மூவரும்: (மௌனம்)

சிற்பி: நானே சொல்லிவிடுகிறேன். அந்தக் கோயிலின் உள்ளே மேளம் வாசிக்க மாட்டார்கள். கோவிலுக்குள் சுவாமியும் இல்லை; அம்மனும் இல்லை; நந்தியும் இல்லை; கொடி மரமும் இல்லை. மாணிக்கவாசகர் விக்கிரகத்தைத்தான் விழாக் காலங்களில் ஊர்வலமாக எடுத்து வருகின்றனர். சிற்பக்கலையில் மிகவும் புகழ் பெற்றது இந்தக் கோவில். இந்த மாவட்டத்தில் உள்ள குடுமியான் மலை போயிருக்கிறீர்களா? அங்கே என்ன சிறப்பு?

ஹேமா: நான் போயிருக்கிறேன். அங்கேயுள்ள சிவன் கோயிலில் ஒரே கல்லில் செய்யப்பட்ட 14 தூண்களில் எதைத் தட்டினாலும் ஒலி வருகிறது. ஒவ்வொரு தூணிலும் வெவ்வேறு ஒலி எழும்புகிறது.

சிற்பி: பேஷ். நன்றாகச் சொன்னாய். குடுமியான் மலையில் ஒரு பண்ணை இருக்கிறதே. அதன் பெயர் தெரியுமா?

ஹேமா: குடுமியான்மலை அறிஞர் அண்ணா விதைப் பண்ணை.

சிற்பி: சரியாகச் சொன்னாய். இப்பண்ணையில் விளையும் காய்கறிகள் பல மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன.. நமது மாவட்டத்திற்குப் பெருமை தரும் சித்தன்னவாசல்...

ரவி: சித்தன்னவாசலுக்கு என் பள்ளி மாணவர்களுடன் நான் போயிருக்கிறேன். அங்குள்ள ஓவியங்கள் ஆஹா! எவ்வளவு அழகாக இருக்கின்றன!

சிற்பி: ஆமாம். அங்குள்ள மகாதேவன் ஓவியம், அரசன்–அரசி ஓவியம், நடன மங்கை ஓவியம் எல்லாம் கண்ணுக்கு விருந்தாக இருக்கின்றன. அங்கேயுள்ள குகைக்கோவில் மழமழப்பாக இருக்கும் கல் படுக்கைகள் எல்லாமே அவசியம் பார்க்க வேண்டியவை. இந்தப் புதுக்கோட்டை நகருக்குள்ளே இருக்கும் திருக்கோகர்ணம் கோயிலை எல்லாரும் பார்த்திருப்பீர்கள்.

மூவரும்: ஓ! பார்த்திருக்கிறோம்.

சிற்பி: அங்குள்ள சுவாமி பெயர், அம்மன் பெயர் என்ன?

உஷா: கோகர்ணேஸ்வரர், பிரகதாம்பாள்.

சிற்பி: ஆம். மன்னர் காலத்தில் இவை அவர்களின் இஷ்ட தெய்வங்களாக விளங்கின. இந்த ஆலயம் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தை நினைவுபடுத்தும். இந்த அம்மனின் சிறப்பை விளக்க அம்மன் காசு வெளியிடப்பட்டது.

ஹேமா: எங்கள் வீட்டில்கூட அம்மன் காசுகள் இருக்கின்றன.

சிற்பி: ஓர் அம்மன் காசின் மதிப்பு என்ன தெரியுமா?

ரவி: என் தாயார் சொல்லியிருக்கிறார். காலணாவுக்கு ஐந்து அம்மன் காசுகள் கிடைக்குமாம்!

சிற்பி: ஆம். ஒரு ரூபாய்க்கு 64 காலணா. ஒரு காலணாவுக்கு 5 அம்மன் காசு. அப்படியானால் ஒரு ரூபாய்க்கு...

உஷா: 320 அம்மன் காசுகள்.

சிற்பி: பேஷ், கணக்கிலே உஷா புலிதான்! இப்போது தமிழக அமைச்சரவையில் இம்மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் அமைச்சர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பெயர்கள் தெரியுமா?

உஷா: அறநிலையத் துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்கள், இன்னொருவர்....

ஹேமா: கூட்டுறவுத் துறை அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள்.

• எஸ்.உஷாராணி



• பி.ஹேமா



• பி.ரவி



சிற்பி: ஒரு கேள்விக்கு இருவரும் சேர்ந்து சரியான பதில் கூறி விட்டீர்கள். நமது மாவட்டத்தில் பிறந்த ஒருவர் 'கஞ்சிரா' என்ற புதிய வாத்தியத்தைக் கண்டுபிடித்துப் புகழ் பெற்றார். அவர் பெயர் தெரியுமா?

ரவி: ஓ! அமரர் தெட்சிணாமூர்த்தி பிள்ளை.

சிற்பி: சபாஷ். சரியான விடை. அக்காலத்தில் நடனக் கலையில் சிறந்து விளங்கிய சிவராம பிள்ளை என்பவரின் மகள் இன்று 'சாயி மாதா' என்ற சிறப்புப் பெயர் பெற்று முதல் பெண் மடாதிபதியாக விளங்குகிறார். அவர் யார் தெரியுமா?

ஹேமா: சிவபிருந்தா தேவி.

சிற்பி: சபாஷ். புதுக்கோட்டையில் புவனேஸ்வரி என்றொரு ஆலயம் இருக்கிறதே, அதன் சிறப்பு என்ன?

ரவி: அங்கு ஆண்டு தோறும் உலக நலத்துக்காக யாகம் வளர்த்துப் பூஜைகள் நடத்துகிறார்கள்.

சிற்பி: உம், சரியாய்ச் சொன்னாய். ஞானபீடப் பரிசு பெற்ற புகழ் மிக்க ஓர் எழுத்தாளர் இம்மாவட்டத்தில் உள்ள பெருங்களூரில் பிறந்தவர். அவர் யார்?

உஷா: அகிலன் அவர்கள்.

சிற்பி: சரி. இக்காலத்துக் குழந்தைப் பத்திரிகைகளுக்கெல்லாம் வழிகாட்டி போல் இராயவரம் என்ற ஊரிலிருந்து ஒரு பத்திரிகை வெளிவந்தது. அதன் பெயர் தெரியுமா?

ஹேமா: பாலர் மலர்.

சிற்பி: விடை தவறு. 'பாலர் மலர்' புதுக்கோட்டையிலிருந்து 1944ல் வ. சுப. நடேசன் அவர்களால் வெளியிடப்பட்டது. அதற்கு இரு ஆண்டுகளுக்கு முன்பே 'பாப்பா மலர்' என்ற பெயரில் முத்து நாராயணன் என்பவர் காலணா விலையில் ஒரு பத்திரிகையை இராயவரத்திலிருந்து வெளியிட்டார். அதே இராயவரத்தைச் சேர்ந்தவர்தான் வ. சுப. நடேசனும். 'டமாரம்', 'சங்கு' என்ற பத்திரிகைகளையும் அவரே வெளியிட்டார். பாலர் மலர் ஓரணா, 'டமாரம்' அரையணா, 'சங்கு' காலணா. குழந்தைகளுக்காக முதல் முதலாக வெளிவந்த வாரப் பத்திரிகையை வெளியிட்டவரும் ராயவரத்தில் பிறந்தவர்தான். அவர் பெயரும், அந்தப் பத்திரிகையின் பெயரும் தெரியுமா?

ரவி: வை. கோவிந்தன் என்பவர் நடத்திய 'அணில்' பத்திரிகை. தமிழ்வாணன் அதன் ஆசிரியராயிருந்தார்.

சிற்பி: அடடே, நன்கு தெரிந்து வைத்திருக்கிறாயே! இன்னும் இராயவரத்திலிருந்து வெளிவந்த 'பாப்பா' புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த 'டிங் டாங்' பத்திரிகைகளும் உங்களைப் போன்ற சிறுவர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டி வந்தன... சரி, நமது மாவட்டத்தில் உள்ள மேலைச் சிவபுரியில் பிறந்த ஒருவர், மதுரை-காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தராக விளங்கினாரே! அவர் யாரெனத் தெரியுமா?

ஹேமா: டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள்.

சிற்பி: சபாஷ். சரியான விடை. நமது மாவட்டத்தில் புகழ் பெற்று விளங்கும் தொழிற்சாலைகள் சிலவற்றின் பெயர்களைக் கூற முடியுமா?

ரவி: டி. வி. எஸ்., சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ், காவேரி மில் நூற்பாலை, புதுக்கோட்டை டெக்ஸ்டைல்ஸ், நாடியம்மன் டெக்ஸ்டைல்ஸ், கூட்டுறவு அச்சகம், மீனாட்சி ஸ்குரூ தொழிற்கூடம்.

சிற்பி: இவை தவிர, காகித ஆலை ஒன்றும் தொடங்கப் பெற்றிருக்கிறதே...

உஷா: ஆம். 'நிஜாம் பேப்பர்ஸ்' பூலாங்குறிச்சி என்ற ஊரில் இருக்கிறது.

சிற்பி: ஆமாம். கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடன் சேர்ந்து, 'கல்கி' பத்திரிகையைத் தோற்றுவித்த டி. சதாசிவம், குன்றக்குடி அடிகளார், குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா — இம்மூவரும் படித்த பள்ளிக்கூடம் ஒன்று இராமச்சந்திரபுரம் என்ற ஊரில் இருக்கிறது. அதன் பெயர் தெரியுமா?

ஹேமா: சமீபத்தில் ஒரு புத்தகத்தில் குன்றக்குடி அடிகளார் படித்த அந்தப் பள்ளிக்கூடத்தைப் பற்றிப் படித்தேன். அதன் பெயர் ஸ்ரீ பிரஹதீஸ்வரர் உயர்நிலைப் பள்ளி.

சிற்பி: இல்லை, இல்லை. அதன் பெயர் ஸ்ரீ பூமீஸ்வர சுவாமி உயர்நிலைப் பள்ளி. மகாத்மா காந்திகூட அந்தப் பள்ளிக்கு வருகை தந்திருக்கிறார்!





மான்களைப் பிடியுங்கள்

1. தண்ணீரால் சூழப்பட்ட மான் எது?
2. ஔவைக்கு நெல்லிக் கனி அளித்த மான் எந்த மான்?
3. சீதை விரும்பிய மான் எது!
4. இலங்கையை எரித்த மான்?
5. அதிகாரம் செய்யும் மான்?

விடை: (1) அந்தமான் (2) அதிகமான் (3) பொன் மான் (4) அனுமான் (5) எஜமான்.

—எம். எஸ். கோமதி (37)
குமாரபுரம்

மூன்றெழுத்து

அம்மா என்பதும்
அப்பா என்பதும்

அண்ணு எப்பதும்
தம்பி என்பதும்

அக்கா என்பதும்
தங்கை என்பதும்

தாத்தா என்பதும்
பாட்டி என்பதும்

பேரன் என்பதும்
பேத்தி என்பதும்

ஒருவருக்கொருவர் உறவாகும் — அந்த
உறவில் இருப்பதோ மூன்றெழுத்து!

—சி. எம். இரவி ராஜு (3958)
பெரிய காஞ்சிபுரம்



மேலே படிக்கிறான்

"உங்க பையன் என்ன செய்துக்கிட்டிருக்கிறான்?"

"மேலே படிச்சுக்கிட்டிருக்கிறான்."

"ஓ, டாக்டருக்கா? என்ஜினீயருக்கா?"

"அட நீங்க ஒண்ணு. அவன் மேலே, மாடியிலே ஏதோ கதைப்புத்தகம் படிக்கிறான்."

—க. ஆனந்தவேல் (2819)
இலவம்பேடு

உலகது அட்டையில்



அதிசயப் பெண்மணி

ஹெலன் கெல்லர் என்ற அமெரிக்கப் பெண்மணியின் பெயரை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த அம்மையார் பிறந்த பத்தொன்பதாவது மாதத்தில் திடீரெனக் காய்ச்சல் கண்டது.

டாக்டர்களிடம் காட்டினார்கள். 'குழந்தை பிழைக்காது' என்று டாக்டர்கள் கைவிட்டு விட்டனர். ஆனாலும், எமன் ஏமாந்து போனான்! குழந்தை பிழைத்துக்கொண்டு விட்டது. பெற்றோர் பெரு மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. காரணம், அந்தப் பொல்லாத நோய், போகும்போது குழந்தையின் பார்க்கும் சக்தி, கேட்கும் சக்தி, பேசும் சக்தி ஆகியவற்றையும் கூடவே கொண்டு போய்விட்டது!

ஒன்பது வயது வரைதான் அவர் ஊமையாக இருந்தார். அப்புறம் பேசும் சக்தியைப் பெற்று விட்டார். ஆயினும் பார்க்கும் சக்தியையோ கேட்கும் சக்தியையோ அவர் கடைசி காலம்வரை பெறவில்லை. அதனால் என்ன? கண்ணும் காதும் நன்றாக இருப்பவர்களைக் காட்டிலும் அவர் பல வழிகளில் மிஞ்சி விட்டார்!

அவர் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறார்! நூற்றுக் கணக்கான புத்தகங்களைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்; ஏழு புத்தகங்களை அவரே எழுதியிருக்கிறார்! திரைப் படத்திலும் நடித்திருக்கிறார்! ஆம். அவரது அதிசய வாழ்க்கையைத் திரைப் படமாக எடுத்தார்கள். அதில் தான் அவர் நடித்திருக்கிறார். ஒன்பது வயது வரை ஊமையாக இருந்த அவர், உலகின் பல பாகங்களுக்கும் சென்று சொற்பொழிவு செய்திருக்கிறார். சென்னைக்குக்கூட ஒரு முறை வந்திருக்கிறார்!

விசித்திர ஒற்றுமை!

ஆபிரஹாம் லிங்கன் பிறந்தது ஞாயிற்றுக் கிழமை. வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது திங்கட் கிழமை. ஜனாதிபதியாக இருமுறை பதவி ஏற்றது செவ்வாய்க் கிழமை. முதலில் சபைக்குள் நுழைந்தது புதன் கிழமை. புகழ்பெற்ற கெட்டிங்பர்க் பேச்சு வெளி வந்தது வியாழக் கிழமை. அவர் சுடப்பட்டது வெள்ளிக் கிழமை. இறந்தது சனிக் கிழமை.

—ப. விஜயகுமார் (241) சென்னை-7



முதல் ரிக்ஷா

ரிக்ஷாவை முதன் முதலாகக் கண்டு பிடித்தவர் யோகஹாமா நகரைச்-சேர்ந்த ரெவரண்ட் ஜொனாதன் ஸ்காபி என்ற அமெரிக்கப் பாதிரியார்தான். இவர் முதலில் தயாரித்த ரிக்ஷா 1869-ஆம் ஆண்டில் வீதிகளில் ஓடியது.

—எஸ். ஜெயஸ்ரீ (1254)
திருச்சி-14



அவர்கள் தந்த அறிவுரைகள்

விஞ்ஞான அற்புதத்தைக் கண்டு பிடித்தவர்கள் நம்பிக்கை, பிரார்த்தனை ஆகியவற்றை மறக்கவில்லை. கடவுள் நம்பிக்கையும் பிரார்த்தனையும் இல்லாத தொழில் வெற்றி பெறாது.

—காந்தியடிகள்

மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிப் பாயும் தண்ணீர், மறுபடியும் மேட்டிற்கு வருவதில்லை. அப்படித்தான் காலமும். ஒரு முறை சென்று விட்டால் திரும்பாது.

—சாஸர்

கட்டளை இடும் பதவி வேண்டுமென்றால், முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள். முதலில் வேலைக்காரனாய் இருந்து பழகு; அப்போதுதான் எஜமானன் ஆவதற்கான தகுதி பெறுவாய்.

—விவேகானந்தர்

—தொகுப்பு: ஆர். ரமேஷ் (3085) தாம்பரம்



காது இல்லாத பூச்சிகள்

சில பூச்சிகளுக்கு நம்மைப் போல் காதுகள் இல்லை. ஆயினும் ஒலியை உணரக் கூடிய சக்தி உண்டு. கறையான் எறும்பு போன்றவற்றின் கால்களில் ஒலியை உணரும் உறுப்புக்கள் இருக்கின்றன. சில்வண்டுகளுக்குப் பாதத்திலும், வெட்டுக் கிளிக்கு வயிற்றிலும் சப்தத்தை அறிகின்ற உறுப்புக்கள் இருக்கின்றன. ஆனால், பாம்பு தரையில் ஏற்படும் அதிர்வுகளைக் கொண்டே மற்றவர்களின் நடமாட்டத்தை அறிந்து கொண்டுவிடுகிறது.

—ஜி. வரதராஜன் (322) தர்மபுரி

வெட்டு! வெட்டு!

இரவு மணி 10.

''உம், சிக்கிரம். வெட்டு! வெட்டு! இன்னும் இரண்டு போடு'' என்ற ஆண் குரல் ஒரு வீட்டுக்குள்ளிருந்து கேட்-



3வது அட்டைப்படம்

அன்புக் கவிமணி

இந்த நூற்றாண்டின் துவக்க ஆண்டான 1901-ஆம் ஆண்டு தமிழ்ச் சிறுவர் சிறுமியருக்கு அதிர்ஷ்டமான ஓர் ஆண்டாகும். அந்த ஆண்டில்தான் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் குழந்தைகளுக்கான பாடல்களைப் பாடத் தொடங்கினார்.

கவிமணி பேசப் பழகும் பாப்பாவிலிருந்து 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமியர் வரை பாடுவதற்கு ஏற்ற சுமார் 60 பாடல்களை இயற்றித் தந்திருக்கிறார்.

தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி

என்ற பாட்டைச் சின்னஞ் சிறு குழந்தைகள் பாடும்போதே அவர்களின் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது; உடலும் துள்ளுகிறது. துள்ளிக் குதித்துக் கொண்டே மழலை மொழியில் குழந்தைகள் பாடும் இப்பாடலைக் கேட்டுச் சில சமயங்களில் பெற்றோர்களும் துள்ளிக் குதிக்கத் தொடங்கி விடுகின்றனர்!

குழந்தைகளுக்கான எளிய கதைப் பாடல்களை எழுதுவதற்கும் கவிமணியே வழிகாட்டியாகத் திகழ்கிறார். 'பாட்டியின் வீட்டுப் பழம் பானை' என்ற பாடலை அறியாத சிறுவர் உண்டா?

கவிமணி பாடிய குழந்தைப் பாடல்களைத் தனியாக எடுத்து 'குழந்தைச் செல்வம்' என்ற பெயரில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகம் தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளது.

'மலரும் மாலையும்' என்று பெரிய அளவில் வெளிவந்த இவரது முதல் கவிதைத் தொகுதியை, யாருக்கு இவர் காணிக்கை ஆக்கியிருக்கிறார் தெரியுமா? உங்களைப் போன்ற சிறுவர் சிறுமியருக்குத்தான்!



டது. தெருவில் ரோந்து போய்க் கொண்டிருந்த இரு போலீஸ்காரர்கள் இதைக் கேட்டார்கள். சும்மா இருப்பார்களா?

'டக்டக்' என்று கதவை ஓங்கித் தட்டினர். வேலைக்காரன் வந்து கதவைத் திறந்தான். வேகமாக உள்ளே சென்றனர். அங்கே வீட்டுக்காரரும் அவர் மனைவியும் விருந்தாளி ஒருவரை உட்காரவைத்து அல்வாவை வெட்டு வெட்டி இலையில் போட்டுக் கொண்டிருந்தனர். விருந்தாளியோ, ''போதும் போதும், இனிமேல் சாப்பிட முடியாது'' என்று கூறிக்கொண்டிருந்தார். போலீஸ்காரர்கள் அசடு வழியத் திரும்பிச்சென்றனர்.

—ஆர். அரவிந்தன் (756)
புக்குறும்பட்டி



பையன் கேட்ட 10 பைசா

''வீட்டு முன்னுலே ஒருத்தன் ஓயாமல் கத்துறான் அம்மா. ஒரு பத்துப் பைசா கொடு அம்மா. அவன்கிட்டே கொடுத்து வந்துடறேன்.''

''என்னடா கத்தறான்?''

''கடலே, பட்டாணி, கடலே, பட்டாணின்னு கத்தறான் அம்மா.''

—வி. முரளி (3405), சென்னை-45

சிறப்பு மிக்க நாடுகள்

அபிரகம் (மைகா) மிகுதியாகக் கிடைக்கும் நாடு நம் இந்தியா.

புகைப்படக் கருவிகளுக்குப் பெயர் பெற்ற நாடு ஜப்பான்.

கைக்கடிகாரங்களுக்குப் புகழ்பெற்ற நாடு ஸ்விட்ஜர்லாந்து.

மோட்டார் கார்களுக்குப் பெயர் எடுத்துள்ள நாடு மேற்கு ஜெர்மனி

—ஜி வெங்கடேஷ்
(393) பம்பாய்—62



நிச்சயம் சொல்லலாம்

ஆசிரியர்: உங்கள் மகன் தேர்வில் காப்பியடிக்கவே மாட்டான் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

தந்தை: ஆ! அப்படியா! எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?


ஆசிரியர்: அவன்தான் எல்லாவற்றிலும் 0 மார்க் வாங்கியிருக்கிறானே!

—பா. ராதாகிருஷ்ணன் (1288)
நாகர்கோயில்

எண்களில் ஊர்ப் பெயர்கள்

ஒத்தக்கடை
இருகூர்
மூனுறு
நாலு ரோடு
ஐயாறு (திருவையாறு)
ஆறுங்கல்
ஏழுமலை
எட்டுக்குடி
ஒன்பதாங்கல்
பத்துப்பட்டி

—இராம நாச்சம்மை (798)
காரைக்குடி



ரோஷமான குத்துச் சண்டை!

குண்டுமணி


ஆதிநாளில் குத்துச் சண்டையின் போது உறைகளைப் பயன்படுத்தியதில்லை. 1867ம் வருஷம் உருவான குவீன்ஸ்லாண்ட் சட்டப்படி அமெச்சூர் குத்துச்சண்டை வீரர்கள் கைகளில் உறைகளை அணிந்து போரிட்டனர். அதிக நேரக் குத்துச் சண்டை 1893ம் வருஷம் நியூ ஆர்லியன்ஸில் ஆண்டி பவுனுக்கும் ஜேக் பார்க்குக்கும் நடைபெற்றது. ஏழு மணி, 19 நிமிஷ நேரம் 110 ரவுண்ட்கள் என்பது அந்தக் காலத்தில் ஒரு ரிக்கார்ட்! 1880ம் வருஷம் அமெச்சூர் குத்துச்சண்டைக் கழகம் உருவானது.

1892ம் வருஷம்தான் சரித்திரப் பிரசித்தமான குயீன்ஸ்பரி ஹெவி வெயிட் உலகக் குத்துச் சண்டை நடைபெற்றது. சல்லிவனும் கொர்பெட்டும் உக்ரமாகப் போரிட்டார்கள். 21 ரவுண்ட்கள் நடைபெற்ற இந்தச் சண்டையில் கொர்பெட் தம் விஞ்ஞான முறைக் கலை நுணுக்கங்களால் வெற்றி பெற்றார்.

'கையில் கத்தியல் உள்ள பிசாசு' என்று வர்ணிக்கப்பட்ட குத்துச்சண்டை வீரர் ஜிம்மி வில்ட், ஆங்கில நாட்டைச் சேர்ந்தவர். நீதிபதிகள் அனைவரும் இவரைத் தலைசிறந்த கலைஞர் என்று போற்றினர்.

அமெரிக்கா பல தலைசிறந்த குத்துச் சண்டை வீரர்களைத் தந்திருக்கிறது. 1920ம் வருடம் அமெரிக்காவில் தேசிய குத்துச் சண்டைக் கழகம் உருவாயிற்று.

ஜோ லூயிஸ் 'பிரௌன்பாம்பர்' என்ற நாமத்தைச் சூடியவர். அமெரிக்க நாட்டுக்குக் குத்துச் சண்டையில் புகழ் தேடித் தந்தவர். 1937ம் வருஷம் உலக ஹெவி வெயிட் சாம்பியனாக ஆகி 1949ம் வருஷம் ஓய்வு பெறும் வரை தம் புகழை நிலைநிறுத்திக்கொண்டிருந்தார். இருபத்தைந்து தடவை



உலக ரிகார்டு காணும் அளவுக்குத் தம் உலக பதவியைக் காத்துக்கொண்டு உலகில் யாருக்கும் சவால் விட்டுக் கொண்டிருந்தார்.

உலகக் குத்துச் சண்டை வீரர் முகம்மது அலி தமது ஓய்வு அறிவிப்பைத் தெரிவிக்கும் முன், ஒன்பது தடவை உலக கௌரவத்தைத் நிலைநாட்டியிருக்கிறார். 1967ம் வருஷம் முகம்மது அலிக்கு உலகக் குத்துச் சண்டை வீரர் என்ற பதவியை இழக்கும்படியாயிற்று. அவர் கறுப்பு முஸ்லிம் இயக்கத்தில் கலந்து கொண்டதால்! வியட்நாமில் அவர் அமெரிக்காவுக்காகப் போரிட மறுத்ததால் அவருக்கு உலக கௌரவம் தராமல் வாபஸ் வாங்கப்பட்டது!

நியூயார்க்கில் மாடிஸன் ஸ்குயர் கார்டனில் முகம்மது அலி மறுபடி குத்துச் சண்டை அரங்குக்குத் திரும்பி வந்து பிரேஸியரைத் தோல்வியுற வைத்து 20 மில்லியன் டாலரைக் குவித்தார். இது தவிர, டெலிவிஷன் வாயிலாகக் கிடைத்த 25 லட்சம் டாலர் தொகையும் முகம்மது அலியை வந்தடைந்தது. குத்துச்-சண்டையில் அவர் பெருமளவு செல்வம் ஈட்டினார். முகம்மது அலி ரொம்பப் புத்திசாலி; சிரிக்கச் சிரிக்கப் பேசும் ஆசாமி.

குத்துச்சண்டை ஒலிம்பிக்கில் 1904ம் வருஷம்தான் இடம் பெற்றது. 1908ம் வருஷம் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஐந்து தங்கப் பதக்கங்களை அமெச்சூர் குத்துச் சண்டைக் கழகம் பெற்றது குறிப்பிடத் தக்கது. அமைச்சூர் சர்வ தேசக் குத்துச் சண்டைக் கழகம் உருவாகி உலக அமெச்சூர்ப் போட்டிகளை நிர்வகித்ததோடு ஒலிம்பிக் போட்டிகளிலும் குத்துச் சண்டைகளை மேற்பார்வை யிட்டது.

ஒலிம்பிக் குத்துச் சண்டை சாம்பியன்கள் புரொபஷனல் ஆட்டக்காரர்களாகி, பல உலக கௌரவங்களைப் பெற்றிருக்கிறார்கள். முகம்மது அலி 1960ம் வருஷம் ஒலிம்பிக்கில் பங்கேற்றுத் தங்கப் பதக்கம் சூடியிருக்கிறார்.

குத்துச் சண்டை மூன்று கயிறுகள் கட்டப்பட்ட 'ரிங்' என்ற அரங்கில் நடைபெறும். பதினாறு அடி, இருபது அடி கொண்ட அந்தக் குத்துச்சண்டை அரங்கம் ஒரு மேடையில் அமைக்கப்பட்டிருக்கும்.

குத்துச் சண்டை வீரர்கள் அணியும் கையுறைகள் எடை வேறுபடும். ஆனால் 6 அல்லது 8அவுன்ஸ் எடை உள்ளதாக இருக்கும். இந்தக் கையுறைகளுக்குக் குத்துச் சண்டை வீரர்கள் 'பான்டேஜா'கத் துணிகளைச் சுற்றிக்கொள்ள அனுமதிக்கப் பட்டார்கள்.

புரொபஷனல் அமெச்சூர் குத்துச் சண்டைப் பந்தயங்களில் ஒவ்வொரு ரவுண்டும் மூன்று நிமிடங்கள் நடக்கும். இடை வேளையில் ஒரு நிமிஷம் ஓய்வு உண்டு. அமெச்சூர் குத்துச் சண்டைப் போட்டிகள் மூன்று ரவுண்டுகளே நடக்கும். ஆனால், புரொபஷனல் போட்டிகளில் 6 லிருந்து 15, வரை சுற்றுக்கள் உண்டு.

பிரிட்டனில் புரொபஷனல் போட்டியில், ரிபரி போட்டியை நிர்வகிப்பதோடு, ஸ்கோரையும் கண்காணிப்பார். அமெரிக்காவில் ரிபரிக்கு உதவியாக அரங்குக்கு அருகில் இரு நீதிபதிகள் இருப்பார்கள். இரு குத்துச் சண்டை வீரர்களின் திறமைக்கு எடை போட 'பத்துப் பாயிண்ட்' முறை உண்டு. தற்காப்புச் சண்டைக்குப் பாயிண்ட் உண்டு. பல

கோணச்சண்டை வீரருக்கு பாயிண்ட்கள் நிறையக் கிடைக்கும்.

அமெச்சூர் சர்வ தேசப் போட்டிகளில் நீதிபதிகளும், ரெபரியும் போட்டியை நடத்துவார்கள்.

குத்துச் சண்டை நேரிடை மோதுதலாகும். ஒவ்வொரு போட்டியாளரும் எதிராளியைப் பலமாகத் தாக்கி வீழ்த்த முயல்வார். அதோடு தானும் வீழ்ந்து விடாமல் தற்காத்துக் கொள்வார்.

குத்துச் சண்டையில் பல வகைத் தாக்குதல் முறைகள் உண்டு. ஒவ்வொரு வகைத் தாக்குதலையும் கண்டுபிடித்த குத்துச் சண்டை வீரரும் உண்டு.


குத்துச் சண்டை பல்வகை இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. ஹோமர், வெர்ஜில் போன்றோர் இக்கலையின் மேன்மையை எடுத்துரைத்திருக்கிறார்கள்.


வயிற்றுக்குக் கீழே தாக்குவது, சிறுநீரகங்களில் இடிப்பது, பின் கை தாக்குதல், முழங்கைத் தாக்குதல், கையுறையின் உள் பகுதியினால் அடிக்கடி தாக்குதல் - இவையெல்லாம் கூடாது. உடலோடு உடல் உராய்வது தவறு. பௌல்கள் எச்சரிக்கையினால் வெளிப்படுத்தப்படும் இதன் பிறகு பாயிண்ட்கள் இழக்க நேரிடும்.

போட்டியாளர்களில் யார் வெற்றி பெற்றாரோ அவரது கையை ரெபரி தூக்கிக் காட்டி வெற்றியைத் தெரிவிப்பார்.

தமிழகக் குத்துச் சண்டைக் கழகம் நேரு ஸ்டேடியத்தில் இயங்குகிறது. இதன் காரியதரிசி மோகன கிருஷ்ணன். சமீபத்தில் தமிழகக் குத்துச் சண்டைக் கழகம் தென்னிந்திய அமெச்சூர் குத்துச் சண்டைப் போட்டியை நடத்தியது. இதில் மெட்ராஸ் இன்ஜினியரிங் குழு போட்டியாளர்கள் முப்பது பாயிண்ட் எடுத்து வெற்றியாளர் பதவியைப் பெற்றார்கள். கருணாகரனுக்கும் ஜகதீஷ் சந்தருக்கும் நடைபெற்ற ரோஷமான குத்துச்சண்டையே ரசிகர்களது பாராட்டுதலைப் பெற்றது.'

திருக்குறள் புதிர்






மேலே உள்ள இரு படங்களும் எந்த எந்தத் திருக்குறளை நினைவூட்டுகின்றன?

இரு குறளையும் தனித் தாளில் எழுதி வைத்துக்கொண்டு 26-ம் பக்கத்தைப் புரட்டுங்கள். நீங்கள் எவ்வளவு தூரம் கெட்டிக்காரர்கள் என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

கண்ணன் கவிஞனாகிறான்!



தணிகை உலகநாதன்

சென்ற 29—1—84 அன்று தமிழகமெங்கும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஆங்காங்கே, கவிஞர்கள் கூடி, பாரதிதாசனாரின் அருமை பெருமைகளைப் பற்றிப் பேசினார்கள். கவியரங்கம் நடைபெற்றது.

சென்னையிலும் பல இடங்களில் கவிஞர் விழா சீரும் சிறப்புமாக நடந்தது. அன்று தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தினர் ஊர்வலமாகச் சென்றனர். சென்னைக் கடற் கரையிலிருக்கும் பாரதியார் சிலையிலிருந்து புறப்பட்டுப் பாவேந்தர் சிலையை அடைந்து மாலை சூட்டி அஞ்சலி செய்தனர்.

ஊர்வலத்தைக் கண்டு உற்சாகம் கொண்டான், கண்ணப்பன். எதிர் காலத்தில் தானும் ஒரு பெரிய கவிஞனாக வேண்டும் என்று ஆசை கொண்டான்.

கண்ணப்பன் வீடு திரும்பியதும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கவிதைத் துறையில் ஈடுபட்டிருக்கும் தன் பெரிய தந்தையாருக்கு ஒரு கடிதம் எழுதினான். அவனுடைய பெரிய தந்தையார் ஒரு பெருங் கவிஞர்.

அன்புள்ள பெரியப்பா,

வணக்கம். நேற்று இங்கு பாவேந்தர் பாரதிதாசன் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கவிஞர்களின் ஊர்வலமும் நடந்தது. கடற்கரையில் இருக்கும் பாரதியார் சிலையிலிருந்து பாரதி தாசன் சிலை வரை ஊர்வலம் போனதைப்பார்த்ததும்எனக்கும்கவிதை எழுத வேண்டும் என்னும் ஆசை வந்து விட்டது. என் பெயர் எல்லாப் பத்திரிக்கைகளிலும் வரவேண்டும் என்னும் நோக்கத்துடன் என்னை ஒரு கவிஞன் ஆக்கிக் கொள்ள விரும்புகிறேன். பாரதியாரின் முன்னூறு கவிதைகளையும், பாரதி தாசனாரின் இருநூறு கவிதைகளையும் நன்றாகப் படித்து வைத்திருக்கிறேன். என் சொந்தப் பெயரில் எழுதுவதைவிட ஒரு புனைப்பெயரில் எழுதவேவிரும்புகிறேன். எனக்கு ஒரு புனைப் பெயர் சொல்லுங்கள், பெரியப்பா! நான் விரைவில் பாரதியாரைப் போலவோ பாரதிதாசனாரைப் போலவோ ஒரு கவிஞன் ஆவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இப்படிக்கு
உங்கள் அன்புள்ள
கண்ணப்பன்

தன் தம்பி மகனின் ஆர்வத்தைக் கண்ட பல்கலைக் கழகப் பேராசிரியர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. என்றாலும் கண்ணப்பனின் கடிதத்தில் இருந்த பிழைகளைப் பார்த்து ஒருபுறம் வருத்தப்பட்டார். அந்தப் பிழைகளைச் சுட்டிக் காட்டி அவனுக்கு ஒரு பதில் கடிதம் எழுதினார்.

அன்புள்ள கண்ணப்பா,

உன் அன்புக் கடிதம் கண்டேன். மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன். கவிதை, அழியாத் செல்வம். கவிஞர்கள் புகழுடம்பில் என்றும் நிலையாக வாழ்பவர்கள். உனக்குக் கவிஞனாக வேண்டும் என்னும் ஆசை உண்டானதை மிகவும் பாராட்டுகிறேன். பாரதியார் பாடல்களும் பாரதிதாசனார் பாடல்களும் எளியவை; இனியவை;பொருள் நிறைந்தவை. அவர்கள் பாடல்களைப் படித்துப் படித்துச் சிந்தித்துப் பார்த்தால் நீயும் ஒரு கவிஞன் ஆவாய் என்பதில் ஐயமில்லை. அடிக்கடி பல தலைப்புக்களில் எதுகை மோனையுடன் எழுதிப் பார். பல நல்ல கவிதைகளை உன்னால் இயற்ற முடியும்.

நிற்க, உன் கடிதத்தில் சில பிழைகளைக் கண்டேன். அவற்றை எடுத்துக் காட்டினால் திருத்திக் கொள்வாய் என்று நம்புகிறேன்.

கவிதை இயற்றுபவர்களைக் கவிஞர் என்றுதான் கூற வேண்டும். கவிஞ்ஞர் என்று எழுதக் கூடாது.

கடல் + கரை என்பது கடற்கரை ஆகும். இதைக் கடர்க்கரை என்று எழுதுவது தவறு. பொருளே இல்லாமல் போய்விடும்.

பத்திரிகை என்பதை பத்திரிக்கை என்று எழுதி யிருக்கிறாய். பத்திரிகை என்று எழுதுவதே சரியான சொல்லாகும்.

முன்னூறு என்பதற்கு முன்னே நூறு என்பது பொருள். மூன்று + நூறு முந்நூறு என்றுதான் வரும். உன்னைப் போலத்தான் 300 என்ற எண்ணைப் பலர் முன்னூறு என்று எழுதுகிறார்கள். அவர்களும் இந்தப் பிழையைப் புரிந்து கொண்டு சரியாக எழுதுவது நல்லது

இருனூறு என்று எழுதுவதும் பிழையாகும். இரண்டு + நூறு (200) இருநூறு என்றுதான் வரும். இருனூறு என்பதற்குப் பொருளே இல்லை.

புனைப்பெயர் என்று எழுதக்கூடாது. இச்சொற்றொடர் பாய் புலி என்பது போன்றது. இது பாய்ந்தபுலி, பாய்கின்ற புலி, பாயும் புலி என இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலத்திலும் வரும். சுடுசோறு, ஆடுகொடி என்னும் சொற்றொடர்களும் இப்படி வரும். இவைகளை சுடுச்சோறு, ஆடுக்கொடி என்று பேசினால் கேட்பதற்கு வெறுப்பாக இருக்கும். புனைபெயர், சுடு சோறு, ஆடுகொடி, பாய்புலி என்பவை பிழை இல்லாத சொற்கள். இப்படிப்பட்ட சொற்களை நீ கவனித்து எழுதப் பழகிக் கொள்வது நல்லது.

உனக்கு ஒரு புனைபெயர் வேண்டும் என்று கேட்டாயே, 'மல்லிகை' என்று வைத்துக்கொள். மல்லிகை மணம் வீசுவது போல் உன் கவிதை மணம் நாடெங்கும் வீசிப் புகழ் மணமும் பரவட்டும்.

உன் அன்புள்ள
பெரியப்பா.

திருக்குறள் புதிர்-விடை


புதிர்-21

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (788)

ஒருவன் உடுத்தியிருக்கும் ஆடை அவிழ்ந்துவிடும்போலிருந்தால், உடனே விரைவாக அவனது கை சென்று சரிசெய்து விடுகிறது. அது போலவே, நண்பனுக்குத் துன்பம் வந்தால், உடனே சென்று அந்தத் துன்பத்தைப் போக்க வேண்டும். அதுதான் நட்பு.

புதிர்-22 **ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
எழுமையும் ஏமாப்புடைத்து (126)

ஆமை தனக்குத் துன்பம் நேராதபடி தலையையும் கால்களையும் ஓட்டுக்குள் அடக்கிக் கொள்ளுகிறது. அதே போல் ஒருவன், தன் ஐம்புலன்களையும் அடக்கத் தக்க ஆற்றல் உடையவனாக இருந்தால், அந்த ஆற்றல் அவனுக்கு ஏழு பிறவிகளிலும் பாதுகாப்பாக இருக்கும்.


மாலி-ஜாலி 3
கருத்து: எம்.ஆர்.ராஜன்
டேய் மாலி, வர்றியடா ஒரு பார்க்குக்குப் போகலாம்.
உரக்கச் சொல்லாதேடா! ஜாலி காதிலே விழுந்தால் அதுவும் நம்மோட வந்திடும்!
பார்த்தியா மணி, நீ சொன்னது ஜாலி காதிலே விழுந்திடுத்து. அதனாலே தான் நமக்கு முன்னாலே போகுது!
கவனிக்கவும். வர்ணம் காயவில்லை!
ஜாலி, என்ன ஆச்சர்யமாயிருக்கு! நீ பெஞ்சு மேலே உட்காராமே புல் தரையிலே உட்கார்ந்திட்டியே!
கவனிக்கவும் வர்ணம் காயவில்லை!
ஐயையோ! நம்ம மேல் சட்டை, கால் சட்டை எல்லாம் வர்ணம் ஒட்டிடுத்தே! போர்டைப் பார்க்காமே உட்கார்ந்திட்டோம்!
ஜாலியைப் பார்! அது புத்திசாலி! போர்டைப் பார்த்திட்டு அது புல் தரையிலே உட்கார்ந்திருக்குது!

சார் தபால்!

அது எந்தப் பள்ளி?

ஊர் இரண்டு பள்ளிக்கு உதவும் மகிழ்ச்சியான செய்தியைப் பள்ளியில் நடந்த வெள்ளி விழா என்ற கட்டுரையில் படித்தேன். அத்தகைய பாக்கியம் பெற்ற பள்ளி எதுவோ?

—பா. மாசிலாமணி, புதுச்சத்திரம்

[கௌம்பாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளிதான் அது! —ஆசிரியர்]

விண்வெளி வீரரைப் பற்றி முதல் முதலாகக் கவிதை வெளியிட்டது கோகுலம் தான். இப்படி நாட்டுக்குப்பெருமைதரும்நல்ல நல்ல செய்திகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

—ஜி. ராதாகிருஷ்ணன் (5356) நக்கம்பாடி.

தலைவர்களின் புகைப்படங்களை வெளியிடுவதோடு, அவர்களைப் பற்றியும் சென்ற இதழில் எழுதியிருப்பது மிகவும் உபயோகமாயுள்ளது.

—பி. ராஜகுமார், தஞ்சை

'கலைக்கண்ணி சிம்மாசனம்' சின்னஞ் சிறுவர்கள் மட்டுமல்ல; பெரியவர்களும் ஆவலுடன் படிக்கும் வகையில் அமைந்திருந்தது. ஓவியர் விஜயுக்கு சபாஷ்!

—எம். ஸ்ரீதரன், விருத்தாசலம்

துணிகை உலகநாதனின் 'மாமா எழுதிய கடிதம்'' என் பிழைகளைத் திருத்திக்கொள்வதற்குப் பெரிதும் உதவியது.

—த. செழியன் (51) பணகுடி

பிரதாப முதலியார் சிறிய வயதிலே செய்தவற்றைப் படித்துப் படித்துச் சிரித்தேன்.

—ஆ. உமாமகேஸ்வரி (5352) நெய்வேலி-3

உலகத்தில் எங்கு எங்கோ உள்ள செய்திகளை யெல்லாம் தெரிந்து கொள்கிறோம். தமிழ் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிறப்புக்களை அறியாமல் இருந்தால், அறியாதவர்களாகவே கருதப்படுவோம். நல்ல வேளையாக எங்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியும் அழகாக எடுத்துக் கூறிவருகிறீர்கள். என் சொந்த மாவட்டமான செங்கற்பட்டின் பல்வேறு சிறப்புக்களை 'கோகுலம்' மூலமாக இப்போதுதான் நான் தெரிந்து கொண்டேன். கலாவதி குலசேகரன் அவர்களுக்கு நன்றி.

—ப. இரத்தினசாபாபதி, திருத்தணி

ஜெர்மன் தேசத்துக் குட்டிக் கதைகள் அத்தனையும் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

—கோ. தாமோதரன் (224) கூனூர்

பிருந்தாவனக் கதையரங்கத்தில் இடம் பெற்ற கதைகள் அனைத்தும் கற்கண்டாய் இனித்தன. 'சிறிய வயதில் பிரதாப முதலியார்' சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தது. மொத்தத்தில் இம்மாத இதழ் டாப் டக்கர்!

—வாணி ஜெயராம் தாசன் கண்ணூங்காட்டுமேடு

'கருணை விழிகள்' கதாநாயகன் மோகன் என்னை மிகவும் கவர்கிறான். ஏழையாய் இருந்தாலும், நற்குணங்களால் சிறந்து, வாழ்வில் முன்னேறத் துடிக்கும் அவனிடமிருந்து நானும் பல நல்ல பண்புகளைக் கற்றுக் கொள்கிறேன்.

—ப. க. தமிழ்ச் செல்வி, கோவை-1

'மாலி—ஜாலி' கார்ட்டூன் கலையாக இருக்கிறது. அதை வண்ணப் படத்தில் போடலாமே!

—ச. சித்ரா, திருவண்ணாமலை

'கேள்வி இங்கே; பதில் எங்கே?' பகுதி எங்கள் பொது அறிவை வளர்க்கிறது. விஞ்ஞான விளையாட்டு எங்கள் அறிவியல் அறிவை வளர்த்து வருகிறது.

—கோ. கோபிகிருஷ்ணன் (1363) கோவை-641402.

பிருந்தாவனம் விருந்தாவனமாக இருந்தது.

—எம். பண்டரிநாதன், மங்கலம்

நான் எடுத்ததும் படிக்கும் மின்மினிக் கதை எங்கே? என்னை ஏமாற்றி விட்டீர்களே! இருந்தாலும் பிரதாப முதலியாரின் இளமை நிகழ்ச்சி சரிப்படுத்தி விட்டது.

—க. நடராஜன் (5500) ஈரோடு

'கருணை விழிகள்' கதையின் முடிவு என்ன என்பதை அறிய மிகவும் ஆவல். அதன் முடிவை அறியவில்லையெனில் நெஞ்சு வெடித்து விடும்போலிருக்கிறது.

—ச. பிரமநாயகம், கோவை—18

பொன்மலை சம்பத் எழுதிய 'ஒளிபெருக்கியும் ஒளி விளக்கும்' சிறுகதை, தலைக்கனம் பிடித்துத் தற்பெருமை கொள்பவர்களுக்கு நல்ல பாடம்.

—ஏ. எம். முஹம்மது நிஜாமுத்தீன், நீடூர்

தாகூர் — கோகலே — பொற்சித்திரங்கள் இதுவரை காணக் கிடைக்காதவை. உடன் பிரேம் போட்டுப் படிப்பறையில் மாட்டிவிட்டேன். —அ. அன்பழகன், அத்தணப்பேட்டை



இந்து சமய மன்றம் - காஞ்சிபுரம்

ஜகத்குரு ஜயேந்திரர் பொன்விழாப் பணிகள்

அறநூல்கள் ஒப்பித்தல் போட்டி அறிவிப்பும் வேண்டுகோளும்

அன்புடையீர், வணக்கம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் 50வது ஆண்டு — பொன் விழாவையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் பொன் விழாப் பணிகளுள் 'அறநூல்கள் ஒப்பித்தல் போட்டி'யும் ஒன்றாகும். இப்போட்டியில் தமிழகத்தில் உள்ள எல்லா வகைப் பள்ளிகளிலும், தமிழ்க் கல்லூரி உள்ளிட்ட எல்லாக் கல்லூரிகளிலும் பயில்வோர் அனைவரும் பங்கு கொள்ளலாம். கீழ்க் குறித்துள்ளவாறு போட்டிக்குரிய பகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

(1) 3ஆம் வகுப்பு: ஆத்திசூடி முழுவதும்.

(2) 4ஆம் வகுப்பு: கொன்றைவேந்தன் முழுவதும்.

(3) 5ஆம் வகுப்பு: உலக நீதி முழுவதும்.

(4) 6, 7, 8ஆம்வகுப்புகள்: மூதுரை முழுவதும்.

(5) 9, 10ஆம் வகுப்புகள்: நல்வழி முழுவதும்.

(6) 11, 12ஆம் வகுப்புகள்: குமரேச சதகம் (முதல் 50 பாடல்கள்)

(7) கல்லூரி மாணவ, மாணவியர்: 1, 2, 3, 4, 5, 8, 9, 10, 11, 13, 14, 16, 17, 19, 20, 22, 23, 24, 25, 26, 29, 30, 32, 33, 38 எண்கள் உள்ள திருக்குறள் அதிகாரங்களின் குறட்பாக்கள்.

போட்டிகளுக்குக் குறித்துள்ள நூல்களில் உள்ள பாடல்களைமட்டும் தெளிவான உச்சரிப்புடன் பிழையின்றி ஒப்பித்தல் வேண்டும். கலந்துகொள்வோர் அனைவருக்கும் பரிசு உண்டு. சிறப்பாக ஒப்பித்து வெற்றி பெறுவோருக்கு வெள்ளிக் காசுகளும், மாவட்ட அளவில் வெற்றி பெறுவோர்க்குப் பொற் காசுகளும் சான்றிதழுடன் ஜகத்குருவின் ஆசியுடன் வழங்கப்படும்.


குழந்தைகளும், மாணவ, மாணவியரும் மிகப் பெரும் அளவில் இப்போட்டியில் பங்கு கொண்டு பயன் பெற வேண்டும் என்பது, ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அவர்களின் திருவுள்ளக் கருத்தாகும்.

இப்போட்டி, பள்ளி திறந்தவுடன் ஜூன் மாதக் கடைசியில் நடத்தப்பெறும். உரிய காலம், நடத்துவது பற்றிய நடைமுறைகள் முதலியவை அவ்வப் பள்ளிகளுக்கு / கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

தலைமையாசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் தத்தம் கல்லூரியின் / பள்ளியின் பெயரை — பெயர்களைக் குறித்து விவரம் எழுதி அனுப்புமாறும், போட்டிகளில் பங்கு பெறச் செய்து பயன் பெறத் துணையாகுமாறும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

முகவரி: இந்து சமய மன்றம், ஸ்ரீ சங்கர மடம், 1, சாலைத் தெரு, காஞ்சிபுரம்—631 502.

குருவருளாணைப்படி
பு. மா. ஜயசெந்தில்நாதன்,
மாநில அமைப்பாளர்.



மிருகங்களைப் பற்றிய சில சுவையான தகவல்கள்!



இரையை அப்படியே விழுங்கி விடும்.

✻ மிருகங்களில் சிம்பான்ஸி குரங்குதான் மிகவும் புத்திசாலி. சொல்லிக் கொடுப்பதைப் புரிந்து கொண்டு கற்றுக் கொள்ளும். அதனால்தான் விண்வெளிக்குக் கூடப் போய் வந்திருக்கிறது!

✻ கழுதைப் புலியின் கால், பொறியில் அகப்பட்டுக் கொண்டுவிட்டால், விடுதலை அடைவதற்குத் தன் காலையே துண்டாக்கிக் கொண்டு தப்பித்துவிடும்!

✻ பாம்பின் தலைக்கு இருபுறமும் உள்ள பள்ளத்தில், வெப்ப ஒளிக் கதிர்களை உணரும் தன்மையுடைய உறுப்புக்கள் உண்டு. அதனால் இருட்டிலும், ஏதாவது மிருகங்கள் அருகில் வந்தால், குறிவைத்துத் தாக்க முடியும்.

✻ நீர்க்கிரி தன்னுடைய உடலின் எடையில் கால் பாகம் உணவைத் தினமும் சாப்பிடும். கிட்டத்தட்ட பத்து கிலோ மீன்களைச் சாப்பிடும்.

✻ பாலைவனத்து ஓநாய் தனக்கு வேண்டிய நீருக்காகப் பத்து, பன்னிரண்டு அடி ஆழக்கிணறு தோண்டும்.

—ஜெயா வி. ராமன்

கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி



1551 இரா. சித்ரா, 12, கிருஷ்ணன் கோவில் 3-ம் தெரு, மானம்புச் சாவடி, தஞ்சாவூர்
1552 த. பாபு, 192, மேட்டுத் தெரு, சேலம்-6
1553 ஜி. விஜயலக்குமி, 366, டி-கேம்ப், போத்தனூர்-641023
1554 கே. ராகவேந்திரன், 15, வக்கீல் நாகராஜன் வீதி, அக்ரஹாரம், உடுமலைப்பேட்டை.
1555 பி. இந்திராணி, 51, வீட்டு வசதி வாரியம் காலனி, எஸ்.வி. மில் போஸ்ட்,உடுமலைப் பேட்டை.
1556 ஆர். அருள்மொழி, 28, மாரிமுத்து முதலி தெரு, அம்மாப்பேட்டை, சேலம்-3
1557 மு. சந்திரசேகரன் மே./பா. சி. முத்துசாமி, ஆசிரியர், ஜங்கம சமுத்திரம், . தம்மம்பட்டி-636113
1558 அ. ம. சுகவனேஸ்வரன், 16, அபிநவம் கிராமம், ஏத்தாப்பூர்-636117
1559 மு. கமலக்கண்ணி, த/பெ. மு. முனியசாமி,தமிழாசிரியர், நடுத்தெரு, மண்டல மாணிக்கம்-623605
1560 இளங்கோவன், 10/56, இராமலிங்க அடிகளார் தெரு, பரமக்குடி-623707
1561 கே. புவனேஸ்வரி, ஜி.10-டி, ஓடப்பள்ளி, எஸ். பி. பி. குவார்ட்டர்ஸ், ஈரோடு-7
1562 கு. முத்துக்குமார், S/o குஞ்சுப்பிள்ளை, வடக்குத் தெரு, புத்தனாம்பட்டி, திருச்சி மாவட்டம்
1563 கே. சரவணக்குமார், 100, கெல்லடி நகர், 2வது தெரு, சூரமங்கலம், சேலம்-5
1564 வி. கே. கோவிந்தராஜன், வெள்ளவாவிப் புதூர், பெரியார் மாவட்டம்
1565 கே. வெங்கட்ரமணன், 2, டி9, வீட்டு வசதி வாரியம்,சந்தைப்பேட்டை, திருக்கோவிலூர்.
1566 கே. மேகலா, ஏ-24, அண்ணாநகர், தென்னூர், திருச்சி-17
1567 எல். குமார், 73, 11வது வீதி, டாட்டாபேட், கோயமுத்தூர்-12
1568 எஸ். அன்வர்தீன், அருப்புக்கோட்டை ரோடு, துரைச்சாமிபுரம், சாயல்குடி.
1569 ந. சதீஷ்குமார் பாபு, 30. வ. உ. சி. தெரு, கொல்லம்பாளையம், ஈரோடு-2
1570 ந. உமா மகேஷ் பாபு, 30, வ. உ. சி. தெரு கொல்லம்பாளையம், ஈரோடு-2
1571 ஆர். சாந்தி, c/o ஆர். நாகராஜன், கப்பே கவுண்டன் புதூர், பொள்ளாச்சி
1572 மு. நாககுரு ஈஸ்வரன், 185, சிவகாமிபுரம் தெரு, இராஜபாளையம்
1573 ஆர். ஜெயராமன், 26-ஏ, கை விளாஞ்சேரி தென்பாதி, சீர்காழி - 609111
1574 மு. சூரியநாராயணன், 221, அய்யர் குளத் தெரு, மச்சுவாடி, புதுக்கோட்டை
1575 த. ஆ. சண்முகசுந்தரம், 59-டி, கணேசபுரம் முதல் தெரு, நாமக்கல்
1576 எஸ். நாகராஜன், 8, பள்ளத் தெரு, நாகர்கோவில்
1577 என். பாலசுப்பிரமணியன், S/o வி. நடராஜன், சன்னதித் தெரு, கோட்டூர்-614708
1578 ஆர். ராஜேஷ், சி-29, தென்னூர்க்காடு சாலை, வட்டம் 19, நெய்வேலி-3
1579 என். பாபு, 146, ராஜாஜி ரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர்
1580 பி. சுரேஷ்குமார், S/o டி. பன்னீர்செல்வம், திரௌபதை அம்மன் கோயில் தெரு, திருத்துறைப்பூண்டி
1581 எஸ். ஸ்ரீராம், 56, ஹைஸ்கூல் ரோடு, குத்தாலம்-609801
1582 ம. ராஜேந்திரன், 43-சி, ராஜகோபால் காலனி, கம்மாளத் தெரு, ஒரத்தநாடு-25
1583 க. உலகநாதன், 5, சம்பத்நகர், சூளேசுவரன்பட்டி, பொள்ளாச்சி
1584 க. இரவிகுமார், S/o எம். சுந்தரம், ஆசிரியர், கணபதி விலாஸ் மிடில் ஸ்கூல், மன்னார்குடி.
1585 க. பிரபு, S/o கனகசபை, மோகனூர்-611109
1586 எம். விவேகானந்தன்; S/o என். மாரியப்பன், தெய்வநேச நிலையம், தெற்குத் தெரு சிவகாசி,
1587 நெ. ஸ்ரீதேவி, 266, பாரதியார் தெரு, திருநெல்வேலி டவுன்-627006
1588 இ. சி. நெ. ராமசுந்தரம், 266, பாரதியார் தெரு, திருநெல்வேலி டவுன்
1589 ஆர். கோகிலவாணி, 62, பருவதசிங்க ராஜ தெரு, திருநெல்வேலி-6
1590 பா. பிரபு, S/o கெ. பாலகிருஷ்ணன், இரையூர், பெண்ணாடம்
1591 தி. கார்த்திகேயன், 26-6, கீத அடையவளஞ்சான் தெரு, ஸ்ரீரங்கம்
1592 க. இராமச்சந்திரன், 32, அக்கிரகாரம், சின்னமனூர், மதுரை மாவட்டம்
1593 தேன்மகள் தெய்வானை, 3 , வாடியார் வீதி, தேவகோட்டை
1594 சி. ஆர். ரங்கநாதன், 7-185, 2து கிராஸ் தெரு, வெங்கடேஸ்வர நகர், பொழிச்ச லூர், சென்னை-.4
1595 வி. நாராயணசாமி, ராய. சொ. இல்லம், அமராவதிபுதூர்-623301
1596 ச. அருண்குமார், அவளிவநல்லூர், தஞ்சை மாவட்டம்
1597 ஜெ. அஷோக், பிளாட் எண் 4403, ஒய்-34, அண்ணாநகர், சென்னை-40
1598 பி. மணிகண்டன், 6, நம்மாழ்வார் தெரு, தூத்துக்குடி-2
1599 எம். கே. சிவா, 1-65-ஏ, அரண்வாயல், திருவள்ளூர் வட்டம்
1600 எஸ். லதா, 21, ஜோதி ராமலிங்கம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33
1601 டி. சங்கரி, 88, சின்னத்தம்பி நாயக்கன் தெரு, குயப்பேட்டை, சென்னை-12



1602 டி. மோகனசுந்தரம், S/o ஏ. துரைசாமி, ஆசிரியர், பிராமணர் வீதி, களத்தூர் 632531
1603 ஆர். யஷ்வந்த், 35, ஞானகிராம் காலனி, அரும்பாக்கம், சென்னை-106
1604 க. அனுராதா, 38, ரெட்டித் தெரு, பீமநகர், திருச்சி-1
1605 ஜெ. கணேஷ்ராம், 1, மூன்றாவது கிழக்கு குறுஞ்சாலை, காந்திநகர், வேலூர்-6
1606 டி. கே. நாராயணன், 2, குமாரஸ்வாமி கோயில் தெரு, திருப்பத்தூர் (வ. ஆ.)
1607 பேபி ஸிஜி. பா. 64, கலோசன நாடார் தெரு, விருதுநகர்
1608 வி. விஜய் மகேந்திரன், 49, அய்யங்குளத் தெரு, திருவண்ணாமலை
1609 கோ. சரவணன், 34, சாலியத் தெரு, அம்மாசத்திரம், கும்பகோணம் தாலுகா
1610 ஜெ. இலகன், S/o ஏ. ஜகந்நாதன், மேலையூர்-609107
1611 ஜி. சுப்பிரமணியன், 68, நாடிமுத்து நகர், பட்டுக்கோட்டை.
1612 எஸ். சேதுராமன், S/o ஆர். சுப்பிரமணியன், மிராசுதார், மகாராஜபுரம்-613104
1613 ஏ. வரதராஜன், 19-ஹெச்-12, பத்மநாபா காலனி முதல் தெரு, காலாடிப்பேட்டை, சென்னை-19


1614 பா. இராமசாமி, 3, நியூ நாடார் காலனி, வட ஏர்-607303
1615 பா. சுரேஷ், S/o பெ. பாலகிருஷ்ணன், இறையூர், பெண்ணாடம்-606111
1616 எஸ். வாசுதேவன், 6-1600, பச்சண்ணா சந்து, தஞ்சாவூர்
1617 கு. கற்பகம், 17, தாகூர் ரோடு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி-642002
1618 எம். முகம்மது இப்ராகிம், 4, உள்கடை வீதி, ஆலங்குடி
1619 எஸ். ஜெயப்பிரகாஷ் சுந்தர்ராஜன், சிவயோகபுரம், இராங்கியம்-622409
1620 ச. சுப்பிரமணியன், 7-1, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, கும்பகோணம்-1
1621 எஸ். சூரியநாராயணன், 1, ராயர் தெரு, திருக்காட்டுப்பள்ளி-613104
1622 ஆர். ஸ்ரீராம், 27, அக்ரஹாரம், விசயபுரம், திருவாரூர்-610001
1623 ஆர். பிரஸன்னராகவன், 33-ஏ, கீழ முதல் தெரு, மன்னார்குடி
1624 ஏ. முஹம்மது இஸ்மாயில், 162, காந்தி ரோடு, மன்னார்குடி
1625 இ. வெண்ணிலா, பிளாக் 17, பிளாட் 12, பீட்டர்ஸ் ரோடு காலனி, சென்னை-14
1626 இ. எழில், பிளாக் 17, பிளாட் 12, பீட்டர்ஸ் ரோடு காலனி, சென்னை-14
1627 ஆர். கீதா, D/o என். ராஜாமணி, டிரைவர், சாமியார்பட்டி கிராமம், மதுரை மாவட்டம்-624312
1628 ச. ராமப்ரியா, D/o எஸ். சந்தானம், சாமியார்பட்டி கிராமம்-624312
1629 தி. இராஜமூர்த்தி, 25, அனந்தீஸ்வரன் கோயில் அக்ரஹாரத் தெரு, சிதம்பரம்
1630 ஜி. வெங்கடாசலம், 3, மறைமலை அடிகள் தெரு, சீனுவாசநகர், சென்னை-63
1631 எஸ். ஸ்ரீதரன், S/o கே. சாமிநாதன், ஆசிரியர், அரண்வாயல்-602025
1632 டி. வி. செந்தில்நாதன், 15, 3வது மெயின் ரோடு, விஜய்நகர், வேளச்சேரி, சென்னை-42
1633 வ. சக்தி சங்கர், 4, தேவேந்திர வீதி (கிழக்கு) கோவை-641005
1634 ஆர். அனந்தராமன், பி-8, ஸ்டேட் பாங்க் காலனி-II, கே. கே. புதூர், கோயமுத்தூர்
1635 கே. எஸ். அறிஞர் அண்ணா, ஈ-10, காவலர் குடியிருப்பு, அவினாசி ரோடு உப்பிலிப்பாளையம், கோவை-18
1636 வி. சுப்பிரமணியன், 6-ஏ, கண்ணம்மன் கோவில் தெரு, திருநெல்வேலி ஜங்ஷன்
1637 ஜி. செல்வராணி, 6-1-6, மதுரை ரோடு, உசிலம்பட்டி-626532
1638 எஸ். சாவித்திரி, 28-2-1, ராமசாமிபுரம்-2, தூத்துக்குடி-628003
1639 டி. சிவகாமி சுகந்தி, 12-பி, டேனியல்தாமஸ் தெரு, பாளையங்கோட்டை-627002
1640 எஸ். சுந்தரமூர்த்தி, பெரிய தெரு, நரசிங்கபுரம், மின்னல்-632510
1641 கே. ரவிச்சந்திரன், c/o கருப்பண்ண ஸ்டோர், சிட்லபாக்கம் ரோடு, குரோம்பேட்டை.
1642 எஸ். கவிதா, 4, சுரேந்திர நகர், 10வதுதெரு, ஆதம்பாக்கம், சென்னை-88
1643 எஸ். கௌரி, 4, சுரேந்திர நகர், 10வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை-88
1644 கோ. ராதா, எம். ஐ. ஜி. பிளாட்-4, பிளாக்-4, பத்தாவது அவென்யூ, 64வது தெரு அசோக்நகர், சென்னை-83
1645 ஆனந்தி கிருஷ்ணன், டி-29-82, அடையாறு அவென்யூ, ஐ.ஐ.டி., சென்னை-36
1646 சி. சிவசுப்பிரமணியம், டி-29-82, அடையாறு அவென்யூ, ஐ.ஐ.டி., சென்னை-36
1647 கே. ஆதவன், 5-55-பி, ஆஸ்பத்திரி ரோடு, வேளாங்கண்ணி-611111
1648 டி. அன்னபூரணி, கே-26, மந்தாரகுப்பம் காலனி, நெய்வேலி-2
1649 எஸ். கே. முத்துக்குமார், 4, அக்ரஹாரம், காவேரி வீதி, பவானி
1650 சி. பூமலை S/o சின்னச்சாமி பெருந்துறை ரோடு, குன்னத்தூர், பெரியார் மாவட்டம்
1651 எம். உமாமகேஸ்வரி, த/பெ. ஆர். முத்துவேலு, ஆசிரியர், வடசித்தூர்-641202
1652 ஆர். கணபதி சுப்பிரமணியன், நியூ சீதாராம விலாஸ் ஹோட்டல், மூன்று ரோடு, கவுந்தப்பாடி-638455
1653 எஸ். கணேஷ், 68, அந்தியூர் ரோடு, பவானி-2
1654 எஸ். கிரிஜா, 68, அந்தியூர் ரோடு, பவானி-2
1655 கு. சிவகாமி, 1-25, ஜீவா வீதி, சூரம்பட்டி அஞ்சல், ஈரோடு-9

(இன்னும் வரும்)

உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை. — 15

மாலுமி சிந்துபாத்

மூலம் : அராபிய இரவுகள்
தமிழ்ச் சுருக்கம்: எஸ். கிருஷ்ணமூர்த்தி



முதல் பயணம்

என் பெயர் சிந்துபாத். நான் பாக்தாத் நகரத்தில் வசித்த ஒரு பணக்காரருடைய மகன். என் அப்பா இறந்தபோது எனக்கு ஏராளமான சொத்து இருந்தது. என் அறியாமையாலும், கெட்ட நண்பர்களின் சேர்க்கையாலும் சொத்தின் பெரும் பகுதியை அழித்தேன். சீக்கிரத்திலேயே எனக்குப் புத்தி வந்தது. தீய நட்பை நீக்கிவிட்டு, இழந்த பொருளை மறுபடியும் சம்பாதிப்பதற்காக வியாபாரம் தொடங்கினேன். கிழக்கு இந்தியத் தீவுகளுக்குப் போகும் ஒரு வணிகர் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டேன். ஒரு பாய்மரக் கப்பலில் ஏறி நாங்கள் ஊர் ஊராகப் போனோம். பண்டமாற்று முறையிலும் பணத்திற்காகவும், சரக்குகளை விற்றுப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

ஒருநாள் காற்றின் வேகம் திடீரெனக் குறைந்தது. கப்பல் நின்றது. அருகில் ஒரு சின்னத் தீவு தென்பட்டது. கப்பல் தலைவரின் அனுமதியுடன் ஒரு படகை எடுத்துக்கொண்டு தீவில் இறங்கினோம். காலாற நடந்தோம். சமைப்பதற்காகச் சிலர் தீ மூட்டினர். தீவு நடுங்க ஆரம்பித்தது. நாங்கள் தலைகுப்புறக் கீழே விழுந்தோம். கப்பலில் இருந்தவர்கள் தீவு நகருவதைக் கவனித்தனர். ''அது தீவு இல்லை! திமிங்கிலம், திமிங்கிலம்! உடனே திரும்புங்கள்!'' என்று தலைவர் உத்தரவிட்டார். சிலர் படகில் ஏறிக் கப்பலுக்கு விரைந்தனர். நான் படகைப் பிடிப்பதற்குள் திமிங்கிலம் நீரில் முழுகி மறைந்து விட்டது! நான் தத்தளித்தேன். பிறகு ஒரு கட்டையைப் பிடித்துக் கொண்டு மிதந்தேன்: நீந்தினேன். காற்று வீசவே, கப்பல் நகர்ந்தது. அலைகள் என்னை வேறுபக்கம் அழைத்துச் சென்றன. நான் தனியாக விடப்பட்டேன்.

இரவெல்லாம் அலைகள் என்னை அடித்துச் சென்றன. நான் களைத்துப் போனேன். காலையில் ஒரு தீவில் ஒதுக்கப்பட்டேன். அது மரம், செடி, கொடிகள் நிறைந்த ஓர் உண்மையான தீவு. பழங்களைத் தின்று பசி ஆறினேன். எதிரில் வந்த அந்தத் தீவின் மக்களில் சிலர் என்னைத் தங்களின் அரசரிடம் அழைத்துச் சென்றனர். அவர் அன்போடு என்னை வரவேற்றார். ஆவலோடு என் கதையைக் கேட்டார். துறைமுக அதிகாரி என்ற பதவியையும் எனக்கு அளித்தார்.

நான் தினந்தோறும் துறைமுகத்திற்குச் சென்று இறக்குமதியாகும் பண்டங்களைப் பார்வையிட்டேன். ஒருநாள் எனக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. புதிதாக இறக்கப்பட்ட பல மூட்டைகளின் மீது, 'சிந்துபாத்' என்று எழுதப்பட்டிருந்தது. ''அது யாரு



முட்டை பழையதா? புதியதா?

"அண்ணா, இங்கே பாரேன், நம்ம கோழி புதுசா இட்ட முட்டை!" என்று கையிலிருந்த கோழி முட்டையைப் பாலுவிடம் காட்டினாள் வசுமதி.

"இதுவா புது முட்டை? இல்லை. இது பழைய முட்டை" என்றான் பாலு.

"என்னண்ணா, கொஞ்ச நேரம் முன்னாலேதான் நம்ம கோழி இட்டது. இதைப் போய்ப் பழசுன்னு சொல்றியே!"

"பழசுக்கும் புதுசுக்கும் என்ன வித்தியாசம்னு உனக்குத் தெரியுமா?"

"தெரியும். தண்ணியிலே போட்டால் பழசு மிதக்கும். புதுசு மிதக்காது."

"சரி, இது பழைய முட்டைதான் என்று நிரூபிக்கிறேன்" என்று கூறிவிட்டு, பாலு சமையல் அறைக்குள் சென்றான். ஒரு பாத்திரத்தில் தண்ணீருடன் திரும்பி வந்தான். தண்ணீரிலே வசுமதி தந்த முட்டையைப் போட்டான். அது மிதந்தது!

"பார்த்தாயா, இது பழைய முட்டைதான்!" என்றான் பாலு.

எல்லாருக்கும் வியப்பாக இருந்தது.

"என்ன விழிக்கிறீர்கள்? இது புது முட்டைதான். ஆனால், நான் கொண்டு வந்தது சாதாரண நீரல்ல; உப்பு நீர்! உப்பு நீருக்கு அடர்த்தி அதிகமல்லவா? அதனால்தான் புது முட்டை மிதக்கிறது" என்று விளக்கிக் கூறினான் பாலு.

—டி. முத்துராமன்.

டைய பெயர்?" என்று கப்பல் தலைவரிடம் கேட்டேன்.

"பாக்தாத்திலிருந்து சிந்துபாத் என்ற வியாபாரி எங்களோடு வந்தார். வழியில் ஒரு பயங்கர விபத்தில் சிக்கி அவர் மறைந்து விட்டார். இந்த மூட்டைகள் அவருடையவை. இவற்றை விற்று, பணத்தை அவருடைய குடும்பத்தினருக்கு அளிக்கப் போகிறேன்", என்றார்.


"நான்தான் ஐயா, சிந்துபாத். என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டேன். கப்பலில் இருந்த வியாபாரிகள் என்னை அடையாளம் கண்டு கொண்டனர். மீண்டும் என்னை உயிரோடு சந்தித்ததில் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அந்த மூட்டைகளை என்னிடமே திருப்பிக் கொடுத்தனர். அரசரிடம் விடைபெற்றுக்கொண்டு அதே கப்பலில் என் பயணத்தைத் தொடர்ந்தேன். என் பண்டங்கள் நல்ல விலைக்குப் போயின. பெருத்த லாபத்தோடு பாக்தாத் திரும்பினேன். மனைவி, மக்கள் மகிழ்ந்தனர். ஒரு புதிய மாளிகையைக் கட்டினேன். நண்பர்களை அழைத்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தேன்.

இரண்டாவது பயணம்

சந்தோஷமான வாழ்க்கை சலித்தது. அது சோம்பேறித்தனமாக எனக்குப் பட்டது. கப்பல் ஏறித் தூர தேசங்களுக்குப் போகும் ஆசை என்னைத் துரத்தியது. நண்பர்களும், நானும் வியாபாரத்திற்குரிய பண்டங்களை எடுத்துக் கொண்டோம். கடவுள் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையில் இரண்டாவது பயணத்தைத் தொடங்கினோம்.

கப்பல் பல நாடுகளுககுச் சென்றது. வியாபாரம் செழித்தது. ஜன நடமாட்டமில்லாத ஒரு தீவை வழியில் கண்டோம். அங்கு பூக்களும், பழங்களும் மண்டிக் கிடந்தன. ஓடை சலசலவென்று ஓடியது. நாங்கள் அந்தத் தீவில் இறங்கிச் சுற்றிப் பார்த்தோம். சான் களைப்பு மிகுதியால் தனியாக ஓர் இடம் சென்று கண் அயர்ந்தேன். கண் விழித்தபோது நண்பர்களைக் காணவில்லை! கப்பல் வெகு தூரத்தில் போய்க் கொண்டிருந்தது. வீட்டிலேயே சுகமாக இருக்காமல் வலிய வந்து ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டேனே என்று வருந்தினேன்.

அருகில் ஒரு தென்னை மரம் இருந்தது. அதன் மேல் ஏறி அந்தத் தீவை ஆராய்ந்தேன். கப்பல் எதுவும் தென்படவில்லை. தீவின் மையத்தில் வெள்ளை வெளேரென்று ஒரு பிரம்மாண்டமான உருண்டை வடிவம் தெரிந்தது. மரத்திலிருந்து இறங்கி அந்த உருண்டையை நோக்கி நடந்தேன். நெருங்கிப் பார்த்ததில் அது என்னவென்றே புரியவில்லை. புதிராக இருந்தது. மணலில் புதைந்த ஒரு பந்தைப் போலத் தோன்றியது. வழுவழுப்பாக இருந்தது. சுற்றிச் சுற்றி நடந்தேன். உள்ளே போக வழி எதுவும் இருக்கவில்லை. அந்தப் புதிருக்கு விடை தெரியாமல் குழம்பினேன்.



திடீரென்று மேகம் மூடியது போல் வானம் இருண்டது. காட்டாறு பாய்வதைப் போன்ற இரைச்சல் காதில் விழுந்தது. அண்ணாந்து பார்த்தேன். விரித்த சிறகுகளுடன் ஓர் அதிசயப் பறவை என்னை நோக்கி இறங்கிக் கொண்டிருந்தது. பயந்து போய் அந்த வெள்ளை உருண்டையோடு ஒட்டிக் கொண்டேன். பறவை அந்த வெள்ளைப் பந்தின் மீது உட்கார்ந்து ஓய்வெடுத்தது. கப்பலை விடப் பெரிய உருவமுள்ள 'ராக்' (Rock) என்னும் ராட்சசப் பறவைகளைப் பற்றி நான் கேள்விப்பட்டிருந்தேன். வெள்ளை உருண்டை அதன் முட்டை என்பது தெளிவாகியது.

இரவெல்லாம் பயத்தினால் நான் தூங்கவில்லை. அதிகாலையில் துணிச்சலாய் ஒரு திட்டம் தீட்டினேன். பறவையின் கால்கள் மரத்தைப் போலப் பெரிதாக இருந்தன. என் தலைப்பாகையை அவிழ்த்து என்னைப் பறவையின் கால்களோடு சேர்த்துக் கட்டிக் கொண்டேன். அது இரை தேடப் போகும் போது என்னையும் தூக்கிச் செல்லும் என்று நம்பினேன். அதே போலச் சிறகை அடித்துக்கொண்டு பறவை கிளம்பியது. என் மனமும் படபடவென்று அடித்துக்கொண்டது. நான் மேக மண்டலம் வரை உயர்ந்தேன். மயக்கம் வந்தது. எனக்குத் தெளிவு வந்த போது பறவை ஒரு மலை உச்சியில் இறங்கியிருந்தது. என் கட்டுக்களை அவிழ்த்தேன். அவிழ்த்த மறுகணமே அது சரேலெனப் பள்ளத்தாக்கில் பாய்ந்தது. ஒரு பெரிய பாம்பைக் கொத்திக் கொண்டு பறந்து போயிற்று.

ஓர் ஆபத்திலிருந்து தப்பி வேறோர் ஆபத்தில் மாட்டிக் கொள்வது என்னுடைய வழக்கமாக இருந்தது. சுற்றிலும் நோக்கினேன். ஒரு பக்கம் கடல்! மறுபக்கம் செங்குத்தான பள்ளத்தாக்கு! வேறு வழி இல்லாமல் பள்ளத்தாக்கில் இறங்கினேன். கண்ணைப் பறிக்கும் பெரிய பெரிய வைரக் கற்கள் கொட்டிக் கிடந்தன. ஆசையோடு அவற்றைக் கைகளில் அள்ளினேன். என் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அருகிலேயே ராட்சச உருவில் மலைப் பாம்புகள் குகையிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக வெளி வந்து கொண்டிருந்தன. வைரக் கற்களை வீசி எறிந்து விட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடினேன். ஒரு குகையில்

புகுந்துகொண்டு அதன் வாசலை ஒரு கல்லால் அடைத்தேன். பாம்புகள் ''உஸ், உஸ்'' என்று சீறிக் கொண்டே போயின.

பள்ளத்தாக்கிலிருந்து தப்பிக்க வழி தேடினேன். அப்போது மலை உச்சியிலிருந்து ஒரு பெரிய இறைச்சித் துண்டு என் அருகில் விழுந்தது. தொடர்ந்து பல துண்டுகள் விழுந்தன. வைரப் பள்ளத்தாக்கைப் பற்றி வியாபாரிகள் சொன்ன ஒரு கதை என் நினைவுக்கு வந்தது—

வைர வியாபாரிகள் பாம்புகளுக்குப் பயந்துகொண்டு பள்ளத்தாக்கில் இறங்க மாட்டார்கள். மலை உச்சியிலிருந்தே இறைச்சித் துண்டுகளைப் பள்ளத்தாக்கில் வீசி எறிவார்கள். அவற்றில் வைரங்கள் ஒட்டிக் கொள்ளும். பறவைகள் இறைச்சியைக் கொத்தி வந்து குஞ்சுகளுக்காகக் கூட்டில் வைத்ததும், வியாபாரிகள் அவற்றை விரட்டிவிட்டு வைரங்களை மட்டும் எடுத்துச் செல்வார்கள்.

பறவைகளின் உதவியால் நானும் அங்கிருந்து வெளியேற எண்ணினேன். ஒரு பெரிய இறைச்சித் துண்டை என் முதுகில் வைத்துத் தலைப்பாகைத் துணியால் இறுகக் கட்டினேன். வைரங்களை வாரிப் பைகளில் நிரப்பிக் கொண்டு காத்திருந்தேன். வானத்தில் சிறகுகள் அடிக்கும் ஓசை கேட்டது. ஒரு பெரிய ராக் பறவை இறைச்சியோடு என்னையும் சேர்த்துத் தூக்கிக் கொண்டு போய்த் தன் கூட்டில் வைத்துக் கொண்டது. வழக்கம்போல் வியாபாரிகள் சூழ்ந்து, பறவையை விரட்டினர். என்னிடமிருந்த வைரங்களிலிருந்து சிலவற்றை அவர்களுக்குக் கொடுத்தேன். அந்த வியாபாரிகளின் கப்பலில் ஏறி பாக்தாத்துக்குத் திரும்பினேன். ஏழைகளுக்கு நிறையப் பொருள் உதவி செய்து சந்தோஷமாக வாழ்ந்தேன்.

மூன்றாம் பயணம்

அமைதியான வாழ்க்கையில் பழைய கஷ்டங்களையெல்லாம் மறந்தேன். கடல் என்னைக் கைநீட்டி அழைத்தது. மூன்றாம் பயணம் தொடங்கினேன். வழியில் வந்த ஊர்களில் பண்டங்களை விற்றேன். இந்தப் பயணமாவது இனிது நிறைவேறும் என்று எண்ணுவதற்குள் ஒரு பயங்கரப் புயல் எங்களைத் தாக்கியது. கப்பல் திசை மாறிச் சென்றது. ஒரு தீவின் பாதுகாப்பான பகுதியில் ஒதுங்கியது. ''நாம் குரங்குத் தீவுக்கு வந்திருக்கிறோம். இங்கிருந்து இனி தப்ப முடியாது!'' என்று தலைவர் கவலையோடு சொன்னார்.

தீவில் இருந்த மக்கள் கூட்டங் கூட்டமாகக் கடலில் குதித்து எங்கள் கப்பலை அடைந்தனர். அவர்களை மனிதர்கள் என்பதைவிட மனிதக் குரங்குகள் என்று சொல்லலாம். குள்ள உருவம். உடம்பெல்லாம் சிவந்த முடி. சிவந்த சிறிய கண்கள். எங்களைக் கரையில் இறக்கிவிட்டு அவர்கள் கப்பலை வேறு தீவுக்கு ஓட்டிச் சென்றனர்.

நாங்கள் உணவைத் தேடி அலைந்தோம். ஒரு பெரிய அரண்மனை கண்ணில் பட்டது. கதவைத் தொட்டோம். திறந்து கொண்டது. உள்ளே விசாலமான முற்றம். மனித எலும்புகளும், மண்டை ஓடுகளும் ஒரு மூலையில் குவிந்து கிடந்தன. மாமிசத் துண்டுகளைத் தீயில் சுடும் இரும்பு ஈட்டிகள் இன்னொரு மூலையில் சிதறிக் கிடந்தன. ஒரு பூதம் திடீரெனத் தோன்றியது. அது பனை மர உயரம் இருந்தது. கறுப்பு நிறம். கிணற்றைப் போன்ற வாய். முறம் போன்ற காதுகள். நெற்றியின் நடுவில் ஒரு கண். அந்த ஒற்றைக் கண்ணால் அது எங்களைக் கூர்ந்து நோக்கிற்று.

அந்தப் பூதம் தன் முகத்திற்கு நேரே என்னைத் தூக்கிப் பிடித்தது. என் கைகால்களைக் கிள்ளிப் பார்த்தது. நான் எலும்பும் தோலுமாக இருந்தேன். என்னைக் கீழே போட்டுவிட்டு, என் நண்பர்களை ஒவ்வொருவராக எடுத்துப் பார்த்தது. கப்பல் தலைவன் குண்டாக இருந்தான். பூதம் சந்தோஷமாக அவனுடைய உடம்பில் ஓர் ஈட்டியைக் குத்தி, அவனை நெருப்பில் சுட்டு விழுங்கியது. பிறகு நன்றாகக் குறட்டை விட்டு உறங்கியது.

வேறு இடம் இல்லாததால் நாங்கள் அந்த அரண்மனையிலேயே தங்கினோம். தினமும் பூதம் எங்களில் ஒருவரைப் பிடித்து விழுங்கியது. ஒருநாள் நாங்கள் ரகசியமாக ஒரு கட்டுமரம் தயார் செய்துகொண்டு பூதம் உறங்கும் இடத்திற்குப் போனோம். பழுக்கக் காய்ச்சிய ஈட்டியை எடுத்துப் பூதத்தின் கண்ணைக் குத்தினோம். கண்ணை இழந்த பூதம் அலறிக் கொண்டே ஓடியது. நாங்கள் கட்டுமரத்தைத் தள்ளிக் கொண்டு கடலில் விரைந்தோம். சிறிது நேரத்தில் காயமடைந்த பூதத்துடன் வேறு இரண்டு பூதங்களும் கடற்கரையில் தோன்றின. பெரிய

பெரிய பாறாங்கற்களை எடுத்து எங்களை நோக்கி வீசின. அந்தத் தாக்குதலி லிருந்து தப்பி நாங்கள் மூவர் மட்டுமே அடுத்த தீவை அடைந்தோம்!

தீவில் கிடைத்த பழங்களைத் தின்று இளைப்பாறினோம். ஒரு நண்பன் பயங் கரமாக அலறினான். திரும்பிப் பார்த் தால் ஒரு ராட்சசப் பாம்பு அவனை விழுங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பாம்பிடமிருந்து நானும் இன் னொரு நண்பனும் தலைதெறிக்க ஓடி னோம். வழியில் ஓர் உயர்ந்த மரம் இருந்தது. இரவில் உச்சாணிக் கொம் பில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். அடியில் இருந்த கிளையில் என் நண்பன் அமர்ந்தான். பாம்பு எங்களை விட வில்லை. மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து மேலே ஏறியது. அடிக் கிளையில் இருந்த நண்பனை அது விழுங்கி விட்டு ஓடியது!

அடுத்த நாள் முட்செடிகளையும், புதர்களையும் திரட்டி அந்த மரத்தைச் சுற்றி ஒரு வட்டமான குடிசை அமைத்தேன். பாம்பு நுழையாதபடி முள்வேலி கட்டினேன். குடிசையின் நடுவில் பாதுகாப்பாக ஒளிந்துகொண் டேன். இரவு ஆனதும் அந்தப் பாம்பு மறுபடியும் வந்தது. ஆனால், முள் வேலியைக் கடந்து உள்ளே நுழைய முடியவில்லை. பயங்கரமாகச் சீறிக் கொண்டே இரவெல்லாம் குடிசையைச் சுற்றிச் சுற்றி ஊர்ந்தது. காலையில் பாம்பு மறைந்ததும் நான் கடற் கரைக்கு விரைந்தேன். அங்கு ஒரு கப்பல் போய்க் கொண்டிருந்தது. அதில் ஏறி என் பயணத்தைத் தொடர்ந்தேன்.

நான் இரண்டாம் பயணம் போன அதே கப்பலில் மீண்டும் ஏறியிருந் தேன். ராக் பறவைகளின் தீவில் தனியாக விடப்பட்ட என்னைக் கப்ப லில் இருந்தவர்களுக்கு முதலில் அடை யாளம் தெரியவில்லை. சிறிது நேரம் உரையாடின பிறகு அறிந்து கொண் டனர். என் வியாபாரப் பண்டங்களை என்னிடமே திருப்பிக் கொடுத்தனர். நான் அவற்றை விற்றுக் கிடைத்த லாபத்தோடு பாக்தாத் நகரத்திற்குத் திரும்பினேன். என் செல்வங்களை ஏழை எளியவர்களுடன் பகிர்ந்து கொண்டு இன்பமாக வாழ்ந்தேன்.

நான்காம் பயணம்

மூன்றாம் பயணத்திற்குப் பிறகு பாக்தாத் நகரத்தில் என் செல்வமும், செல்வாக்கும் அளவில்லாமல் வளர்ந் தன. அவற்றை அனுபவித்துக் கொண்டு, வீட்டிலேயே இன்ப மாக இருந்திருக்கலாம். ஆனால், பயண ஆசையும், துன்பங்களை எதிர்த்துப் போராடும் துணிச்சலும் என்னைத் துளைத்து எடுத்தன. விலை உயர்ந்த பண்டங்களை வாங்கிக் கொண்டு வணிகர்களுடன் நான் மறுபடியும் வெளிநாடுகளுக்குப் புறப்பட்டேன். வழியில் அநேக இடங் களில் தங்கி வியாபாரம் செய்தேன்.

ஒருநாள் பயங்கரப் புயல் அடித் தது. தலைவரால் கப்பலைக் காப்பாற்ற முடியவில்லை. சூறைக் காற்று மோதிப் பாய்மரம் நார் நாராகக் கிழிந்தது. அலைகள் மலை உயரத்திற்கு எழுந்தன. தளம் குளம் போலக் காட்சி அளித் தது. கப்பல் மெதுவாக மூழ்கியது. பலர் உயிர் இழந்தனர். நானும் வேறு சிலரும் மரக்கட்டைகளைப் பிடித்துக்கொண்டு மிதந்தோம். மறுநாள் காலையில் கரையில் ஒதுக்கப் பட்டோம்.

கரையில் இருந்த சில காட்டு மிராண்டிகள் எங்களைத் தங்கள் அரச னிடம் அழைத்துச் சென்றனர். அங்கு வற்புறுத்தி எங்களுக்குச் சில மூலிகை உணவுகளை அளித்தனர். என் நண் பர்கள் அவற்றை ஆவலுடன் சாப்பிட் டனர். காட்டுமிராண்டிகள் அவற்றைச் சாப்பிடாததால் எனக்குச் சந்தேக மாக இருந்தது. நான் அதைத் தொட வில்லை. அந்த உணவை விழுங்கியதும், என் நண்பர்கள் தங்கள் புத்தியை இழந்தனர். பைத்தியம் பிடித்தவர் களைப் போல மாறினர்.

காட்டுமிராண்டிகள் அவர்களுக்கு மேன்மேலும் ஆகாரம் அளித்து அவர் களை நன்றாகக் கொழுக்க வைத்தனர். அந்தக் காட்டுமிராண்டிகள் மனிதர் களைக் கொன்று நரமாமிசம் சாப்பிடும் கூட்டத்தினர் என்று தெரிந்தது. நான் ஒன்றும் சாப்பிடாததால் என் உடம்பு மெலிந்துகொண்டே போயிற்று. என்னை அவர்கள் கவனிக்கவில்லை. ஒருநாள் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டு நான் கடற்கரைக்கு ஓடி னேன்.

அந்த வழியே போன ஒரு கப்பலை நிறுத்தி அதில் ஏறிக் கொண்டேன். இன்னொரு தீவை அடைந்தேன். அங்கு மக்கள் நாகரீகமாகக் காணப் பட்டனர். வியாபாரம் நன்றாக நடந் தது. அந்த ஊர் அரசரிடம் சென்று என் கதையைச் சொன்னேன். அவ ருடைய விருந்தாளியாகச் சிலநாட்கள் தங்கினேன்.



அந்த ஊரில் குதிரைகள் பிரபலமாக இருந்தன. மக்கள் குதிரைச் சவாரி செய்தனர். ஆனால், குதிரைக்குச் சேணமோ, கடிவாளமோ, கால்வைக்கும் படிகளோ இல்லை. ஒரு தொழிலாளியின் உதவியுடன் நானே அவற்றைத் தயார் செய்து அரசருக்குப் பரிசாக அளித்தேன். அதைப் பயன்படுத்திய அரசர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். சபையில் இருந்த மற்றவர்களும் அதே மாதிரி செய்து தரும்படி கேட்டனர். அவ்வாறே செய்தேன். எனக்குப் பெயரும், புகழும் கிடைத்தன. பணக்காரன் ஆனேன். சொந்த ஊருக்குப் போக அரசரிடம் அனுமதி கேட்டேன். அனுமதி தரவில்லை. மேலும் அவருடனேயே தங்கியிருக்கும்படி அன்புக் கட்டளையிட்டார். மேலும் அந்தத் தீவிலிருந்த ஓர் அழகான பெண்ணையும் எனக்கு மணம் செய்வித்தார்.

ஒருநாள் அரச சபையில் இருந்த என் நண்பனின் மனைவி இறந்தாள். எவ்வளவு ஆறுதல் சொல்லியும் அவன் அழுவதை நிறுத்தவில்லை. தன் மனைவிக்காக அல்லாமல், அவன் தனக்காகத்தான் அதிகம் வருந்தினான் என்ற காரணம் பிறகு தெரிந்தது. அந்த ஊர் சட்டப்படி மனைவி முதலில் இறந்தால், கணவனையும், அவனோடு புதைத்து விடுவார்களாம்! அதே போலக் கணவன் முதலில் இறந்தால், மனைவியையும் அவனோடு புதைத்து விடுவார்களாம்!

அந்த விசித்திரமான சட்டத்தைக் கேட்ட பிறகு என் மனைவிக்குச் சிறிய நோய் வந்தால்கூட நான் பயந்தேன். துரதிர்ஷ்டம் என்னை விடவில்லை. என் மனைவி விரைவிலேயே செத்துப் போனாள். அந்த நாட்டு வழக்கப்படி அவளுடைய உடலை விலையுயர்ந்த ஆடைகளாலும், ஆபரணங்களாலும் அலங்கரித்து ஒரு மலை உச்சிக்கு எடுத்துப் போயினர். என்னையும் உடன் அழைத்துச் சென்றனர். ஓர் ஆழமான பள்ளம் போன்ற குகையில் மனைவியின் உடலை மெதுவாக இறக்கினர். ஏழு ரொட்டித் துண்டுகளையும், ஒரு ஜாடித் தண்ணீரையும் உள்ளே வைத்தனர். நான் எவ்வளவு கெஞ்சியும் என்னை லட்சியம் செய்யவே இல்லை. என்னையும் உள்ளே இறக்கி விட்டனர். பள்ளத்தின் வாயை ஒரு பாறாங்கல்லால் மூடிவிட்டு அவர்கள் ஊருக்குத் திரும்பினர்.

அந்தப் பள்ளம் விசாலமாக இருந்தது. உள்ளே நிறையப் பிணங்கள் கிடந்தன. நானும் விரைவில் உயிர் துறப்பேன் என்ற எண்ணம் என்னை வருத்தியது. அந்த ரொட்டித் துண்டுகளைச் சாப்பிட்டு ஏழு நாட்களை எப்படியோ கழித்தேன். அடுத்த நாள் என்னைத் தள்ளிக் கொண்டு ஒரு பிராணி ஓடியது. இருட்டில் அதன் உருவம் சரியாகத் தெரியவில்லை. அதைத் துரத்திக் கொண்டு நானும் ஓடினேன். சில இடங்களில் வளைந்தும், ஊர்ந்தும் போனேன். சிறிது

தூரம் போனதும் சில்லென்ற புதிய காற்று முகத்தில் அடித்தது. அந்த இருண்ட குகைக்கு வெளியே இருந்த கடற்கரையை நான் அடைந்தேன்.

தப்பிச் செல்ல வழிகாட்டிய இறைவனுக்கு நன்றி செலுத்தினேன். மீண்டும் அதே வழியாகச் சென்று அந்தக் குகைக்குள் நுழைந்தேன். அங்கு சிதறிக் கிடந்த தங்க நகைகளை அள்ளி மூட்டையாகக் கட்டிக்கொண்டேன். கடற்கரைக்கு வந்து காத்திருந்தேன். அந்தப் பக்கம் வந்த ஒரு வியாபாரக் கப்பலில் என்னை அன்போடு ஏற்றிக் கொண்டனர். நான் நலமாகப் பாக்தாத் திரும்பினேன்.

ஐந்தாம் பயணம்

வீட்டு வாழ்க்கை விரைவில் அலுத்தது. துணிச்சலான பயணங்களை மனம் மீண்டும் விரும்பியது. நானே ஒரு பாய்மரக் கப்பலை விலைக்கு வாங்கிப் பண்டங்களை அதில் நிறைத்தேன். நண்பர்களையும் அழைத்துக் கொண்டு அலைகடலில் ஆனந்தமாகப் போனேன்.

கப்பல் ஒரு பாலைவனத் தீவை அடைந்தது. அங்கு அதிசயமான ஒரு வெள்ளை வடிவம் எங்களை வரவேற்றது. அது ராக் என்னும் ராட்ஸசப் பறவையின் முட்டை என்றும் அதை நெருங்கினால் ஆபத்து வரும் என்றும் நண்பர்களை எச்சரித்தேன். ஆனால், அவர்கள் கேட்கவில்லை. கற்களை எறிந்து, முட்டையை உடைத்தனர். குஞ்சு வெளியே வந்ததும் அதைக் கொன்று பங்கு வைத்துத் தின்றனர். ஆனால், அதற்குள் ஆகாயம் இருண்டது. முட்டையை நாடித்தாய்ப் பறவை பறந்து வந்தது. ''ஆபத்து, ஆபத்து! கப்பலுக்கு ஓடுங்கள்!'' என்று அவர்களை விரட்டினேன். கப்பல் நகர்ந்தது. பறவை சோகமாக அலறியது. அதன் கோபத்திலிருந்து தப்பி விட்டதாக நாங்கள் நினைத்தோம்.

ஆனால் ஒன்றல்ல; இரண்டல்ல. பல ராட்சசப் பறவைகள் எங்களைத் துரத்திக்கொண்டு பறந்து வந்தன. ஒவ்வொரு பறவையும் ஒரு பெரிய பாறுங்கல்லைத் தன் கால்களால் தூக்கிக் கொண்டு வந்தது. அந்தக் கற்களை அவை எங்கள் கப்பல் மீது போட்டு விட்டு நகர்ந்தன. அலைகள் உயரமாக எழுந்தன. கப்பல் நொறுங்கிச் சிதறியது. மூலைக்கொருவராக நாங்கள் தூக்கி எறியப்பட்டோம்.



தோட்டம் அமைத்திடுவோம்!

தோட்டம் ஒன்று அமைத்திடுவோம்—
அதில்
தொடர்ந்தே நாளும் உழைத்திடுவோம்
(தோட்டம்)

மல்லிகை முல்லை இருவாட்சி
மணமிகு ரோஜா செவ்வந்தி
பல்வித வண்ண மலர்ச் செடிகள்
பாங்குடன்அமைத்தே வளர்த்திடுவோம்
(தோட்டம்)

கத்திரி, வெண்டை, அவரைக்காய்,
கனமிகு பரங்கி, பூசணிக்காய்,
சத்துள கீரைகள், புடலங்காய்,
சமையலுக் கேற்ற பாகற்காய்
(தோட்டம்)

தேங்காய், மாங்காய், எலுமிச்சை,
தேனினு மினிய வாழை, பலா
பாங்காய் நல்கும் மரங்களெல்லாம்
பயனுற வளர்த்தே வாழ்ந்திடுவோம்
(தோட்டம்)

நாளும் உழைத்தே உயர்ந்திடுவோம்;
நாட்டுக்கு நன்மை செய்திடுவோம்;
வாழும் வழியை அறிந்திடுவோம்;
வாழ்வின் பயனை அடைந்திடுவோம்!
(தோட்டம்)

-தில்லை சம்பந்தன்



நான் ஒரு பலகையைப் பிடித்துக் கொண்டு மிதந்தேன். சில நாட்கள் கழித்து ஓர் அழகிய தீவில் கரை ஏறினேன். அங்கு திராட்சை, ஆரஞ்சு முதலிய பழவகைகள் ஏராளமாகப் பழுத்திருந்தன. ஆசை தீர உண்டு, காலாற நடந்தேன்; ஓர் ஓடையின் கரையில் தாடி நீண்ட ஒரு கிழவன் அடக்கமாக உட்கார்ந்திருந்தான். அவனும் என்னைப் போலவே கப்பலை இழந்த ஒரு மாலுமி என எண்ணி, அருகில் சென்று விசாரித்தேன்.

தன்னைத் தூக்கிக் கொண்டு அந்த ஓடையைக் கடந்து செல்லும்படி ஜாடையிலேயே கிழவன் சொன்னான். இரக்கத்தினால் அவனை முதுகில் ஏற்றிக் கொண்டு அக்கரை சேர்ந்தேன். பிறகு, அவனைக் கீழே இறங்கும்படி சொன்னேன். ஆனால், அவன் இறங்கவேயில்லை! தன்னுடைய இரண்டு கால்களாலும் என் கழுத்தை இறுக்கிக் கட்டிக் கொண்டான். எனக்கு மூச்சுத் திணறியது. அவன் என்னை ஒரு வாகனமாக்கிக்கொண்டு இங்குமங்கும் அலையச் சொன்னான். அவ்வாறு செய்யாவிட்டால் துன்புறுத்தினான். வேறுவழியில்லாமல் நான் அவனைச் சுமந்து கொண்டே அலைந்தேன்.

ஒருநாள் நான் ஒரு பெரிய முலாம் பழத்தைப் பறித்து உள்ளே இருந்த விதைகளை அப்புறப்படுத்தினேன். அதில் திராட்சைச் சாற்றைப் பிழிந்து வெய்யிலிலும் காய வைத்தேன். சில நாட்களுக்குப் பிறகு அதைப் பருகினேன். உற்சாகமாக இருந்தது. கிழவன் கேட்டான். அவனுக்கும் கொடுத்தேன். ஒரே மூச்சில் அவன் எல்லாச்சாற்றையும் குடித்தான். குடி மயக்கத்தில் அவனுடைய கால்கள் நழுவின. சரேலென அவனைக் கீழே தள்ளிவிட்டு, நான் ஓடி மறைந்தேன். நல்லவேளையாகக் குடிநீரைத் தேடி ஒரு கப்பல் அந்தக் கரைக்கு வந்தது. அதில் ஏறி பாக்தாத்துக்குத் திரும்பினேன்.

ஆறும் பயணம்

மனைவி மக்களுடனும், நண்பர்களுடனும் நீண்ட நாட்களை இனிதாகக் கழித்தேன். நான் கப்பல் பயணத்தை மறப்பதற்காக அவர்கள் பல

வழிகளிலும் முயன்றனர். ஆனால் என் மனம் வேறு எதிலும் லயிக்கவில்லை. எனவே, ஒரு புதிய கப்பலை எடுத்துக் கொண்டு நண்பர்களுடன் ஒரு நீண்ட பயணத்தைத் துவக்கினேன்.

ஆரம்ப முதலே எதுவும் சரியாக அமையவில்லை. புயலும், சூறாவளியும் கப்பலைத் திசை திருப்பி விட்டன. பாறைகள் சூழ்ந்த பிரதேசத்தில் கப்பல் தள்ளப்பட்டது. பாறையில் மோதி எந்த நிமிஷம் கப்பல் உடையுமோ என்று நாங்கள் அச்சப் பட்டோம். காற்று கப்பலைத் தள்ளிச் சென்றது. எங்களால் அதை நிறுத்த முடியவில்லை. நாங்கள் பயந்தது போலவே, கப்பல் ஒரு பாறையில் மோதிச் சுக்கல் சுக்கலாக உடைந்தது. சில மூட்டை முடிச்சுக்களுடன் நானும் சில நண்பர்களும் ஒரு பாறை மீது தூக்கி எறியப்பட்டோம். மற்றவர்களைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

பாறையில் கிடந்த உடைந்த மரத் துண்டுகளும், மனித எலும்புகளும் எங்களை வரவேற்றன. அருகிலேயே விலை மதிப்பற்ற ஒளிக் கற்களை அலைகள் ஒதுக்கியிருந்தன. துக்கமும், மகிழ்ச்சியுமாக என் நண்பர்கள் மாறி மாறி உணர்ச்சி வசப்பட்டனர்.

பாறையின் உச்சியிலிருந்து ஓர் ஆறு வீழ்ந்து கொண்டிருந்தது. எதிர்ப் புறத்தில் தெரிந்த ஒரு குகைக்குள் அது வேகமாகப் பாய்ந்தது. குகையின் இரு புறங்களிலும், மாணிக்கம், வைரம், வைடூரியம் முதலிய நவமணிகளும் குவிந்து கிடந்தன. ஆனால், அந்தக் கற்களால் எங்களுக்கு என்ன லாபம்? அவற்றை அள்ளிச் செல்ல எங்களிடம் கப்பல் இல்லை. அந்தக் கடல், கப்பல்கள் போகும் வழக்கமான பாதையில் இல்லை. மேலும் எங்களிடம் உணவு இருப்புக் குறைந்து கொண்டே போயிற்று. உணவில்லாமல் நண்பர்கள் ஒவ்வொருவராக உயிர் விட்டனர். கடைசியில் நான் மட்டும் மிஞ்சினேன். அந்தப் பாறை மேலே கிடந்து ஆகாரமில்லாமல் உயிர் நீப்பதை விட ஆறு பாய்ந்த அந்த இருண்ட குகைக்குள் சென்று வாழ வழி தேடலாம் என்று எண்ணினேன்.

கட்டைகளை இணைத்து ஒரு கட்டுமரம் தயாரித்தேன். மூட்டைகளில் நவமணிகளை நிரப்பினேன். கட்டுமரம் புறப்பட்டது. ஆற்றுவெள்ளம் அதை அந்தக் கரிய குகை வழியே அடித்துச் சென்றது. நான் உறக்கத்தில் ஆழ்ந்தேன். கண்விழித்த போது கட்டுமரம் கரையில் கிடந்தது. என்னைச் சுற்றி நீக்ரோ மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் என்னை உபசரித்துத் தங்கள் சுல்தானிடம் அழைத்துச் சென்றனர்.

சுல்தானுக்குப் பரிசுகள் கொடுத்தேன். அவர் என்னை மரியாதையோடு நடத்தினார். அந்த நாட்டின் பெயர் செரின் தீப் என்றும், அது ஒரு வல்லரசு என்றும் அறிந்து கொண்டேன். நான் திரும்பிச் செல்ல அவர் கப்பல் ஏற்பாடு செய்தார். மேலும், பாக்தாத்தின் புகழ் பெற்ற காலிப்பான அருன்—அல்—ரஷீத்திற்கும் தம் நட்பின் அடையாளமாக அன்பளிப்பும் கடிதமும் கொடுத்தார்.



சண்டை ஓய்ந்தது!

நேற்று முன் தினம் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் ஏதோ தகராறு. இரண்டு நாளாகப் பேசவே இல்லை. பேச்சு, செய்கை எல்லாம் என் மூலம்தான். எனக்கு என்ன செய்வது என்றே தோன்றவில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை. என் வகுப்பு டீச்சரிடம் சென்று, ''டீச்சர், இன்று மாலை கட்டாயம் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டேன். டீச்சரும் சம்மதித்தார். மாலையில் டீச்சரைப்பார்த்ததும், நைசாக நான் நழுவி விட்டேன். அம்மாவும், அப்பாவும் டீச்சரை, சேர்ந்தே வரவேற்றனர். கலகலப்பாகப் பேசித்தானே ஆகவேண்டும்? நான் வீடு திரும்பியபோது ஒரே சிரிப்பு; மகிழ்ச்சி; பேச்சு; ஆரவாரம்தான்! நான்தான் டீச்சரை வரச் சொன்னேன் என்று டீச்சர் சொல்லியிருப்பார்களா?

—பா. ராகவன் (822), கேளம்பாக்கம்

நான் பாக்தாத் திரும்பியதும் காலிப்பைச் சந்தித்து அன்பளிப்புக்களைச் சமர்ப்பித்தேன். அவர் மகிழ்ந்தார். செரின் தீப் சுல்தானின் வல்லமைகளைக் கேட்டு வியந்தார்.

கடைசிப் பயணம்

ஆறாவது பயணத்திற்குப் பிறகு இனிமேல் கடலில் போகாமல் ஓய்வு எடுத்துக் கொள்வதெனத் தீர்மானித்திருந்தேன். ஒருநாள் காலிப் என்னை அழைத்தார். செரின் தீப் சுல்தானுக்கு ஒரு கடிதமும், பரிசுகளும் கொடுத்து வருமாறு எனக்குக் கட்டளையிட்டார். நான் மறுத்துப் பேசியும் பயனில்லை. மீண்டும் பயணம் போகும்படி ஆயிற்று.

காலிப்பின் கட்டளைப்படியே செரின் தீப் சுல்தானைச் சந்தித்துப் பரிசுகளைக் கொடுத்துவிட்டுத் திரும்பினேன். வழியில் கடல் கொள்ளைக்காரர்கள் என்னையும், என்னைச் சேர்ந்தவர்களையும் தாக்கிச் சிறைப்பிடித்தனர். அடுத்த தீவில் நாங்கள் அடிமைகளாக விற்கப்பட்டோம். என்னை வாங்கிய எஜமானன் யானைத் தந்தங்களை விற்கும் ஒரு வியாபாரி. யானைகளை வேட்டையாட அவர் எனக்குச் சொல்லிக் கொடுத்தார்.

அவர் சொன்னபடியே ஒரு பெரிய வில்லும், அம்பும் எடுத்துக்கொண்டு ஒரு மரத்தின் மேல் ஏறி அமர்ந்தேன். இரவெல்லாம் தூங்காமல் காத்திருந்தேன். விடியற்காலையில் ஒரு யானைக் கூட்டம் பிளிறிக்கொண்டே என்னைக் கடந்தது. அம்புகளைப் பொழிந்தேன். ஒரு பெரிய யானை வீழ்ந்தது. எஜமானனை அழைத்து வந்து இருவருமாகத் தந்தங்களை வெட்டி எடுத்தோம். உடலைப் புதைத்தோம். இப்படியே, பல யானைகளைக் கொன்று தந்தங்கள் சேகரித்தோம்.

ஒருநாள் வில்லும், அம்பும் ஏந்திக் கொண்டு வழக்கம் போல் அந்த மரத்தின் உச்சியில் ஒளிந்திருந்தேன். யானைக் கூட்டம் வந்தது. ஆனால், மரத்தைக் கடந்து செல்லவில்லை. யானைகள் மரத்தைச் சூழ்ந்தன. துதிக்கையை உயர்த்தி அலறின. காலால் தரையை உதைத்தன. பூமி அதிர்ந்தது. ஒரு பெரிய யானை நான் இருந்த மரத்தை வேரோடு பிடுங்கிக் கீழே சாய்த்தது. பயத்தால் தலை சுற்றி யானைகளின் நடுவில் நான் விழுந்தேன். ஒரு யானை தன் நீண்ட துதிக்கையால் என்னை அலாக்காகத் தூக்கியது. முதுகில் வைத்துக்கொண்டு காட்டுக்குள் ஓடியது.

ஒரு திறந்தவெளியில் என்னைக் கீழே வைத்துவிட்டு அந்த யானை திரும்பிச் சென்றது. சுற்றிலும் பார்த்தேன். யானைகளின் எலும்புகளும், தந்தங்களும் குன்று போல் குவிந்து கிடந்தன. தந்தங்களுக்காக இனி யானைகளைக் கொல்ல வேண்டிய அவசியமே இல்லை என்று அந்த யானை சொல்லாமல் சொல்லியது. யானையின் அறிவுக் கூர்மையை எண்ணி எண்ணி வியந்தேன். நானும் என் எஜமானனும் அந்தத் தந்தங்களைப் பங்கு போட்டுக் கொண்டோம். எனக்கு விடுதலை அளித்து அவர் சந்தோஷமாக என்னை வழி அனுப்பினார். பாக்தாத்தை அடைந்து காலிப்பிடம் என் அனுபவங்களை எடுத்துச் சொன்னேன். அதற்குப் பிறகு என் வாழ்நாட்களை உறவினரோடு அமைதியாகக் கழித்து வருகிறேன்.

Arabian Nights என்ற அரபு நாடோடிக் கதையின் ஒரு பகுதியான Sindbad the Sailor என்னும் கதையின் சுருக்கமே இது.

எளிமையின் சிகரம்!



பாரதத்தின் முதல் ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரசாத் தமது மாதச் சம்பளமான ரூ. 10,000—த்தை ரூ. 5,000—க்கும், பின்னர் ரூ. 2,500—க்கும் குறைத்துக் கொண்டார்!

அவருடைய வங்கி இருப்பு (Bank Balance) என்றுமே ரூ. 1000—த்தைத் தாண்டியதில்லை!

பதவி விலகி, தனது சொந்த ஊரான பாட்னாவுக்குச் சென்றபோது, அவருக்கெனச் சொந்தமாக ஒரு கார் கிடையாது!

—வானொலியில் கேட்டது— வி. லலிதா

வார்த்தை எதற்கு?






வறுமை சிரிப்பு!

விநாயகர் பூஜை

சி. ஆர். நாகராஜன்



விடிந்தால் விநாயகர் பூஜை. பாலுவுக்கு இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை. சாயங்காலமே கடைக்குப் போய்ப் பிள்ளையார், பிள்ளையார் குடை வாங்கி வந்தாகிவிட்டது. அவல், பொரி, சோளம், நாவல்பழம், விளாம்பழம், வாழைப்பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு, கற்பூரம், ஊதுபத்தி, முதலிய பூஜைக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் வாங்கி வந்தாகிவிட்டது. பூ ஒன்றுதான் பாக்கி. அதற்கு ஏகப்பட்ட கிராக்கி. யானை விலை, குதிரை விலை சொல்கிறான். பூ எப்படிச் சேகரிப்பது? யார் வீட்டுத் தோட்டத்தில் பூ நிறைய இருக்கிறது? இதுவே இரவு முழுவதும் பாலுவின் சிந்தனையாக இருந்தது.

பாலுவுக்கு ஏழு வயதுதான் ஆகிறது. மூன்றாவது படிக்கிறான். நல்ல சிகப்பு நிறம். சுருட்டை சுருட்டையாக நிறையத் தலைமுடி. களையான அழகு. முகத்தில் குறும்பும் அறிவும் கூத்தாடும் கண்கள். அவனுக்குப் பண்டிகை வந்து விட்டால் கொண்டாட்டம்தான். அம்மா செய்யும் பட்சணங்களை நினைத்தால் இப்போதும் அவனுக்கு நாவில் நீர் ஊறும். நாலு வயதுத் தங்கை மாலுவை லீவுநாள் முழுவதும் சீண்டி விளையாடலாமே! அவளைத் 'தகப்பனார்' என்று சொல்லச் சொன்னால் அவள் தனது மழலையில் 'தபக்கனார்' என்று தப்புத் தப்பாகச் சொல்லுவாள். பாலு 'ஓ' என்று சத்தம் போட்டுச் சிரித்து வீட்டையே இரண்டுபடுத்துவான். நாள் முழுவதும் இப்படியே கேலியும் கிண்டலும் சிரிப்புமாக ஓடிவிடும்.

பிள்ளையாரைப் பற்றி அம்மா அவனுக்கு நிறையப் பாடல்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறாள். அப்பாட்டுக்களை அழகான குரலில் கணீரெனப் பாடுவான். சரியாகச் சொல்லாவிட்டால் அம்மா திட்டுவாள்.

'வாயிலே என்ன கொழுக்கட்டையா வெச்சிண்டிருக்கே?' எனக் கேட்பாள். பிள்ளையார் சதுர்த்தி அன்று நிஜமாகவே வாயிலே கொழுக்கட்டையை வச்சிண்டு பாட வேண்டும். அதைக் கற்பனை செய்து பார்த்தான். உடனே அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது!

கோடி வீட்டு சரோஜா மாமி வீட்டில்தான் பெரிய தோட்டம் இருக்கிறது. நிறைய விதம் விதமான பூக்கள் பூக்கிறது. ஆனால் மாமி மகா கண்டிப்பு. யாரையும் உள்ளே நுழையவே விடமாட்டாள். பாலு

போல வருஷம் மாமி வீட்டுக் கொலுவுக்குப் போயிருக்கிறான்! அப்பா! எவ்வளவு பொம்மைகள்! போதாததற்கு அந்த ஹால் முழுவதும் நிறைய சுவாமி படங்கள் வேறு! தோட்டத்தில் பூத்த பூக்களைக்கொண்டு மாலை தொடுத்து எல்லாப் படங்களுக்கும் மாலை போட்டிருந்தார்கள். சங்கு புஷ்பம், பாரிஜாதம், செம்பருத்தி, நந்தியாவட்டை எனப் பல்வேறு நிறப் புஷ்பங்கள் மாலைகளாகப் படங்களை அலங்கரித்திருந்தன. ஆனாலும், மாமி மகாமோசம். அம்மாவுக்கு வெற்றிலை பாக்கு, பழத்துடன் சுண்டல் பெரிய பொட்டலமாகக் கொடுத்தாள். பாலுவுக்குச் சின்ன ஸ்பூனால் துக்கினியூண்டு சுண்டல்தான் கொடுத்தாள். அதிலும் கீழே வேறு சிந்திவிட்டது. ''சுண்டலை வாங்கக் கூடத் துப்பில்லை'' —எனத் திட்டும் கிடைத்தது. அம்மாவுக்குப் பின்னால் மறைந்து கொண்டான்.

கோழி கூவியது. அம்மா வாசலில் சாணி தெளித்துக் கோலம் போட எழுந்து விட்டாள். இவனும் கூடவே வாசலுக்குச் சென்றான். தெருவில் எல்லோரும் கோலம் போட்டுக்கொண்டு இருந்தார்கள். கோடி வீட்டு சரோஜா மாமிகூடக் கோலம் போட்டுக் கொண்டு இருந்தாள். பாலு இது தான் சமயம் என்று உடனே புறப்பட்டான். தெருவைச் சுற்றிக் கொண்டு வந்து வேலிப்படலைத் தள்ளிக்கொண்டு சரோஜா மாமி வீட்டுத் தோட்டத்தில் நுழைந்தான். அங்கு செடிகளிலும், மரங்களிலும் ஒரு பூவைக்கூடக் காணோம்! எல்லாம் ஏற்கெனவே பறிக்கப்பட்டுவிட்டன. பாரிஜாத மரத்தில் மட்டும் சில பூக்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. அந்த மரத்தை உலுக்கினால் பூக்கள் விழும். பொறுக்கிக் கொண்டு போகலாம் என்று நினைத்தான். சரோஜா மாமியின் அனுமதியில்லாமல் பறிக்கலாமா?

''மாமி, பாரிஜாத மரத்திலே கொஞ்சம் பூ இருக்கு. பூஜைக்கு வேணும்...'' என்று இழுத்தான்.


''அதெல்லாம் முடியாது. எனக்கு அர்ச்சனைக்குப் பூ பற்றாது'' — எனக் கூறிப் பாலுவை அர்ச்சிக்க ஆரம்பித்தாள். பாலுவுக்கு ஏமாற்றமாகப் போய் விட்டது.

''உங்க வீட்டிலும் பிள்ளையார் பூஜை; எங்க வீட்டிலும் பிள்ளையார் பூஜை. நீங்களும் பிள்ளையாருக்குத்தான் பூ போடப் போறீங்க. நானும் பிள்ளையாருக்குப் போடத்தான் பூ கேட்கிறேன். நான் மட்டும் இந்தப் பாரிஜாதப் பூவை என் தங்கை மாலுவுக்கா சூட்டப் போகிறேன். இல்லை, நீங்கள்தான் தலைக்கு வச்சுக்கப் போறீங்களா? பூஜைக்குத்தானே? யார் போட்டா என்ன? எல்லாம் பிள்ளையாருக்குத்தானே போய்ச் சேரப் போகிறது?'' — என்று ஆத்திரம் தீரக் கத்தினான் பாலு. சரோஜா மாமி அப்படியே திறந்த வாய் மூடாமல் விக்கித்து நின்றாள்.

''நீங்க பூக் குடுக்காட்டி என்ன? நான் பிள்ளையாருக்குப் பூ வைக்கிற இடத்தில் புல்லையாவது வைக்கிறேன்'' —எனக் கூறிவிட்டு ஓடிவந்து விட்டான் பாலு.

ரோஷமாக வயற்காட்டுப் பக்கம் போய் நிறைய அருகம்புல்லைப் பிடுங்கிக் கொண்டு வந்தான். காட்டுவெளி ஓரமாகச் சென்று எருக்கம் பூக்களைச் சேகரித்தான். வீடு திரும்பினான், வெற்றிப் பெருமிதத்துடன்.

''காலங்காத்தாலே எழுந்ததும் எங்கேடா ஊர் சுற்றிவிட்டு வரே?'' என அம்மா பாலுவைக் கடிந்து கொண்டு குளிக்க விரட்டினாள். குளித்து முடித்து விபூதி இட்டுக் கொண்டான்; பிறகு பட்டுக் கட்டிக்கொண்டு அருகம்புல் மாலை கட்டினான். எருக்கம் பூவை மாலையாகக் கோத்தான். உதிரியாக நிறையப் பூக்களும், புல்



பறப்பன

ஊர்வன, பறப்பன பற்றிய கட்டுரையில் 'பறப்பன' என்ற தலைப்பில் சுப்பு எழுதியவை:
அப்பளக் குழவி, கரண்டி, துடைப்பக் கட்டை.

-கீழை அ. கதிர்வேல்

லும் மிஞ்சின. அம்மா பூஜைக்கு வேண்டிய எல்லாச் சாமான்களையும் தயாராக எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள். உள்ளே சமையல் அறையிலிருந்து நைவேத்தியத்தின் மணம் மூக்கைத் துளைத்தது.

''எல்லாம் ரெடியா?'' — எனக் கேட்டுக்கொண்டே சாஸ்திரிகள் பூஜை செய்து வைக்க உள்ளே நுழைந்தார். எருக்கம்பூ மாலையும், அருகம்புல் மாலையும் அணிந்து அழகாக, கம்பீரமாகக் காட்சியளித்த கஜமுகனைக் கண்டு அவர் அசந்துவிட்டார்!

''உங்களுக்கு மட்டும் எங்கே இவ்வளவு பூ கிடைத்தது? மாலை அழகாயிருக்கே!'' — சாஸ்திரிகளின் குரல் ஆச்சரியத்துடன் ஒலித்தது.

''எங்க பாலுதான் எங்கெங்கெல்லாமோ அலைந்து திரிந்து கொண்டுவந்தான்'' — அம்மாவின் குரலில் பெருமை தொனித்தது.

''விநாயகருக்கு இந்த இரண்டும்தான் சிரேஷ்டமானது. காஞ்சிப் பெரியவாள்கூட, ''பகவானை நினைச்சிண்டு பூ கிடைக்காட்டி நாலு துளசிதளத்தையோ, வேறு பத்திரத்தையோ போட்டால்கூட பகவான் மகிழ்ந்து அருள் செய்வார். உண்மையான பக்திக்கு என்றும் கடவுள் அருள்உண்டு' என்று சொல்லியிருக்கிறார்கள்'' என்றார்.

அருகம்புல்லைச் சாத்திவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டு கைகூப்பி, இனிமையாகப் பாடினான் பாலு.

அவனது இனிமையான, எடுப்பான குரலே, அவனுக்குப் பிள்ளையார் அருள் கிடைத்ததை வீடு முழுவதும் எதிரொலித்துப் பறைசாற்றியது. கண் திறந்து விழுந்து வணங்கிய பாலுவை விநாயகர் புன்முறுவலுடன் ஆசீர்வாதம் செய்வதுபோல, கற்பூர ஒளியினில் தெரிந்தார்.



தெரியாது போனால் தெரிந்து கொள்ளுங்கள்!

- ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெறும்போது ஆரம்ப தினத்தன்று போட்டியில் கலந்து கொள்ளும் நாடுகளின் அணிவகுப்பு நடைபெறுமல்லவா? அந்த அணிவகுப்பில் எப்போதுமே கிரீஸ் நாடுதான் தலைமை தாங்கும். காரணம்? ஒலிம்பிக் பந்தயங்களை ஆரம்பித்து வைத்தது கிரீஸ் நாடு என்பதால் அளிக்கப்படும் கௌரவம் அது. அதேபோல் ஒலிம்பிக் பந்தயங்களை ஏற்று நடத்துகின்ற நாடு அணிவகுப்பின் கடைசியில் வர வேண்டும்.

- அன்னை தெரசாவின் உண்மைப் பெயர் என்ன தெரியுமா? அக்னஸ் கோயின்ஷா பிஜக்ஸ்யூ (Agnes Goinxhe Bejaxhiu)

- உலகிலேயே மிகப் பெரிய ஓட்டல் மாஸ்கோவில் உள்ள ஓட்டல் 'ரோஸ்ஸியா'தான். இந்த ஓட்டலில் மொத்தம் 3200 அறைகள் உள்ளன!

- 'லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன்' சின்னத்தில் குறிக்கப்பட்டிருக்கும் சொல் கீதையிலிருந்து எடுக்கப்பட்ட வார்த்தையாகும். 'யோகக்ஷேமம் வஹாம்யாஹம்' என்பதன் பொருள்: 'உங்களுடைய நலனை நான் கவனித்துக் கொள்கிறேன்.'

- 'பஞ்ச்' (Punch) என்ற பத்திரிகையின் பெயர் எப்படி ஏற்பட்டது? 'பஞ்ச் அண்ட் ஜூடி' என்பது பிரசித்தி பெற்ற ஒரு பொம்மலாட்ட நிகழ்ச்சி. அதில் புகழ்பெற்ற கதாநாயகனின் பெயர்தான் பஞ்ச். அவனுடைய நினைவாகத்தான் பத்திரிகைக்கு 'பஞ்ச்' எனப் பெயர் சூட்டப்பட்டது.

- சமீப காலமாகப் புகழ்பெற்றுள்ள 'டிஸ்கோ' என்ற சொல்லுக்குரிய ஒரு தீவு, மேற்கு கிரீன்லாண்டு, டேவிஸ் முனைக்கருகில் உள்ளது. ஏற்கெனவே 'டிஸ்கோ ஐலண்டு' என்றழைக்கப்படும் இந்தத் தீவைச் சில சமயங்களில் கரடித் தீவு (Bear Island) என்றும் குறிப்பிடுவார்கள்.

தொகுப்பு: அ. குமார்



சின்னான் நடத்திய நாடகம்

எம். ஆர். ராஜன்

துரைக்கண்ணு ஒரு பெரிய ஊழல் பேர்வழி. அவன் செய்யும் மோசடிகளுக்கு எல்லையில்லாமற் போயிற்று. யார் பேரையாவது சொல்லி பொன் விழா — மணிவிழா என்பான் — பாராட்டு விழா என்பான்— பணமுடிப்புத் தருவதாகச் சொல்லுவான். வியாபாரிகளிடம் வசூல் செய்வான். அவன் ஏழை எளியவர்களைக் கூட விட்டு வைத்ததில்லை.

ஒரு பெரிய நோட்டுப் புத்தகம் வாங்கி அதில் இவனே பெயர்களை எழுதி ரூபாய் பத்து, ரூபாய் ஐந்து என்று போட்டு— பொது மக்களை நம்ப வைத்து, முடிந்த அளவுக்கு வசூல் செய்வான் —கொஞ்சம் செலவு செய்வான் — விழா மாதிரி ஒரு ஏற்பாடு செய்வான் — விளக்கு—மைக்கு மற்ற இதர செலவுக்கெல்லாம் கொடுக்கும் அட்வான்ஸ் தொகையோடு சரி... விழா முடிந்தால் பைசா பெயராது. அப்படியே சுருட்டி விடுவான்!

சமீப காலத்தில் அவன் தொடங்கிய மோசடிதான் படித்தவர் — படிக்காதவர்களுக்கெல்லாம் அரபு நாடுகளில் வேலை வாங்கித் தருவதாகப் பணம் வசூல் செய்யும் மோசடி!

அவன் பலே மோசடிக்காரன் என்று தெரிந்திருந்தும், அவன் வாய்ப் பேச்சில் மயங்கி ஏமாந்தவர்கள் ஏராளம். சரவணன் அதில் ஒருவன். சரவணன் தானாகவே துரைக்கண்ணுவிடம் மாட்டவில்லை. சுந்தரமூர்த்தி வேலைக்கு அலைந்தான். சரவணனும் வேலைக்கு அலைந்தான். இரண்டு பேரும் ஒன்றாய்ப் படித்தவர்கள். சுந்தரமூர்த்தியின் சிற்றப்பா, துரைக்கண்ணுவைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், இரண்டு பேருக்கும் வேலை வாங்கித் தருமாறு துரைக்கண்ணுவிடம் சொல்லி வைத்தார். துரைக்கண்ணு முதலில் ஆரம்ப அவசியச் செலவுகளுக்காகஎன்று சொல்லி இரண்டு பேரிடமும் ஆயிரம் ஆயிரமென்று இரண்டாயிரம் வாங்கிக் கொண்டான். வேலை வாங்கித் தந்தபின் மீதி நாலாயிரம் ரூபாய் வீதம் இருவருமாக எட்டாயிரம் தரவேண்டும் என்று பேசி முடித்தான்.

துரைக்கண்ணுவுக்கும் இவர்களிடம் கொஞ்சம் பயம்தான். அதனால்தான் மோசடியின் அளவைக் குறைத்துத் தலைக்கு ஆயிரம் என்று வாங்கிக் கொண்டான். இதுவே வேறு யாராவதாக இருந்தால் ஐந்தாயிரத்துக்குக் குறைவில்லாமல் வாங்கியிருப்பான்.

ஆறு மாதமாயிற்று. சரவணன்— சுந்தரமூர்த்தியோடு இன்னும்ஏழெட்டுப் பேரிடம் அவன் இதே ஏமாற்று வேலையைச் செய்திருந்தான். யாராவது பணம் கேட்டு வந்தால், இரண்டுநாள் கழித்து வரச் சொல்லுவான். ''இதோ வேலைக்காக அதைச் செய்கிறேன்; இதைச் செய்கிறேன்'' என்று எதிலாவது ஒரு பாரத்தில் கையெழுத்து வாங்குவான். அவர்களும் நம்பி விடுவார்கள். மற்றவர்களெல்லாம் வெளியூர்க்காரர்கள் — அதனால், அவனுக்கு அவர்களைச் சமாளிப்பது சுலபமாக இருந்தது. ஆனால், பாவம்! — சரவணனைச் சமாளிப்பது ரொம்பவும் கஷ்டமாயிற்று.

தாங்கள் ஏமாற்றப்படுவதாக உணர்ந்ததும் — சரவணனும் சுந்தரமூர்த்தியும் சின்னானைப் பற்றி ஏற்கெனவே கேள்விப் பட்டிருந்ததால் அவனிடம் யோசனை கேட்கப் போனார்கள்.

சின்னான் மிகவும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டான். கடைசியில் ஒரு யோசனை சொன்னான்.

''அவசரப்பட்டு வழக்குத் தொடுத்தால், சாதகமாகாமல் போய் விடும். பொறுத்ததுதான் பொறுத்தீர்கள். இன்னும் மூன்று மாதம் பொறுத்திருங்கள். அதற்குள் வாரத்துக்கொருமுறை துரைக்கண்ணுவைப் பார்த்துக் கேளுங்கள். ஆனால், அவனிடம் போகும்போது நான் சொன்

னது போல நடந்து கொள்ளுங்கள்'' என்றான்.

''சரி'' என்று ஒப்புக் கொண்டார்கள் சரவணனும், சுந்தரமூர்த்தியும்.

மூன்று மாதங்கள் ஓடிப் போயின.

மீண்டும், சரவணன், சுந்தரமூர்த்தி இருவரும் சின்னானைப் பார்த்தார்கள். சின்னான் நாட்டாண்மைக்காரரிடம் அழைத்துப் போனான்.

விவரங்களைக் கூறினான்.

''ஐயா, இவங்க செய்திருப்பது முட்டாள்தனமான காரியம்தான். ஆனால், துரைக்கண்ணுவைப் பற்றி எல்லோருக்குமே தெரியும். அவனை

கொண்டார். ஆனால், அவரே பதிலும் சொன்னார்: ''உன் மேலே எனக்கு நம்பிக்கை இருக்கு சின்னான்... அதனாலே முயற்சி பண்ணிப் பார்ப்போம்.... நான் துரைக்கண்ணுவை அழைச்சுக்கிட்டு வரச் சொல்றேன்.''

துரைக்கண்ணுவுக்கு நாட்டாண்மை ஆள் அனுப்பினார். துரைக்கண்ணுவுக்கு நாட்டாண்மைக்காரர் அழைக்கிறார் என்றதுமே கொஞ்சம் உள்ளுக்குள்ளே பயம்தான்! இதுவரை இவன் செய்த மோசடிகளிலெல்லாம் பாதிக்கப்பட்ட எவரும் பஞ்சாயத்து, வழக்கு, என்று போனதில்லை. அவன்



எதிர்த்து வழக்குப் போடறது அவ்வளவு உசிதமா இல்லே... ஆனால், வழக்குன்னு ஒன்று போட்டாலும் இவங்க ஜெயிக்கிறாப் போலே நிறையச் சாட்சியங்களைத் தயார் செய்திருக்கேன். இருந்தாலும், வழக்காடாமலே நாம துரைக்கண்ணுவை வரவழைச்சு நட்பாகவே பேசிக் கேட்டுப் பார்ப்போம். சரிப்பட்டு வரல்லேன்னா இருக்கவே இருக்கு பஞ்சாயத்து வழி.''

''என்ன சின்னான்... துரைக்கண்ணு அவ்வளவு சீக்கிரமா ஒத்துக்கிட்டுப் பணத்தைக் கொடுத்துடுவான்னு நினைக்கறியா?'' — நாட்டாண்மை சந்தேகம்

வெறும் உருட்டல், மிரட்டல்களிலேயே அவர்களைப் போகவிடாமல் தடுத்து வந்தான். துணிந்து எவனாவது வழக்குப் போட்டிருப்பானோ என்று ஒரு சந்தேகம். வந்தவனைக் கேட்டான்.

''ஏய், இந்தாப்பா உன்னைத்தான்.. நாட்டாண்மை வீட்டிலே வேறு யாராவது இருக்கிறாங்களா?''

''இருக்காங்க... மூணு நாலு பேரு இருக்கிறாங்க...''

''யாரையாவது உனக்குத் தெரியுமா...?''

''நம்ம சின்னான் இருக்கான். கூட இரண்டு பேர் இருக்கிறாங்க...''

சின்னன் என்றதுமே துரைக்கண்ணுவுக்குச் சுரீரென்று மிளகாய் கடித்தது போலிருந்தது. ஏதோ விபரீதம் நேரப் போகிறது என்று புரிந்துகொண்டான். சமாளித்துக்கொண்டு கிளம்பினான். கூட யாரையும் அழைத்துக் கொள்ளவில்லை. எது நடந்தாலும் மற்றவர்களுக்குத் தெரிந்தால் மானம் மரியாதை, கௌரவம் எல்லாம் போய் விடுமே!

''வாங்க.... வாங்க... துரைக்கண்ணு....'' — நாட்டாண்மை.

''ஐயா, ரொம்ப அவசரமாக் கூட்டியாறச் சொன்னீங்களாம்... தலைவரைப் பார்க்கக் கிளம்பிக்கிட்டு இருந்தேன்... இருந்தாலும் நாட்டாண்மை கூப்பிடறீங்களே... கண்டுக்கிட்டுப் போயிடலாமேன்னு வந்தேன்...என்ன. தலைவர்கிட்டே எதுனாச்சும் சொல்லி... கிராமத்துக்கு எதுனாச்சும்... விளக்கு—ரோடு.... — போடச் சொல்லணுங்களா?''

அப்போதும் தன் வறட்டு ஜம்பத்தை விடவில்லை துரைக்கண்ணு.

''அதெல்லாம் ஒண்ணும் பெரிய சேதி இல்லே... துரைக்கண்ணு..... தலைவர் வரைக்கும் போகக்கூடாதே விவகாரம்னுதான். நேரிடையா உன்கிட்டேயே பேசிச் சமாதானமா முடிவு செய்துடலாம்னு...''

''என்ன... ஐயா... புதிர் போடறீங்க....? எதுவானாலும் சொல்லிப் புடுங்க... நமக்குள்ளே என்னங்க ஒளிவு — மறைவெல்லாம்...''

''இவங்க ரெண்டு பேருக்கும் வேலை வாங்கித் தருகிறதாச் சொல்லி ஐயாயிரம் ரூபாய் பணம் வாங்கிக்கிட்டீங்களாம்.... படிச்சவங்க... பாவம்.... வேலை கிடைக்கல்லே ... அந்தப் பணத்தை அப்படியே திருப்பிக் கொடுத்துட்டீங்கன்னு தேவலை... வட்டியில்லாட்டியும் போகுது... வேலை கிடைக்காட்டியும் பரவாயில்லே... அந்தப் பணத்தை வச்சு எங்களுக்கும்.... கடை வச்சுப் பொழைச்சுக்கிறோங்களாம்....''

''அடப்பாவிகளா... நான்தான் மோசடிக்காரன்னு... இவனுங்க எனக்கு மேலே பெரிய மோசடிக்காரனுங்களா இருக்கானுங்களா!.... கொடுத்தது ஆளுக்கு ஆயிரம்தான்... ஐயாயிரம்னு வாய் கூசாமப் புளுகிறானுங்களே! போற போக்கைப் பார்த்தால் வட்டியும் கேட்பாங்க போல இருக்கே!'' என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டான். வெளியே சொல்ல முடியுமா...? உள்ளுக்குள் புழுங்கினாலும் வாய்ச் சவடாலுக்கு என்ன பஞ்சமா துரைக்கண்ணுவிடம்?

''நானு... இவங்க கிட்டே யா... பணமா.... வாங்கினேனு?''

—ஒன்றும் தெரியாதது போல நடித்தான் துரைக்கண்ணு.

''பச்சையாப் பொய் சொல்றாரு இவரு... போன வாரம்கூட நான் நம்ம போஸ்டிரி முருகேசனோடே போய்க் கேட்டேன்....என்ன தம்பி... இப்படித் தினம், தினம் வந்து தொந்தரவு கொடுக்கறீங்க... உங்க பணம் எங்கேயும் போகாதுன்னு சொன்னாரு.... இப்ப ஒரேயடியா ஒண்ணும் தெரியாத மாதிரி நடிக்கிறாரு... இவரு



டைப்ரைட்டர்

தட்டு எழுத்துப் பொறியைப் பார்.
'பட், பட்' என்று ஒலியைக் கேள்.

ஒரே தடவையில் ஒன்பது படிகள்
ஒழுங்காய் அடித்துத் தருவதைப் பார்!

விரலின் எழுத்து நினைவாக
விடாமல் அடித்தால் வந்துவிடும்!

விந்தை அல்ல; பயிற்சியடா!
இடைவிடாத முயற்சியடா!

பயிற்சியும் முயற்சியும் கூடிவிடின்.
அயர்ச்சியும், தளர்ச்சியும் ஓடிவிடும்!

—இராச கார்த்திகேயன்

இந்த மாதிரி செய்துட்டாருன்னு என்ன செய்யறதுன்னுதான், நானும் சுந்தரமூர்த்தியும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆளாக் கூப்பிட்டுக்கிட்டுப் போய்க் கேட்டோம் — இது தெரிஞ்சு தான் சின்னான் முன்னாடியே யாரை யாவது சாட்சி மாதிரி அழைச்சுக் கிட்டுப் போங்கன்னாரு...''

''ஏன் நீங்க அவசரப்படறீங்க.... படிச்ச புள்ளேங்கதானே? நீங்க உங்க அவசரத்தைத்தான் பார்க்கறீங்க.... நீங்க போற போக்கைப் பார்த்தா.... வழக்கு... அது, இதுன்னு போயிடுவீங்க போலே இருக்கே... அவரோட நிலையைப் பார்க்க வேணுமா....? பஞ்சாயத்து அது, இதுன்னு போய் நின்னா... அவரோட கௌரவம், மானம்... மரியாதை... என்ன ஆகிறதாம்? — இங்கேயே சுமுகமாகத் தீர்த்துக்கப் பாருங்க... அதான் நாட்டாண்மை ஐயா சொல்லிப்புட்டாங்களே...''

நறுக்குத் தெறித்தாற்போல் சின்னான் பேசி... துரைக்கண்ணுவுக்கு அவன் நிலைமை எவ்வளவு மோசமாகக் கூடும்... என்பதை ஒரு நாடகமாடி உணர்த்தி விட்டான்...

வழக்கு-பஞ்சாயத்து என்று போனால் வசமாக மாட்டிக் கொண்டு விடுவோம். இரண்டாயிரத்துக்குப் பதிலாகப் பத்தாயிரம் தர வேண்டி வந்துவிடுமே!' என்று எண்ணிய துரைக்கண்ணு — நாட்டாண்மைக்காரரிடம் உண்மையை ஒப்புக் கொண்டான். இரண்டு நாள் தவணை கேட்டான்..... விஷயம் வெளியே தெரிய வேண்டாம் என்றும் எல்லோரையும் கேட்டுக் கொண்டான்.

சொன்னது போலவே இரண்டு நாளில் பணத்தைக் கொண்டு வந்து நாட்டாண்மை — மற்றும் சின்னான் முன்னிலையில் சரவணனுக்கும் சுந்தரமூர்த்திக்கும் கொடுத்து விட்டான் துரைக்கண்ணு... அது மட்டுமா? இனிமேல் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்றும் சத்தியம் செய்து கொடுத்தான். வழக்குத் தொடராமலே விவகாரம் முடிந்தது!

சரவணனுக்கும் — சுந்தரமூர்த்திக்கும் அப்போதுதான் நிம்மதியே வந்தது! சின்னானை மனதாரப் பாராட்டினார்கள். படித்திருந்தும் தாங்கள் முட்டாள்தனமான காரியம் செய்ததை எண்ணி வெட்கினார்கள்.

''ஏங்க... நீங்க... படிச்சவங்க... நீங்களெல்லாம் வேற்று நாட்டுக்குப் போயிட்டா... நம்ம கிராமங்களை யாருங்க கவனிப்பாங்க... இங்கேயே ஏதாவது தொழில் செய்து... கிராமங்களை முன்னேற்றக் கூடாதா?....'' என்று கேட்டான் சின்னான்.

கிராமத்தில் இப்போது சரவணன்—சுந்தரமூர்த்தி இருவரும் சேர்ந்து தொடங்கிய உர விற்பனை நிலையம் சக்கைப் போடு போடுகிறது.

சின்னான்....

அவனுக்குத்தான் சிக்கலான வழக்குகள் வந்துகொண்டே இருக்கின்றனவே!



பந்தயம்

கடவுள் ஒரு பந்தயம் வைத்தார்.

காட்டில் உள்ள மிருகங்கள், பறவைகள், எறும்புகளும்கூடக் கலந்து கொண்டன.

விதம் விதமான உணவுகள்.... வேண்டிய மட்டும் சாப்பிடலாம் என்பது கடவுளின் ஆணை.

''உங்களுக்கு எதுவெல்லாம் பிடிக்குமோ அவற்றையெல்லாம் சாப்பிடுங்கள்... யார்தான் நிறையச் சாப்பிடுகிறீர்கள் என்று பார்க்கலாம்!'' என்றார் கடவுள்.

யானை, குதிரை, சிங்கம், புலி, மயில், வாத்து, சுண்டெலி எல்லாம் வயிறார உண்டு மகிழ்ந்து மயங்கிக் கிடந்தன.

ஒன்று மட்டும் பரபரப்பாய் ஓடிக் கொண்டிருந்தது.. அதுதான் எறும்பு..

கடவுள் கேட்டார்: ''நீ மட்டும் ஏன் சாப்பிடாமல் அலைந்து கொண்டிருக்கிறாய்?''

எறும்பு சொன்னது: ''கிடைக்கிற போது சேர்த்து வைத்துக்கொண்டால் தானே நல்லது? அப்புறம் சாவகாசமாய்ச் சாப்பிடலாம்.''

கடவுள் சிரித்துக் கொண்டார்.

எறும்புகள் இன்றும் அதே பரபரப்போடுதான் தரையில் ஊர்ந்து கொண்டிருக்கின்றன.

—சுப்ரபாலன்.

இங்கிலாந்து தேசத்துக் குட்டிக் கதைகள்

தேவி

கல்லிலே கண்ட வாள்!

முன்பு ஒரு காலத்தில், இங்கிலாந்தில் ஒரு கல் இருந்தது. அந்தக் கல்லிலே ஒரு வாள் செருகியிருந்தது. கல்லின் மேல் கீழ்க்கண்ட வாசகம் காணப்பட்டது:

''எவர் இந்த வாளை வெளியில் எடுக்கிறாரோ, அவரே இந்த நாட்டின் அரசராக வேண்டும்.''

அந்த நாட்டின் அரசர் இறந்து பல ஆண்டுகளாயின. அவருக்கு வாரிசு இல்லை. அரசராகும் ஆசையில், ஒவ்வொருவரும், அந்த வாளை இழுத்து இழுத்துப் பார்த்து அலுத்துப் போய் விட்டார்கள். பிரபுக்கள் ஒவ்வொருவரும் அரசராவதற்குப் போட்டி போட்டனர்; சண்டையிட்டனர். அதனால், நாட்டில் அமைதியே இல்லை.

ஒருநாள் சர். கே. என்பவர், பந்தயம் ஒன்றைப் பார்க்க வந்தார். கூடவே ஆர்தர் என்னும் அவருடைய வேலைக்காரப் பையனும் வந்திருந்தான்.

திடீரென்று சர். கே, ''அடடா! என் வாளை எடுத்துவர மறந்து விட்டேனே! ஆர்தர், நீ உடனே ஓடிப் போய் ஒரு வாள் கொண்டு வா'' என்றார். வாள் இல்லாமல் அவர் எங்குமே செல்ல மாட்டார்!



ஆர்தர் வாள் கொண்டு வருவதற்காக வேகமாக ஓடினான். வழியில் கல்லிலே செருகியிருந்த வாளைக் கண்டான். உடனே, அதன் அருகிலே சென்று வாளைப் பிடித்து இழுத்தான். அது கையோடு வந்துவிட்டது! அந்த வாளுடன் அவன் எஜமானனிடம் விரைவாகத் திரும்பி வந்தான்.

அங்கிருந்த பிரபுக்கள், ஆர்தர் கல்லிலிருந்து வாளைப் பிடுங்கி எடுத்துவந்தான் என்று கேள்விப்பட்டதும், அதை நம்பவில்லை. திரும்பவும் அந்த வாளை அதே கல்லில் செருகச் சொன்னார்கள். முன்பு போல் வாள் வைக்கப்பட்டது. ஆனால், அந்த வாளை எவராலுமே எடுக்க முடியவில்லை. கடைசியில், ஆர்தர் வாளைப் பிடித்து இழுத்தான். கையோடு வந்து விட்டது!

உடனே எல்லோரும் சேர்ந்து ஆர்தரை அரசராக்கினார்கள்! நாட்டில் அமைதி நிலவியது.

மனம் மாறிய தையற்காரர்

அந்தத் தையற்காரர், தொழிலில் மிகவும் கெட்டிக்காரர். ஆனாலும், பேராசைக்காரர்.

அவரிடத்திலே பலர் வேலை பார்த்து வந்தார்கள். அவர்களை அவர் நன்றாக வேலை வாங்குவார். காலை முதல் இரவு வெகு நேரம் வரை அவர்களைக் கசக்கிப் பிழிவார்.

புதிதாக அவரிடம் ஓர் இளைஞன் வேலைக்குச் சேர்ந்தான். அவனுக்கு இப்படி அவர் வேலை வாங்குவது பிடிக்கவில்லை.

ஒருநாள் இரவு எட்டு மணிக்கு அவர் மாதா கோவிலிலிருந்து தையற்கடையை நோக்கி வந்து கொண்டிருந்தார். ஜனநடமாட்டமில்லாத ஒரு தெருவில் அவர் வரும்போது, எதிரே ஓர் உருவம் தோன்றியது. தலையிலிருந்து கால் வரை வெள்ளைத் துணியால் உடலை மூடியிருந்தது. கையில்



ஒரு கொம்பு இருந்தது. அதன் நுனியில் ஒரு விளக்கு தொங்கிக் கொண்டிருந்தது.

தையற்காரரைப் பார்த்ததும், அந்த உருவம், ''நான் யார் தெரியுமா? நான்தான் தேவதூதன் காப்ரியல். என் முன்னால் மண்டியிட்டு வணங்கு. நீ செய்த பாவங்களுக்கெல்லாம் மன்னிப்புக் கேள். இல்லையேல், நீ நரகத்துக்குத்தான் போவாய்'' என்றது.

உடனே தையற்காரர் நடுநடுங்கி, மண்டியிட்டு வணங்கினார். ''நான் செய்த பாவங்களையெல்லாம் மன்னித்தருளுங்கள்'' என்று வேண்டினார்.

''இனிமேலும் உன் வேலையாட்களை ஈவு இரக்கமின்றி வெகு நேரம் வரை வேலை வாங்குவாயா?'' என்று கேட்டது அந்த உருவம்.

''இல்லை. இனி அப்படி வேலை வாங்கமாட்டேன். இது உறுதி'' என்று தையற்காரர் கூறிக் கொண்டே கண்களை மூடித் தொழுதார்.

சில விநாடிகள் சென்று நிமிர்ந்து பார்த்தார். எதிரே உருவத்தைக் காணோம்!

நேராகத் தையற்கடைக்கு வந்தார். ''நிறுத்துங்கள். இனி நீங்கள் மாலை 6 மணிக்கே வீட்டுக்குப் போகலாம். அதற்கு மேலும் உங்களிடம் வேலை வாங்குவது பாவம்'' என்றார். எல்லோரும் மகிழ்ச்சியுடன் வெளியே வந்தனர். சிறிது தூரம் சென்றதும், புதிதாகச் சேர்ந்த இளைஞன், ''எப்படி என் வேலை?'' என்று மற்றவர்களைக் கேட்டான்.

''என்ன! இது உன் வேலையா?'' என்று எல்லோரும் வியப்போடு கேட்டனர்.

''ஆம், ஒரு வெள்ளைத் துணி, ஒரு சிறு தடி, ஒரு விளக்கு - இவற்றின் உதவியால் நான் தேவதையானேன்'' என்று கூறி, நடந்ததை விவரமாக எடுத்துரைத்தான்.

மற்றத் தொழிலாளர்கள் அவன் முதுகிலே தட்டிக் கொடுத்தார்கள்!

பன்றிகளின் வீடுகள்

ஒரு காட்டிலே மூன்று பன்றிகள் இருந்தன. அவற்றில் மூத்த பன்றிகள் இரண்டும் எப்போதும் ஆடிப்பாடி ஆனந்தமாகத் திரிந்து கொண்டிருந்தன.

இளைய பன்றி அவற்றைப் பார்த்து, ''இப்படியே ஆடிப் பாடிக் கொண்டிருந்தால், ஆபத்துத்தான்! நம்மை எப்படியாவது பிடித்துத் தின்ன ஒரு பொல்லாத பெரிய ஓநாய் சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறது. அதனிடமிருந்து தப்புவதற்கு நாம் ஒவ்வொருவரும் சொந்தமாக ஒரு வீடு கட்டிக் கொள்வது நல்லது'' என்று எச்சரித்தது.

மறுநாளே வீடு கட்டும் வேலையில் மூன்றும் ஈடுபட்டன. இளைய பன்றி செங்கல் வீடு ஒன்றை மிகவும் சிரமப்பட்டுக் கட்டி முடித்தது. மூத்த பன்றிகளில் ஒன்று குச்சிகளைக் கொண்டு எளிதாக ஒரு வீடு கட்டியது. இன்னொன்று வைக்கோலினால் மிகமிக எளிதாக ஒரு வீட்டைக் கட்டி முடித்தது.

ஓநாய் முதலில் வைக்கோல் வீட்டுக்கு வந்தது. 'ஊ... ஊ...' என்று பலமாக ஊதியது. அப்படி ஊதி ஊதியே வைக்கோல் முழுவதையும் பறக்கும்படி செய்தது. உள்ளேயிருந்த பன்றி ''ஐயோ ஆபத்து!'' என்று முணுமுணுத்துக் கொண்டே, பின்புறமாக ஓட்டம் பிடித்தது.

குச்சிகளால் கட்டப்பட்ட வீட்டுக்குள் புகுந்து, அங்கிருந்த பன்றியிடம்



விவரத்தைக் கூறியது. இரண்டும் கதவைத் தாழிட்டுவிட்டு உள்ளே ஒளிந்து கொண்டன.

ஓநாய், குச்சி வீட்டுக்கு வந்தது. குச்சிகளைப் பற்களால் கடித்து இழுத்தும், கால்களால் பலமாக உதைத்தும் சின்னாபின்னமாக்கியது. 'இனி இங்கிருந்தால் ஆபத்து!' என்று இரண்டும் பின்புறமாகத் தப்பி ஓடி, இளைய பன்றியின் வீட்டுக்கு வந்தன. விவரம் அறிந்த இளைய பன்றி அவைகளை வீட்டுக்குள் வரவேற்று, கதவை நன்றாகச் சாத்தி உள் பக்கமாய்ப் பூட்டிவிட்டது.

ஓநாயால் செங்கல்லை அசைக்கக் கூட முடியவில்லை. வெகுநேரம் முயன்று பார்த்தது. கடைசியாக, வீட்டின் மேலே ஏறி, புகைபோக்கி வழியாக உள்ளே இறங்கப் பார்த்தது.

ஓநாய் உள்ளே இறங்கி வருவதை அறிந்த இளைய பன்றி, தீயைப் பற்ற வைத்துக் குபுகுபுவென்று எரியவிட்டது. தீயின் ஜ்வாலைகள் புகைபோக்கி வரை எட்டியதால், ஓநாய் வேறுவழியின்றி மேலேயிருந்து கீழே கொழுந்து விட்டு எரியும் நெருப்பில் விழுந்தது. அப்புறம்...?

உயிரை வாங்க வந்த ஓநாய், உயிரை விடுவதைக் கண்டு மூன்று பன்றிகளும் ஆனந்தக் கூத்தாடின!

பாடம் தந்ததே!

மு.நாராயணன்



வாலுநீண்ட தட்டாம்பூச்சி
மகிழ்ந்து பறந்தது — பாலு
மனம்குளிர ஒருசெடியில்
வந்து அமர்ந்தது.

பாலு அதன் வாலைப்பிடிக்கப்
பதுங்கி நடக்கிறான் — கீழே
பாராமலே முள்ளுமேலே
காலை வைக்கிறான்.

முள்ளுஅவன் காலில்குத்தத்
துள்ளித் துடிக்கிறான் — பொறுக்க
முடியாமலே கூச்சலிட்டுக்
கண்ணீர் வடிக்கிறான்.

''அய்யோ! அம்மா!'' என்ற குரல்
அருகில் கேட்டது — அந்த
அபயக்குரல் கேட்டவர்க்கு
விவரம் புரிந்தது.

''படித்திருந்தும் பூச்சிகளைப்
பிடித்துக் கொல்லாதே! — அந்தப்
பாவம்உன்னை விட்டிடாது
காலம் நில்லாதே!

துடித்திடவே உனக்குத் துன்பம்
அடுத்து வந்ததே — இந்தச்
சோதனையே நமக்குப் பாடம்
எடுத்துக் தந்ததே!

கேள்வி இங்கே, பதில் எங்கே?

55. 'முருந்து' என்றால் என்ன?

56. 'உலக அதிசயங்கள் ஏழு' என்கிறோம். இவற்றில், மிகவும் பழமையானது எது?

57. ஒரு மிருகத்திற்குக் குரல் கிடையாது. அது எந்த மிருகம்?

58. 'ஒட்டகப் பறவை' என்று அழைக்கப்படும் பறவை எது?

59. பல் உள்ள பறவை எது?

60. இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரித்த போது, அது 'மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான்' என்று இரண்டு பகுதிகளாக இருந்தன. ஆனால், இப்போது கிழக்கு பாகிஸ்தான் இல்லை. அது என்னவாயிற்று?

61. காற்றில் எத்தனை சதவிகிதம் நைட்ரஜன் வாயு இருக்கிறது?

62. கிறிஸ்தவ மதத்தில் இரண்டு முக்கிய பிரிவுகள் இருக்கின்றன. அவை யாவை?

63. தங்கவாசல் (Golden Gate) பாலம் எங்கே இருக்கிறது?

64. முதல் முதலாகக் கப்பலில் உலகத்தைச் சுற்றி வந்த ஆங்கிலேயரின் பெயர் தெரியுமா?

65. பழைய டெல்லியில் யமுனை ஆற்றங்கரையில் மூன்று தலைவர்களின் சமாதிகள் உள்ளன. யார் யாருடையவை?



66. உயிரோடிருந்திருந்தால் இப்போது இவருக்கு வயது 50. இவர் யார்?

67. விஞ்ஞானி சர் ஜகதீஸ் சந்திர போஸ் பிறந்த ஊர் தற்போது இந்தியாவில் இல்லை. எந்த நாட்டில் இருக்கிறது?

68. மணிப்புரி நடனத்தில் மூன்று வகை உண்டு. என்னென்ன?

69. மரங்கொத்தி உலகில் எங்கும் உள்ளது, ஒரே ஒரு கண்டத்தைத் தவிர. அது எந்தக் கண்டம்?

பதில் இங்கே!

55. நீண்ட இறகின் நடுவிலே குழல் போன்ற காம்பு இருக்கும். அதற்கு 'முருந்து' என்று பெயர்.

56. 4500 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து மன்னர்களுக்குக் கட்டப் பட்ட கல்லறைகளானபிரமிட்டுகள்.

57. ஒட்டகச் சிவிங்கி.

58. நெருப்புக் கோழி. இது ஒட்டகத்தைப் போல் பல நாட்கள தண்ணீர் குடிக்காமலே உயிர் வாழக் கூடியது.

59. பறவைகளில் எதற்குமே பல் கிடையாது!

60. அது தனியாகப் பிரிந்து 'வங்காள தேசம்' எனப்பெயர்பெற்றது.

61. 80 சதவீதம்.

62. கத்தோலிக்க மதம், பிராட்டெஸ்டெண்டு மதம்.

63. அமெரிக்காவில்சான்பிரான்சிஸ்கோ நகரையும், ஓக்லண்ட் வளைகுடாவையும் இணைக்கும் இப்பாலம் உலகிலேயே நீளமானது. 13 கி.மீட்டர் நீளம்.

64. சர் பிரான்ஸிஸ் டிரேக்.

65. மகாத்மா காந்தி, ஜவாஹர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி.

66. உலகிலேயே முதல் முறையாக விண்வெளிப்பயணம் செய்த யூரி ககாரின்.

67. டாக்காவுக்கு அருகில் உள்ள ராரிக்கல் என்ற கிராமத்தில்தான் அவர் பிறந்தார். இப்போது அது வங்காள தேசத்தில் உள்ளது.

68. ஆண்கள் மட்டுமே ஆடும் நடனம், திருமணமாகாத பெண்கள் ஆடும் நடனம், ஆண்களும், பெண்களும் சேர்ந்து ஆடும் நடனம் என்று தனித்தனி வகைகள்.

69. ஆஸ்திரேலியா.

பிருந்தாவனக் கதைகள்

ஒருவேளைச் சோறு

கண்ணன் எட்டாம் வகுப்புப் படித்து வந்தான். படிப்பில் அவனுக்கு அவ்வளவாகக் கவனமில்லை. சாப்பாட்டு விஷயத்தில் நாக்குக்குச் சுவையாக இருக்க வேண்டும். ருசியான சாப்பாடு இல்லையென்றால் சாப்பிடும் நேரத்தில் அழுது அடம் பிடிப்பான்.

அவன் அப்பா இருந்தபோது அவனுக்கு ஏற்பட்ட பழக்கம் இது.. அவர் ஓர் அலுவலகத்தில் பொறுப்பான ஒரு வேலையில் இருந்தபோது, அவனுக்கு நிறையத் தின்பண்டங்கள் வாங்கிக் கொடுப்பார். மதியச் சாப்பாட்டிற்கு மீன் இல்லையென்றால் கண்ணனுக்குச் சாப்பாடு இறங்காது.

மாலை நேரங்களில் கண்ணனை அழைத்துக்கொண்டு, காற்று வாங்கக் கடற்கரைக்குச் செல்கையில்... வேர்க்கடலை, மிக்சர், அல்வா, முறுக்கு, பூந்தி, கேக்.. இப்படித் தம் செல்வ மகன் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்து அவன் நாக்கைக் கெடுத்து விட்டுப் போய் விட்டார். ஆம்...! விதிதான் யாரை விட்டது..?



ஒருநாள் மாலை ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருந்த போது லாரி மோதி மரணமடைந்தார். அதிலிருந்து கண்ணனின் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடியது. வெளி வேலையே அறியாத அவன் அம்மா, கூலி வேலை செய்து பிழைக்கும் சூழ்நிலை உருவானது. இப்பேர்ப்பட்ட கொடிய வறுமையிலும், கண்ணன் தன் நாக்கு ருசியை மட்டும் மறக்கவேயில்லை. சாப்பிட்டுப் பழக்கப் பட்டவனுச்சே என்று அவனுக்காக அம்மாவும் எதையாவது செய்து வைப்பாள். தினம், தினம் இதே போல் செய்ய முடியுமா?

கண்ணன் இப்பொழுது பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். பள்ளிக்கூடம் வீட்டிற்கு அருகிலே இருந்ததால், மதியச் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு வந்து விடுவான்.

அன்று மதியம் பள்ளி விட்டதும், வீட்டிற்குச் சாப்பிட வந்தான். வேலையாயிருந்த அவன் அம்மாவைச் சோறு போடச் சொல்லி அவசரப்படுத்தினான்.

அன்றிருந்த பழைய சோறும், ஊறுகாயும் எடுத்து வைத்தாள்.

அதைப் பார்த்த கண்ணன்,

''ஏன் சோறுக்கிக் குழம்பு வைக்கலையா...?'' என்று ஏமாற்றத்துடன் கேட்டான்.

''என் உடம்புக்கு முடியலே. அதோடு காய்கறி வாங்கவும் காசில்லே.... இருக்கிறதைச் சாப்பிட்டுவிட்டுப் போப்பா... நாளைக்குப் பார்க்கலாம்...'' என்று நயந்து கூறினாள், அவன் அம்மா.

அதைக் காதில் வாங்காது, கண்ணன், இலையோடு அந்தச் சோற்றைத் தூக்கிக் கோபமாக வாசலில் வீசினான்.

அப்போது....

'அம்மா தாயே! அம்மா தாயே!' என்று வெகு நேரமாகச் சத்தம்

போட்டுப் பார்த்து விட்டு... ஒருவரும் வராமல் இருப்பதைக் கவனித்துக் கொண்டு — வாசலில் நின்று கொண்டிருந்த பிச்சைக்காரன்....

''ஆ! நல்ல காலம்! ஒருவேளைச் சாப்பாட்டுக்காகப் பல வீட்டுப் படியேறினேன்... கிடைக்கலை... இந்தக் கோபக்காரத் தம்பி மூலம்... ஒருவேளை சாப்பாட்டிற்குக் கடவுள் வழி பண்ணிவிட்டான்...'' என்று சொல்லி வாசலில் சிதறிய சோற்றைப் பரக்கப் பரக்க அள்ளிக் குண்டானில் போட்டான்.

இதைப் பார்த்த கண்ணன் தன் தாயிடம், திரும்பி வந்து மன்னிப்புக் கேட்டான்.

—ஜி. ஏகலைவன் (937)

சுப்பு கண்ட துப்பு

கணியனூர் என்ற கிராமத்தில் சுப்பு என்ற ஓர் அநாதை வாழ்ந்து வந்தான். அவனுடைய தாய் தந்தையர்கள் அவனுக்கு எட்டு வயது ஆகும் பொழுதே இறந்து விட்டனர். அந்த ஊர் மக்கள் அவனுக்காக இரக்கப்பட்டு அவனை வளர்த்து வந்தனர். அவனும் அவர்களுக்கு ஏதாவது வேலைகள் செய்து கொடுப்பான்.

அந்த ஊரில் கடைகள் இல்லை. ஏதாவது வாங்க வேண்டும் என்றால் அருகில் உள்ள கிராமத்துக்குத் தான் செல்ல வேண்டும். சுப்பு தினமும் காலையில் ஒவ்வொரு வீடாகச் சென்று ''என்ன என்ன சாமான்கள் வேண்டும்?'' என்று கேட்பான். அவர்கள் சொல்லும் சாமான்களை அருகில் உள்ள கிராமத்துக்குச் சென்று வாங்கி வந்து தருவான்.

அந்தக் கிராமத்தில் சில நாட்களாகவே ஆடு, கோழி முதலியவை இருட்டுப் போய்க் கொண்டிருந்தன. இவற்றை யார் திருடுகிறார்கள் என்று எவருக்கும் தெரியவில்லை.

ஒருநாள் சுப்பு அருகில் உள்ள கிராமத்திற்குச் சாமான்கள் வாங்கி வரச்சென்று கொண்டு இருக்கும்பொது வழியிலே ஓர் ஆட்டின் தோல் கிடப்பதைக்கண்டான். உடனே அவனுக்கு ஒரு யோசனை உருவாகியது. அவன் அந்த ஆட்டின் தோலை எடுத்துப் பத்திரப் படுத்திக் கொண்டான். அன்று இரவு சுமார் 9 மணிக்கு அவன் தோலை எடுத்துப் போர்த்திக்கொண்டான். பின்பு ஊரை விட்டுச் சற்றுத் தள்ளி உள்ள இடத்தில், ஆடுபோல் மே... மே... என்று கத்தியபடி நின்று கொண்டிருந்தான். அப்பொழுது அந்த வழியாக வந்த ஒரு திருடன், தனியாக ஆடு நிற்பதைக் கண்டதும், அதைப் பிடித்துக்கொண்டு அடுத்த கிராமத்தை அடைந்தான். வீடுகள் நெருக்கமாக உள்ள பகுதிகள் வழியாக நடந்து கொண்டிருந்தபோது சுப்பு திருடனுடைய கால்கள் இரண்டையும் வாரிவிட்டு, உடனே, ''உதவி! உதவி!'' என்று பலமாகக் கத்தினான்.

அருகில் உள்ள வீடுகளில் இருந்தவர்கள் எல்லோரும் உடனே ஓடி வந்தார்கள். இருவரையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். சுப்பு அவர்களைப் பார்த்து, ''ஐயா, இவன் திருடன். எங்கள் கிராமத்தில் உள்ள ஆடுகளையும், கோழிகளையும் சில நாட்களாகவே திருடி வந்தான். நான் இவனைப் பிடிக்க எண்ணி இந்த ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு ஆடு போல் நின்று கொண்டிருந்தேன். இவன் என்னை ஆடு என்று நினைத்துக் கொண்டு இங்கு அழைத்து வந்தான். இவனைப் பிடித்துக் கொடுப்பதற்காகவே சமயம் பார்த்து இவன் காலை வாரிவிட்டு, உங்கள் உதவியை வேண்டினேன்'' என்றான். உடனே, அந்தத் திருடனை ஆளுக்கு ஆள் அடித்ததோடு, காவல் நிலையத்திற்குச் சென்று ஒப்படைத்து விட்டார்கள். எல்லோருக்கும் நன்றி கூறிவிட்டு சுப்பு கணியனூர் வந்து சேர்ந்தான். நடந்ததை ஊர் மக்களிடம் கூறினான். அவர்கள் அனைவரும் சுப்புவை மனமாரப் பாராட்டினார்கள்.

—இரா. மணிகண்டன் (1479).



பூனையின் ஆசை

வீட்டில் வாழ்ந்து வந்த பூனை ஒன்று உலகைச் சுற்றி வரச் சென்றது. ஒரு காட்டின் வழியே சென்று


கொண்டிருக்கும்பொழுது ஒரு புலியைக் கண்டது; தன் இனத்தைச் சேர்ந்த புலியாரை வணங்கி நின்றது. புலியின் மஞ்சள் உடலில் பழுப்புக் கோடுகள் கண்ணைப் பறிக்கும் வகையில் காணப் பட்டன. புலியின் உடல் அழகைக் கண்ட பூனை, அதே போலத் தன் உடலிலும் வரிகள் இருந்ததால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று எண்ணி மனம் புழுங்கியது.

புலியைப் பார்த்து, ''அண்ணே! உங்கள் உடலில இருக்கும் கோடுகள், என் உடலிலும் இருந்தால், மிகவும் அழகாக இருக்குமே! அக்கோடுகள் என் உடலிலும் வர, நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று பணிவுடன் அந்த அப்பாவிப் பூனை கேட்டது.

இதைக் கேட்ட குறும்புக்காரப் புலி ''ப்பூ! இதென்ன பெரிய இதா? மிகமிகச் சுலபமாகக் கிடைக்குமே! அதுவும் நகரில் வாழும் உனக்குக் கூறவே வேண்டாம். கருமார் பட்டறைக்குச் சென்று அவர் பழுக்கக் காய்ச்சி வைத்திருக்கும் இரும்புக் கம்பியில் புரளு. பழுக்கக் காய்ச்சின இரும்பு பழுப்பு நிறக் கோடுகளை வரைந்து விடும்'' என்று பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு சொன்னது.

இதைக் கேட்ட பூனை மிகவும் மகிழ்ச்சி கொண்டு, புலிக்கு நன்றி கூடச் சொல்லாமல், நாலுகால் பாய்ச்சலில் நகர்ப்புறம் வந்து, கருமார் பட்டறையைத் தேடி அங்கே சென்றது. பழுக்கப் பழுக்கக் காய்ச்சப் பட்ட இரும்புக் கம்பிகளைக் கண்டு மகிழ்ந்தது. உடனே ஒரு கம்பியின் மேல் விழுந்தது.

பழுக்கக் காய்ந்த இரும்பின்மேல் விழுந்ததும், 'ஐயோ! அம்மா!' என்று அலறியது. சூட்டினால் ஏற்பட்ட வலியைத் தாங்க முடியாமல் வீறிட்டுத் துள்ளிக் குதித்து ஓடியது. பலநாட்கள் நெருப்புப் புண் ஆறாமல் வலியால் துடித்தது. வருந்தியது. அப்புண் ஆறியதும் கருமையான கோடு போன்ற தழும்பு உடலில் ஒன்று தென்பட்டது. அக்கோட்டைப் பார்க்கும் பொழுதெல்லாம், ''அம்மம்மா! ஒரு வரி வருவதற்குள்ளேயே எவ்வளவு வலி எடுத்தது! பாவம்! அந்தப் புலி எப்படித் தான் உடம்பு முழுவதும் வரிகள் போட்டுக் கொள்கிறதோ? என்ன இருந்தாலும் புலிகளுக்கு இருக்கிற திட மனசு நமக்கு இல்லையே! புலியைப் பார்த்துப் பூனை சூடிக் கொள்ள



முடியாதுதான்'' என்று மோசக்காரப் புலியின் சூதை அறியாத அப்பாவிப் பூனை புலியை மனத்தினுள் பாராட்டிக் கொண்டது.

—கோ. ஸ்ரீதர், (1128).

உள்ளதும் போச்சே!

''நான் ஒரு பிரபல எழுத்தாளனாக வேண்டும். என் கதை எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவர வேண்டும். தமிழ் தெரிந்தவர்களுக்கெல்லாம் என் பெயர் தெரிய வேண்டும்'' என்று ஆசைப்பட்டான் மோகன்.

இந்த முடிவிற்கு வந்த பின் மோகனுக்குச்சதாசர்வகாலமும் அதைப் பற்றிய நினைப்புத் தான். அவனுடைய பெற்றோர்கள் மோகனிடம் ஏதாவது வேலை சொன்னால்கூட மோகன் அலட்சியமாகத் தனக்கு மிகவும் முக்கியமான வேலை இருப்பதாகக் கூறி, அவ்வேலையைத் தட்டிக் கழித்தான். தனி இடத்திற்குச் சென்று கதை எழுதுவதற்காகச் சிந்திக்கத் தொடங்கினான். ஒரு வாரம் கழித்து அவனுக்கு ஒரு கதை எழுதுவதற்கான விஷயம் உதித்தது.

அவன் தன்னுடைய முயற்சி, திறமை எல்லாவற்றையும் பயன் படுத்தி ஒரு கதையை எழுதி முடித்தான்.

மோகனுக்குத் தன் கதை மீது முழு நம்பிக்கை இருந்தது. எப்படியாவது 'பூஞ்சோலை' என்ற பத்திரிகையில் தன் கதை இடம் பெற்றுவிட வேண்டும் என்ற வெறி அவனுள் நிறைந்திருந்தது. உடனே தன் எண்ணத்தைச் செயலாற்ற அவன் தன்னுடைய கதையை மற்றொரு தடவை அழகாக எழுதினான்.

கையெழுத்து அழகாக இருந்தால் 'பூஞ்சோலை' ஆசிரியர் தன் கதையை எளிதாகத் தேர்ந்தெடுத்து விடுவார் என்பது அவனுடைய எண்ணம். மற்றொரு தடவை அழகாக எழுதப் பட்டதை உடனே 'பூஞ்சோலை' அலுவலகத்திற்குத் தபாலில் அனுப்பினான் மோகன். அவனுக்குத் தன் கதை அந்தப் பத்திரிகையில் வந்து விடும் என்ற திடமான நம்பிக்கை இருந்தது. பிறகு, அவனுடைய வேலை தன் கதை அப்பத்திரிகையில் வரும் நாளை ஆவலோடு எதிர்பார்ப்பதுதான்!

ஒரு வாரத்திற்குப் பிறகு அடுத்த இதழ் வந்தது. ஆவலோடு அந்த இதழைப் புரட்டினான். அவன் ஆவலோடு எதிர்பார்த்தபடி அவனுடைய கதை அந்த இதழில் வரவில்லை. ஒவ்



வொரு பக்கமாகக் கவனமாகப் புரட்டிப் பார்த்தான். என்ன ஏமாற்றம்! அவனுடைய கதை அந்த இதழில் இடம் பெறவில்லை. சரிதான்! அடுத்த இதழில் வரும் போல இருக்கிறது, என்று தன் மனத்தைச் சமாதானம் செய்து கொண்டான்.

அடுத்த வாரமும் அதே கதிதான். ஒரு மாதம் வரை பொறுத்துப் பார்த்தான். அவனுடைய கதை 'பூஞ்சோலை'யில் வரவேயில்லை. ஒன்றரை மாதமாக அவன் பாடுபட்டுத் தயாரித்த கதை, அந்தக் குழந்தைகள் பத்திரிகையில் வராததைக் கண்ட மோகன் சிறிது சோர்ந்தான். ஆனாலும், அவன் உறுதியைக் கைவிடவில்லை. மற்றவர்கள் எழுதியதைக் காப்பியடித்தாவது, தன் பெயரை அக்குழந்தைகள் பத்திரிகையில் பார்க்க வேண்டும் என்று எண்ணினான். ஆகவே மோகன் அந்த முயற்சியில் இறங்கினான். அன்று மாலையே மோகன் அருகிலிருந்த நூல் நிலையத்திற்குச் சென்றான். குழந்தைகள் பகுதியில் உட்கார்ந்துகொண்டு புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்த மோகன், ஒரு கவிஞரின் குழந்தைப் பாடல் தொகுப்பை அங்கே கண்டான். அதில் மோகன் பல அருமையான பாடல்களைக் கண்டான். அதில் அவனுக்கு மிகவும் பிடித்திருந்த ஒரு பாடலைக் காப்பியடித்தான். வீட்டிற்குச் சென்றவுடன் அக்கவிதையை ஒரு தாளில் அழகாக எழுதி, அதையும் பூஞ்சோலைப் பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்பினான்.

ஒரு வாரம் சென்றது. அவனுடைய அப்பா கூப்பிட்டார். ''டேய் மோகன், உனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. இங்கே வந்து வாங்கிக் கொள்'' மோகன் விரைந்தான். கடிதத்தை வாங்கினான். ஹா! என்ன ஆச்சரியம்! 'பூஞ்சோலை' ஆசிரியரிடமிருந்துதான் கடிதம் வந்திருந்தது. மகிழ்ச்சியுடன் கவரைப் பிரித்துக் கடிதத்தை எடுத்துப் படித்தான். கடிதத்தில் இருந்தது இதுதான்:

''நீ எனக்கு ஒன்றரை மாதங்களுக்கு முன் அனுப்பியிருந்த கதை அருமையாக இருந்தது. கையில் நிறையக் கதைகள் இருந்ததால் உன் கதையை இரண்டு மாதங்கள் கழித்து வரும் இதழில் பிரசுரிக்கும்படி கூறியிருந்தேன். ஆனால், உன் மேல் எனக்கு இருந்த நல்ல அபிப்பிராயம் கெட்டு விட்டது. ஏனென்றால், நீ எனக்கு ஒரு வாரத்திற்கு முன் அனுப்பிய கவிதை யாருடையது தெரியுமா? அவர் நாடறிந்த ஒரு கவிஞர்! அவருடைய மாணவன்தான் நான். நீ என் குருநாதரின் கவிதையைக் காப்பியடித்து எனக்கே அனுப்பியிருக்கிறாய். ஆகவே நீ எழுதியதாகக் கூறியுள்ள கதையையும் நீ எங்கிருந்து காப்பியடித்தாயோ! ஆகையால், இரண்டையுமே வெளியிடப் போவதில்லை. இனிமேலாவது இப்படி மற்றவர் படைப்புக்கு நீ சொந்தம் கொண்டாடாதே!'

இதைப் படித்த மோகன், 'ஐயோ! உள்ளதும் போச்சே!' என்று கூறிக் கொண்டே சோர்ந்து போய் உட்கார்ந்துவிட்டான்.

—எல். விஸ்வநாதன் (1401)

பிருந்தாவனக் கவியரங்கம்



மாமா வந்தார்

குண்டு மாமா வந்தாராம்.
குதிரையி லிருந்து குதித்தாராம்.
குல்லா கையில் எடுத்தாராம்.
குருவிக் குஞ்சு பறந்ததுவாம்.

பசி எடுக்குது எனக் கூறிப்
பானை கட்டி உருட்டினராம்.
பசையைப் போன்ற கறியெல்லாம்
பாகைப் போல ஒட்டியதாம்!

கண்ணா டியிலே பார்த்தாராம்.
கரும்பூ தம்போல் தெரிந்திடவே
கதிகலங்கிப் போனஅவர்,
கால் கடுக்க ஓடினராம்.

பள்ளம் ஒன்று குறுக்கிடவே
பாய்ந்தே அதனைத் தாண்டினராம்.
தொந்தி குலுங்கப் பள்ளத்தில்
தொப்பென அவரும் விழுந்தாராம்.

'ஐயோ, பாவம்!' எனச்சொல்லி
ஆறுதல் நாமும் கூறிடுவோம்.

—செ. இளஞ்செழியன் (3990),
அடியக்கமங்கலம்.

முத்து எங்கள் முத்துவாம்

முத்து எங்கள் முத்துவாம்,
முரண்டு செய்யும் முத்துவாம்.
சத்த மின்றி வந்துமே,
தட்டி விட்டு ஓடுவான்!

தத்தித் தத்தி ஓடுவான்;
தலை வலிக்கப் பாடுவான்.
அத்தான் வந்தால் மெல்லவே
அருகில் சென்று அமருவான்.

முரட்டுத் தனங்கள் யாவையும்
மூட்டை கட்டி வைத்துமே,
சிரத்தை யோடு படிக்கிறான்,
சென்ற இரண்டு தினங்களாய்!

புத்த கத்தைக் கைகளில்
பிடித்து நன்றாய்ப் படிக்கிறான்;
அத்தான் சொன்ன அறிவுரை
அடடா, திருத்தி விட்டதே!

—கொ. மா. கோ. இளங்கோ (3017),
இராஜபாளையம்.



குப்பன் வீட்டுக் கடிகாரம்

குப்பன் வீட்டுக் கடிகாரம்,
கூவி எழுப்பும் கடிகாரம்



கடையில் பார்த்தால் கிடைக்காது!
காலையில் கூவும்; மறக்காது!

சுவரில் ஆணியில் தொங்காது!
சுற்றித் திரியும்; ஓடாது!

செவத்த நிறத்துக் கடிகாரம்;
சோம்பல் இல்லாக் கடிகாரம்.

கூரை மேலே நடந்துவரும்;
குப்பை கிளறி மேய்ந்துவரும்;

ஊரை எழுப்பும் கடிகாரம்.
உன்னத மான கடிகாரம்.

—எம். ஆர். அருளாளன் (3546),
சென்னை—33



ஆனா, ஆவன்னாப் பாட்டு

அத்தை வீட்டுக் கன்றுக்குட்டி
முட்ட முட்ட வருகுது.

ஆந்தை ஒன்று கூரைமேலே
கொட்டக் கொட்ட விழிக்குது.

இக்க ரைக்கு அக்கரைதான்
பச்சை யாகத் தோணுது.

ஈசன் படைத்த இயற்கையெல்லாம்
இன்ப மாக இருக்குது.

உத்த மனாய் வாழவழி
எத்த னையோ இருக்குது.

ஊக்க முடன் உழைத்துவந்தால்
உயர்ந்த வாழ்க்கை அமையுது.

எறும்பு போலச் சுறுசுறுப்பாய்
எப்பொ ழுதும் இருக்கணும்.

ஏழை களைக் காணும்போது
இயன்ற உதவி செய்யணும்.

ஐயம் ஒன்றும் தேவையில்லை;
ஆண்ட வன்தான் இருக்கிறான்.

ஒற்று மையாய் இருந்துவிட்டால்
உலகத் தையே வெல்லலாம்.

ஓய்வில் லாமல் உழைத்துவந்தால்
ஒருநாள் பெருமைஅடையலாம்.

ஔவை சொன்ன மொழிகள்தன்னை
அடிக்க டிநாம் நினைக்கணும்.

அஃதே நமது கடமையென்று
அறிந்து நடந்து காட்டணும்.

—கே. ஸ்ரீராம் (478), புதுக்கோட்டை


என் கடன்

பாலர்கள் நாமே பைந்தமிழ் பாடிப்
பாங்குடன் கூடி ஆடிடலாம்;
சீலம் உயர்ந்திடக் கல்வி பயின்று
சேவை புரிந்தே வாழ்ந்திடலாம்.

அன்னையும்தந்தையும் முன்னறி தெய்வம்
அவர்பதம் பணிவது நம்கடமை.
அன்பின் வடிவாம் ஆண்ட வனைநாம்
அனுதினம் போற்றி வணங்கிடுவோம்.

எழுத்தறி வித்தவன் இறைவன்; அவரை
என்றும் மறவா திருந்திடுவோம்;
என்கடன் பணிகள் செய்து கிடப்பதே
எனும்உயர் எண்ணம் வளர்த்திடுவோம்.

—ஆர். ஸ்ரீராம் (4874) பழங்காநத்தம்.





பழி தீர்த்த பல்லக்கு

மதிஒளி

நித்திலப்பட்டி என்ற ஊரில் ஒரு ஜமீன்தார் இருந்தார். அவருக்கும், பக்கத்து ஊரான பார்வதிப்பட்டி ஜமீன்தாருக்கும் நீண்ட நாட்களாகப் பகை இருந்து வந்தது.

பார்வதிப்பட்டி ஜமீன்தார் மிகவும் நல்ல குணம் படைத்தவர்.

வெகுநாள் முயற்சிக்குப் பிறகு, ஓர் ஆளை, தமக்குச் சாதகமாக்கிக் கொண்டார் நித்திலப் பட்டிஜமீன்தார். அவனும் அவர் சொல்வது எல்லாம் நியாயம் என்று கேட்டுக் கொண்டான். அவர் சொல்வதைச் சிரமேற்கொண்டு செய்யவும் தயாராக இருப்பதாகக் கூறினன்.

ஜமீன்தார் யோசித்தார். தாம் செய்யச் சொல்லும் வேலைக்கு இவனே தகுதியானவன் என்று உணர்ந்தார். அன்றிரவு தம் ரகசியத் திட்டத்தை அவனிடம் விவரித்தார். 'காரியத்தை வெற்றியாய் முடித்து விடு. இந்தா பணம்' என்று கூறி ஒரு பெரும் தொகையையும் கொடுத்தார். அவன் மகிழ்ச்சியோடு பணத்தைப் பெற்றுக்கொண்டான். ஓரிரு நாட்களில் காரியம் முடிந்துவிடும் என்று கூறிச் சென்றான்.

மூன்ருவது நாள், மாலையில் ஒரு மூடிய பல்லக்கு அவர் மாளிகை வாசலில் வந்து நின்றது. பல்லக்கைத் தூக்கி வந்தவர்களில் ஒருவன், ஒரு காகிதத்தை ஜமீன்தாரிடம் ஒப்படைத்தான். அதைப் படித்துப் பார்த்த ஜமீன்தார் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். பல்லக்கைத் தம் மாளிகையின் ரகசிய இடமான சுரங்க அறைக்குள் கொண்டு போகும்படி கூறினார்.

பிறகு, மீண்டும் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார்;

''நீங்கள் கூறியபடி பார்வதிப்பட்டி ஜமீன்தார் மகன் ஆற்றோரத்தில் தன் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது, ஒருவரும் அறியாமல் கடத்தி வந்து விட்டேன். மயங்கிய நிலையில் இருக்கிறான். நீங்கள் விஷயம் வெளியே தெரியாதபடி வைத்துக் கொள்ளுங்கள். எல்லோரும் ஆற்றிலே விழுந்து இறந்து போயிருப்பான் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். நீங்கள் மாளிகையின் சுரங்க அறையில் வைத்துப் பல்லக்கைத் திறக்கவும்''

பார்வதிப்பட்டி ஜமீன்தாரைப் பழி வாங்கிவிட்ட திருப்தியோடு ஜமீன்தார் சுரங்க அறைக்குள் நுழைந்தார். மயங்கிய நிலையில் இருக்கும் பாலகனைப் பார்க்கும் ஆவலோடு மூடிய பல்லக்கின் பூட்டைத் திறந்தார். திறந்தது தான் தாமதம். ஜமீன்தாரை நோக்கி வெறியோடு பாய்ந்தது, இரண்டு நாட்களாக ஆகாரமின்றி இருந்த ஒரு சிறுத்தைக் குட்டி! அலறி அடித்துக் கொண்டு ஜமீன்தார் வெளியே ஓட்டம் பிடித்தார்.

நல்லவருக்குத் தீங்கு செய்வதை விரும்பாத அந்தக் கெட்டிக்கார நல்ல மனிதன், ஜமீன்தாரிடம் வாங்கிய பணத்தோடு தன் ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்!

சிறிது சிரியுங்கள்



காணாத காரணம்?

முரளி: அம்மா நேற்று இரவு நான் பஞ்சு மிட்டாய் தின்கிற மாதிரி கனவு கண்டேன்.

அம்மா: உண்மைதான். தலையணையில் பாதி பஞ்சைக்காணோம்!

மூக்கும் கண்ணும்

ஆசிரியர்: உனக்கு மூக்கு இல்லா விட்டால் என்ன ஆகும்?

முரளி: கண் தெரியாது சார்.

ஆசிரியர்: என்னடா உளறுகிறாய்?

முரளி: ஆமாம் சார். மூக்கு இல்லாட்டா மூக்குக் கண்ணாடி எப்படி முகத்தில் நிற்கும்? கண்ணாடி இல்லாட்டா எனக்குக் கண் தெரியாதே!





கண்டுபிடியுங்கள்

கண்காட்சியில் போலீஸ்காரரிடம்: மாமா... கூட்டத்தில் என் அப்பாவும், அம்மாவும் காணாமல் போயிட்டாங்க. மைக்கில் அறிவிச்சு அவங்களைக் கண்டுபிடிச்சுத் தாங்க மாமா.

யார் போட்டது?

முதியோர் கல்விப் பள்ளியில்:

ஆசிரியர்: உண்மையைச் சொல்லி விடுங்க. இந்தக் கணக்கை உங்க பேரன்தானே போட்டுக் கொடுத்தான்?




கருத்து: லலிதாசெல்லப்பா


மூளைக்கு வேலை

1. உங்கள் நண்பர் ஒருவரைக் கூப்பிட்டு, இடது தோளும், இடது பாதமும் சுவரில் சாய்ந்திருக்க, வலது காலை உயர்த்தச் சொல்லுங்கள். அவரால் முடியுமா என்று பாருங்கள்.

2. கிட்டத்தட்ட பன்னிரண்டரை செ. மீ. தூரங்களில் வைக்கப்பட்டுள்ள இரு கண்ணாடிக் குவளையின் மீது ஒரு பத்து ரூபாய் நோட்டை வைக்கவும். இப்போது நண்பனிடம், ரூபாய் நோட்டு கீழே விழாதவாறு அதன் மீது ஓர் எட்டணா நாணயத்தை வைக்க முடியுமா என்று சவால் விடுங்கள். நினைவிருக்கட்டும்! நாணயம் கீழே விழக் கூடாது!



3. 12 தீக்குச்சிகளைப் படத்தில் உள்ளது போல 4 சதுரமாக வைக்கவும். இரண்டு குச்சிகளை மட்டுமே எடுத்து விட்டு, வேறு இடத்தில் வைப்பதன் மூலம், 7 சதுரமாக மாற்ற முடியுமா என்று சவால் விடுங்கள்.




4. படத்திலுள்ளது போல 6 தீக்குச்சிகளை வைக்கவும். ஏதாவது மூன்று குச்சிகளை மட்டுமே மாற்றி, 8 முக்கோணங்கள் செய்ய முடியுமா என்று கேளுங்கள்!


விடை:


1. இடது காலும், தோளும் சுவரில் சாய்ந்திருக்க வலது காலை உயர்த்துவது மனிதனால் முடியாதது.

2. முதலில் பத்து ரூபாய் நோட்டை இரண்டாக மடித்து, பின் நான்காக மடித்து, விசிறி மடிப்பாக்கவும். இப்போது நாணயத்தைத் தாங்கும் சக்தி ரூபாய் நோட்டுக்கு வந்துவிட்டதல்லவா?



3. ஏழு சதுரங்கள் வந்து விட்டன!





4. எட்டு முக்கோணங்கள் வந்து விட்டன!

-லட்சுமி நடராஜன்

1. தொலைபேசி உள்ள வீட்டில் மின்சாரம் நின்று விட்டால், தொலைபேசியில் பேச முடியுமா?
2. ரயில் சக்கரத்தின் விளிம்பு தண்டவாளத்தின் உட்புறம் இருக்கிறதா, வெளிப்புறம் இருக்கிறதா?
3. காரில் அதிகம் தேய்வது முன் சக்கரங்களா? பின் சக்கரங்களா?
4. அரசு பாடநூல்களின் சின்னத்திற்கு அடியிலே காணப்படும் குறளின் வாசகம் என்ன?
5. சாதாரணக் குடைக்கு எத்தனை கம்பிகள் இருக்கும்?
6. திருக்குறளில் பொருட்பாலில் எத்தனை குறள்கள் உள்ளன?
7. உலகத் தமிழ் மாநாடு சென்னையில் எந்த ஆண்டு நடந்தது?
8. இந்தியாவில் தரைப்படை, விமானப்படை, கடற்படை மூன்றுக்கும் தலைவர் யார்?

விடைகள்:

1. பேசமுடியும்
2. உட்புறம்,
3. முன்சக்கரங்கள்
4. கற்க; கசடற.
5. 16 கம்பிகள்.
6. 700,
7. 1968
8. ஜனாதிபதி.

-லட்சுமி சிவம்

நெஞ்சம் குளிர..

மாட்டு வண்டி ஒன்றில் கறுப்பன்
மூட்டை ஏற்றிச் சென்றான்.

மேட்டில் வண்டி ஏறும் போது
மூட்டை விழவே, நின்றான்.

உருளைக் கிழங்கு மூட்டை அதனை
ஒருவ னாகத் தூக்கப்

பெரிதும் கறுப்பன் முயன்ற போது
பெரியார் ஒருவர் வந்தார்.

''இருவர் நாமும் சேர்ந்தால் இதனை
எளிதில் தூக்க முடியும்.

சிரமம் இன்றி இருந்த இடத்தில்
திரும்ப வைத்து விடலாம்.''

பெரியார் இதனைக் கூறி விட்டுப்
பெரிய மூட்டை அதனைக்

கறுப்ப னோடு சேர்ந்து தூக்கிக்
கட்டை வண்டி சேர்த்தார்.


''இந்த ஏழை சிரமம் தீர்க்க
இனிய உதவி செய்தீர்.


எந்த வகையில் நன்றி சொல்வேன்?''
என்று கறுப்பன் கூற,

''வாயால் நன்றி கூற வேண்டாம்.
மகிழ்ச்சி யோடு பிறர்க்கு

நீயும் உதவி செய்தால் எனது
நெஞ்சம் குளிரும்'' என்றார்.

அழ.வள்ளியப்பா





யவக்ரீதன் கதை
கதை: ஆனந்தி
படம்: வினு
வனவாசம் செய்த காலத்தில் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறுவதற்காகத் தவம் செய்யப் போய் விட்டான். இதர பாண்டவர்களும் திரௌபதியும் மகரிஷி லோமசரோடு தீர்த்த யாத்திரை செய்தார்கள். பிருகு துங்கம் என்ற மலையருகில் புண்யம் என்றுபெயருள்ள ஆழமான மடுவின் கரையை அடைந்தார்கள்.
லோமசர் சொன்னார்.
அழகான கங்கை! இங்கே ஸ்நானம் செய்து அகங்காரத்தையும் கோபத்தையும் விட்டு விடுங்கள்.
நீராடிய பிறகு...
இதோ ரைப்ய மகரிஷியின் ஆச்ரமம். இங்குதான் யவக்ரீதன் மாண்டு போனார்.
தருமர் கேட்டார்.
சுவாமி! யவக்ரீதனுக்கு என்ன நேர்ந்தது? அந்தக் கதையைச் சொல்லுங்கள்.
பரத்வாஜ முனிவரின் அருமைப் புதல்வனை யவக்ரீதன் கதையை லோமசர் கூறத் தொடங்கினார்.
இந்தக் காட்டில் தவம் செய்து கொண்டு பரத்வாஜரும் ரைப்யரும் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்து வந்தனர்.



ரைப்யருக்கு நிறைய சீடர்கள்.
கல்வியில் கரை கண்ட ரைப்யரிடம் பாடம் கேட்க நாம் புண்ணியம் செய்திருக்கிறோம்.
ரைப்ய முனிவரின் புதல்வர்கள் பராவஸ் அர்வாவஸ் இருவரும் கூட மகாபண்டிதர்கள்
இதோ வருகிறார்கள் அவர்களை வணங்குவோம்.
யவக்ரீதன் துயரடைந்தான்.
ரைப்யருடைய ஆசிரமத்தில் எப்போதும் சீடர்கள். என் தந்தையை நாடி ஏன் யாரும் வருவதில்லை.
பரத்வாஜர் தேற்றினர்.
யவக்ரீ! ஏன் உன் முகம் வாடியிருக்கிறது?
அப்பா! ரைப்யரை விடவும் தாங்கள் தவத்தில் சிறந்தவர். ஆனால் அவருடைய ஆசிரமத்துக்குத் தான் எப்போதும் சீடர்களும் பிராம்மணர்களும், அரசகுமாரர்களும் வந்த வண்ணமிருக்கிறார்கள்.



ரைப்யரும் அவருடைய குமாரர்களும் கல்விமான்கள். மேதைகளான அவர்களை நாடிச் சீடர்கள் வருவதில் வியப்பென்ன? உன் மனசில் பொறாமைக்கு இடம் கொடுத்து விடாதே.
யவக்ரீதன் சபதம்.
தந்தையே! சென்று வருகிறேன். பராவஸு அர்வாவஸு இருவரையும் விடக் கல்விமானாகத் திரும்புவேன். விடை கொடுங்கள்.
பரத்வாஜ முனிவர் துயரத்துடன் விடை கொடுத்தனுப்பினார்.
யவக்ரீதன் மலைச்சாரலை அடைந்து யாருமே வர முடியாத இடத்தில் தவம் செய்தார்.
பிறகு நான்கு புறத்திலும் அக்னி மூட்டிக் கொண்டு தம் தேகத்தை வாட்டிக் கொண்டு தவம் செய்தார்.
இந்திரன் தோன்றினான்
நீர் ஏன் இப்படி உடலை வாட்டிக் கொண்டு தவம் செய்கிறீர்?



தேவராஜனே! நான் தவம் செய்வது கல்வி யறிவு பெறவே. நீண்ட காலம் கற்காமலே எனக்கு எல்லா வேதங்களும், சாஸ்திரங்களும் தானாகவே தெரிய வேண்டும்.
இது வீண் முயற்சி. உடலை வருத்திக் கொள்வதால் கல்வியறிவு உண்டாகாது. குருவை அடைந்து அத்யயனம் செய்யுங்கள்.
இந்திரன் மறைந்ததும் பிடிவாத குணமுடைய யவக்ரீதன் இன்னும் பயங்கரத் தவம் செய்தான்.
மீண்டும் தோன்றினான் இந்திரன்.
யவக்ரீதரே! உங்கள் தவம் தேவர்களை வாட்டுகிறது. இது சரியல்ல. குரு உபதேசமின்றி வேதங்களைப் புரிந்து கொள்ள முடியாது.
இந்திரனே! இந்த வரத்தை நீர் தரவில்லையானால் என் அங்கங்களை ஒவ்வொன்றாக அக்னியில் போட்டு பயங்கரத் தவம் செய்வேன்.
இத்தனை பிடிவாதத்தையும் படிப்பதில் காட்டக் கூடாதா? இவர் மனத்தை மாற்ற என்ன செய்யலாம்?
மறைந்த இந்திரன் கிழவன் வேஷத்தில் திரும்பி வந்தான்.
முதியவரே! ஏன் கங்கையில் மண்ணைப் போடுகிறீர்?




கங்கைக்கு அணை கட்டுகிறேன்.
பிடிப்பிடியாக மணலைப் போட்டு கங்கைக்கு அணை கட்ட முடியுமா? வீண் முயற்சி.
நீர் மட்டும் ஓதாமலேயே கல்வி சித்திக்க வேண்டும் என்று உக்கிரமான தவம் செய்கிறீரே?
அதை நீர் எப்படி அறிந்தீர்?
கிழவன் இந்திரனாக சுய ரூபமெடுத்ததும்....
சுவாமி! எந்த வகையால் நான் வித்வானாக ஆவேனோ அந்த வரத்தைத் தாருங்கள்.


பிடிவாதக்காரராய் இருக்கிறீர். சரி. நீர் விரும்பியபடியே வேதங்கள் அனைத்தும் உங்களுக்கும் உம் தந்தைக்கும் தாமாகவே விளங்கும்.
மகிழ்ச்சியோடு பரத்வாஜரிடம் திரும்பினர் யவக்ரீதன்.
தந்தையே! நம் இருவருக்குமே வேதங்கள் கிடைத்து விட்டன. பிறரை மிஞ்சி விடுவோம். இந்திரனே வரங்களைத் தந்தார்.
குழந்தாய்! உன் இஷ்டப்படி வரங்கள் கிடைத்து விட்ட படியால் உனக்கு அகங்காரம்தான் உண்டாகும். எனக்கு கவலை அதிகரிக்கிறது.


நான் பெற்று வந்துள்ள வரத்தால் நீங்கள் மகிழ்ச்சி யடைய வில்லையா?
பரத்வாஜர் மகனுக்கு ஒரு கதை கூறினார்.
யவக்ரீ! முன்னொரு காலத்தில் பாலதி என்ற முனிவர் புத்திர சோகத்தால் துயருற்றுத் தவம் செய்தார்.
நான்கு தேவர்கள் தோன்றினர்.
முனிவரே! வேண்டும் வரத்தைக் கேளுங்கள்.
தேவர்களே! எனக்குப் பிறக்கும் பிள்ளை சாகவே கூடாது.
அத்தேவர்களில் ஒருவனான யமன் கூறினான்.
அமரத்துவம் பெறும் தகுதி மனிதர்களுக்குக் கிடையாது. ஏதாவது ஒரு வரம்பு வைத்துக் கேளுங்கள்.
தேவர்களே! அப்படியானால் இந்த மலை உள்ள வரையில் என் மகனும் உயிரோடு இருக்க வேண்டும்.
அப்படியே தந்தோம்.


பாலதிக்கு ஒரு பாலகன் பிறந்தான்.
தேவர்களுடைய வரத்தினால் பிறந்து சிரஞ்சீவியாக வாழப் போகும் இவனை மேதாவி என்று அழைப்போம்.
மேதாவி சற்று வளர்ந்த உடனே தன் தந்தை பெற்ற வரத்தைப் பற்றி அறிந்து கொண்டான். அகந்தை மிக்கத் துஷ்டனாகத் திரிந்தான்.
தவ முனிவர் மீது மணலை வீசுவான்.
ஒரு சமயம் தனுஷாக்ஷர் என்ற முனிவரை மேதாவி அவமதித்தான்.
நல்ல குலத்தில் பிறந்தும் பெரியோரை அவமதிக்கும் நீ சாம்பலாகக் கடவாய்.
மேதாவி சாம்பலாகாமல் நிற்பதைப் பார்த்தார் தனுஷாக்ஷர். ஞான திருஷ்டியினால் காரணத்தைத் தெரிந்து கொண்டார்.
ஒரு பெரிய காட்டெருமையின் வடிவம் எடுத்துக் கொண்டு தம் தவத்தின் வலிமையால் குறிப்பிட்ட மலையை முட்டி முட்டித் தகர்த்துத் தூளாக்கி விட்டார்.


மகனுக்குக் கதை கூறி முடித்தார் பரத்வாஜர்.
யவக்ரீ! அகங்காரத்தினால் மேதாவி சாம்பலானான். தந்தையின் துக்கத்துக்கும் காரணமானான். நீ அகங்காரம் அடையாமல் இரு. ரைப்யர் மிகவும் வீர்யமுள்ளவர். அவர் அருகில் போகாதே!
தந்தையே! கவலை வேண்டாம். உங்களைப் போலவே ரைப்யரும் பூஜிக்கத் தகுந்தவர்.
ஆனாலும் யவக்ரீ-தனின் மனம் கர்-வத்தால் நிரம்பியது. பராவஸு அர்வாவஸுவிடம் கொண்ட பொறாமை நீங்கவில்லை.
ஒரு நாள்...
ரைப்யருடைய ஆசிரம நந்த வனம். பராவஸுவின் மனைவி பூ பறித்துக் கொண்டிருந்தாள். யவக்ரீதர் வந்து....
பெண்ணே! உன் கணவனைவிட உயர்ந்தவன் நான். இந்திரனிடம் வரம் பெற்றவன். நீ என்னுடன் வந்துவிடு.
ரைப்யரிடம் அலங்கோலமாக ஓடி வந்தாள் மருமகள்.
ஏனம்மா அழுகிறாய்? என்ன ஆயிற்று?



சுவாமி! தங்களுடைய ஆசிரமத்தில், என் கணவருடைய பாதுகாப்பில் இருக்கும் என்னை யவக்ரீதன் அவமதித்துப் பேசினார்.
சடையைப் பிடுங்கி ஹோமம் செய்தார் ரைப்யர்.
இந்தச் சடையிலிருந்து தோன்றும் பூதங்கள் யவக்ரீதனுக்குக் காலனாகட்டும்.
அக்னியிலிருந்து பயங்கர ரூபத்துடன் ராக்ஷஸியும் ராக்ஷஸனும் தோன்றினார்கள்.
ராக்ஷஸி பராவஸுவின் பத்தினி போல் அழகான ரூபம் எடுத்து யவக்ரீதனைத் தொடர்ந்தாள். அவர் கையிலிருந்த புனித நீருடன் கூடிய கமண்டலத்தைத் தந்திரமாக வாங்கிக் கொண்டு விட்டாள்.
அதனால் வலிமை குன்றிய யவக்ரீதனைக் கோர ராக்ஷஸன் துரத்திச் சென்று சூலத்தை ஓங்கினான்.


தண்ணீரில் மூழ்கித் தன் புனிதத் தன்மையைப் பெறலாமென்று யவக்ரீதன் குளத்தை நோக்கி ஓடினார்.
இது என்ன கஷ்டம்! தடாகத்தில் நீர் இல்லையே!
அருகிலிருந்த நதியை நோக்கி ஓடினார் யவக்ரீதன். எங்கும் தண்ணீர் காணப் படவில்லை.
ஆசிரம வாயிலில் ஒரு முதிய வாயில் காப்போன் நின்றான்.
இது என்ன மாயம்! தந்தையின் தவச் சாலையில் அடைக்கலம் புகுந்து விடுகிறேன்.
வாசலில் நின்ற குருட்டுக் காவல் காரன் அவரை உள்ளே விடாமல் தடுத்து விட்டான். ஆசிரம வாயிலில் பூதத்தால் கொல்லப்பட்டார் யவக்ரீதன்.
நித்திய அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு திரும்பிய பரத்வாஜர் இறந்து கிடக்கும் மகனைக் கண்டார்.
வேதசாஸ்த்திரங்களைப் படிக்காமலேயே அறிந்தவனே! தவ வலிமை உடையவனே! உனக்கா இந்தக் கதி? நீ ரைப்யருடைய வீட்டுப் பக்கம் போயிருப்பாய்.



கிழவனை எனக்கு நீ ஒரே மகன் என்பது தெரிந்திருந்தும், உன்னைக் கொல்லச் செய்த ரைப்யர் தன் புதல்வன் கையாலேயே மரண மடைவார்.
மகன் உடலைத் தகனம் செய்த பரத்வாஜர் தாமும் அக்னிப் பிரவேசம் செய்யத் தீர்மானித்தார்.
புத்திரன் இல்லாதவர்களே பாக்கியசாலிகள். புத்திர சோகத்தினால் அருமை நண்பரைச் சபித்தேனே! என்னை விடப் பாவி யார்? யவக்ரீ, நானும் உன்னுடன் வருகிறேனப்பா!
ரைப்யருடைய சீடர்களில் சிறந்தவனும் புகழ் பெற்றவனுமான பிருஹத்யும்னன் எனும் அரசன் யாகம் செய்தான். குரு புத்திரர்களான பராவஸு அர்வாவஸு இருவரையும் யாகத்தை நடத்தித் தரும்படி கேட்டான். இருவரும் யாகத்துக்குச் சென்றார்கள்.
ஓர் இரவு பராவஸு தன் மனைவியைப் பார்க்கத் திரும்பி வந்தான். இருளில் மான் தோலைப் போர்த்திக் கொண்டிருக்கும் தந்தையை ஏதோ துஷ்ட மிருகம் என்று எண்ணிக் கொன்று விட்டான்.
ஐயோ! என்ன பாபம் செய்தேன்! இது பரத்வாஜ முனிவரின் சாபத்தினாலேயே நேரிட்டிருக்கிறது.


யாகசாலை திரும்பி அர்வாவஸுவிடம் நடந்ததைக் கூறினான் பராவஸு.
தம்பி! உன்னால் இந்த யாகத்தைத் தனியாக நடத்த முடியாது. அரசனுடைய காரியத்தை நான் முடித்துக் கொடுக்கிறேன். எனக்காக நீ பிராயச்சித்தம் செய்ய வேண்டும்.
அப்படியே செய்கிறேன்.
பராவஸு பிருஹத்யும்னன் மனம் மகிழும்படி யாகத்தை நடத்தினான்.
இந்திரியங்களை அடக்கிப் பிராயச் சித்தங்களைச் செய்து தமையனுக்காக விரதமிருந்து உடல் மெலிந்து போன அர்வாவஸு யாகசாலைக்குத் திரும்பினான்.
தங்கள் கட்டளையை நிறைவேற்றி விட்டேன். நீங்கள் தோஷமற்றவராக ஆகிவிட்டீர்கள்.
அரசன் எதிரில் தம்பி இவ்வாறு கூறியது பராவஸுவுக்குப் பிடிக்கவில்லை.
அரசே! இவனை யாகசாலைக்குள் அனுமதிக்கக் கூடாது. பிரம்மஹத்தி தோஷம் உடைய இவன் இந்த யாகத்தைப் பார்ப்பதற்குக்கூட அருகதை இல்லாதவன்.


பிருஹத்யும்னனின் வீரர்களால் துரத்தப் பட்டான் அர்வாவஸு.
நான் குற்றமற்றவன். என் அண்ணனுக்காகவே விரதம் காத்தேன்.
பொய்! போ வெளியே!
அர்வாவஸு மிகவும் துக்கப் பட்டான். கால் போனபடி அலைந்து ஒரு கொடிய காட்டை அடைந்தான்.
நாங்கள் ஞானமும் கல்வியும் தவமும் உடையவர்களாக இருந்தும் ஏன் இப்படியெல்லாம் ஆயிற்று? எல்லாமறிந்த சூரிய பகவானைக் குறித்துத் தவம் செய்கிறேன்.
சூரிய அஷ்டாக்ஷரத்தை ஓதி பல ஆண்டுகள் தவம் செய்த அர்வாவஸுவுக்குத் தேவர்கள் காட்சியளித்தார்கள்.
குற்றமற்றவனே! உன் தமையனை விலக்கி நீ செய்யும் யாகங்களை ஏற்போம்.
ஆதித்தனே! நான் வேண்டும் வரம் அதுவல்ல. என் தமையன் குற்றமில்லாதவனாக வேண்டும்.
இந்த வரத்தைக் கொடுப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். உன் தந்தை உயிர் பெறுவார்.
தேவர்களே! இன்னொரு வரமும் தரவேண்டும். பரத்துவாஜரும் யவக்ரீதனும் எழுந்து வர வேண்டும்.




தேவர்கள் அர்வாவஸுவின் நல்ல குணத்தினால் மகிழ்ந்து வரமருள ரைப்யரும், பரத்து வாஜரும், யவக்ரீதனும் அங்கே தோன்றினார்கள்.
அக்னி பேசினார்:
ரைப்யரே! உத்தமனான பிள்ளையால் நீங்கள் மகத்தான பாக்யத்தை அடைந்தீர்கள். அன்புடைய தோழனையும் திரும்பப் பெற்று விட்டீர்கள். நன் நடத்தையுள்ள புத்திரனே மகத்தான செல்வம்.
சூரியன் கூறினார்.
அர்வாவஸு மூலம் சூரிய வேதம் நிலை பெற்று விளங்கும்.
அப்படியே ஆகுக.
யவக்ரீதன் கேட்டான்.
தேவர்களே! வேதங்களைத் தவறாமல் ஓதியும் தவம் செய்தும் சக்தி பெற்றிருந்தேன். அப்படியும் ரைப்யருடைய ஏவுதலினால் நான் ஏன் கொல்லப்பட்டேன்?
அக்னி சொன்னார்.
யவக்ரீதனே கேள்! ரைப்யர் பல ஆண்டுகள் குருவுக்குப் பணிவிடைகள் செய்து மகிழ்வித்து மிகவும் சிரமப்பட்டு ஓதி வேதம் பயின்றார். குருவின் அனுக்ரகமே அவருக்கு அதிக பலத்தைத் தந்திருக்கிறது.


இந்திரன் தொடர்ந்தான்.
நீங்களோ குருவுக்குப் பணிவிடை செய்யாமல், அகங்காரத்தினால் உடலை வருத்தித் தவம் செய்து, வரம் தரும்படி என்னை வற்புறுத்தி வேதங்களை அடைந்தீர்கள்.
தேவர்கள் மறைந்ததும் யவக்ரீதன் ரைப்யரை வணங்கினான்.
நான் செய்த குற்றங்களை மன்னிக்க வேண்டும்.
வருந்த வேண்டாம். நீயும் இன்று முதல் என் மகனே.
யவக்ரீதனுடைய கதையை விரிவாகச் சொல்லி வந்தார் லோமசர். இந்த ஆச்சரியமான கதையை தருமர், பீமன், நகுலன், ஸகாதேவன், திரௌபதி ஆகிய ஐவரும் ஆவலுடன் கேட்டனர்.
லோமசர் கதையை முடித்தார்.
தருமனே! அதன் பிறகு நாற்பத்தெட்டு வருடங்கள் பிரும்மசரியத்தைக் கடைப்பிடித்தார் யவக்ரீதன். இந்தப் புண்ணிய ஆசிரமம் அவருடையது.
தருமன் நன்றி கூறினான்.
அர்ச்சுனனைப் பிரிந்து வாடுகிற நாம் இந்த ஆசிரமத்தில் தங்கி மன அமைதி பெறுவோம்.
லோமசரின் ஆசி.
தபோதனர்களும், முனிவர்களும் வாழ்ந்த இந்த ஆசிரமத்தில் சில காலம் வசித்தால் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுவீர்கள்.

விந்தை உலகம்


ஐரோப்பாவையே போரால் நடுங்க வைத்த மாவீரன் நெப்போலியன் இறக்கும் போது 'செயின்ட்ஹெலினா' தீவில் ஒரு கைதியாகவே இறந்தான்.






"பிளாடிபஸ்" ஆஸ்திரேலியாவில் இந்த விந்தை மிருகம் உள்ளது. இது பறவையைப் போல் முட்டையிட்டு, விலங்கைப் போல் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும். நீரிலும், நிலத்திலும் வாழக் கூடியது.

"ஈமு" என்னும் பெயர் கொண்ட இப்பறவையால் பறக்க முடியாது. அவ்வளவு கனத்த உடலைக் கொண்டது. ஆனால் ஒரு மணி நேரத்தில் சுமார் ஐம்பது கிலோ மீட்டர் வேகத்தில் நடக்கக் கூடியது. இதன் செல்லப் பெயர்: 'நடை மன்னன் பறவை'





சரித்திர கால குப்த வம்ச அரசர்களில் ஒருவரான சமுத்திரகுப்தர் ஒரு சிறந்த போர் வீரர். கவிதைகள் புனைவதில் வல்லவர். மேலும் சங்கீதத்திலும் எல்லையற்ற ஈடுபாடு கொண்டவர். அதன் காரணமாக தன்னுடைய ஆட்சிக் காலத்தில் வெளியிட்ட நாணயங்களில் தான் ஒரு 'வாள் யாழ்' மீட்டுவது போன்று தன்னுடைய உருவத்தைப் பொறித்துக் கொண்டார்.

செந்தமிழ்ச்செல்வன்



1000 பொற்காசுகள்

ஹாஜா தன் வீட்டில் இருந்தபடி இறைவனிடம், ''அல்லா! எனக்கு 100 பொற்காசுகள் கிடைக்க வழி செய். நீ 99 பொற்காசுகள் கொடுத்தாலும் நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்'' என்று வேண்டுவார்.

இப்படித் தினமும் அவர் இறைவனிடம் வேண்டுவதைக் கேட்டார் அடுத்த வீட்டில் வசித்து வந்த வணிகர். அந்த வணிகர் ஹாஜாவைச் சோதித்துப் பார்க்க நினைத்தார். மறுநாள் ஹாஜா இறைவனை வேண்டும்போது 99 பொற்காசுகளை ஒரு பையில் போட்டு அதை ஹாஜா வீட்டுச் சிம்னி வழியாக உள்ளே போட்டுவிட்டுச் சன்னல் பக்கம் வந்து ஹாஜா என்ன செய்கிறார் என்று பார்த்தார்.

ஹாஜா அந்தப் பணமுடிப்பை எடுத்துக் கொண்டார். எண்ணிப் பார்த்தார். 99 பொற்காசுகளே இருந்தன. ''கருணை உள்ள அல்லாவே! எனக்கு யார் 99 பொற்காசுகள் கொடுத்தார்களோ அவர்களே மீதி ஒரு பொற்காசையும் விரைவில் கொடுத்து விடுவார்கள்'' என்று கூறினார். அவர் நூறு பொற்காசுகளையும் ஒரே நேரத்தில் இறைவன் தரவேண்டும் என்று வேண்டிக்கொள்ளவில்லையே!

வியாபாரிக்குக் கவலையாகப் போய் விட்டது. ''என்னடா இது, ஹாஜா வேண்டாம் என்று இந்த 99 பொற்காசுகளை ஒதுக்கி விடுவார் என்றல்லவா போட்டோம்? இவர் இப்படிச் செய்து விட்டாரே'' என்று வியாபாரி ஹாஜாவிடம் போய் நடந்ததைக் கூறித் தன் பொற்காசுகளைக் கொடுத்து விடும்படி கூறினார். ஹாஜா அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. இருவரும் நீதிபதியிடம் செல்லலாம் என்று முடிவு செய்தனர். ஹாஜா தான் நடந்து வர முடியாது என்றார். வியாபாரி தம்முடைய கழுதைகளில் ஒன்றைக் கொடுத்து ஏறிவரச் சொன்னார்.

ஹாஜா தம்முடைய சட்டை அழுக்காயிருக்கிறது என்றும், நல்ல சட்டை இல்லாமல் எப்படி நீதிமன்றத்திற்கு வருவது என்றும் கேட்டார். வியாபாரியோ தம்முடைய பொற்காசுகளைப் பெற வேண்டுமே என்று அவருக்குப் புதுச் சட்டையைக் கொடுத்து அணிந்து கொள்ளச்சொன்னார்.


இருவரும் நீதிமன்றத்திற்குச் சென்றனர். நீதிபதி வியாபாரியிடம் பொற்காசுகளைப் பற்றிய விவரத்தைக் கூறினார். ஹாஜா பொற்காசுகள் தமக்கு அல்லாவால் தரப்பட்டன என்றார். மேலும் ''வியாபாரி எதை எடுத்தாலும் தம்முடையது என்பார். வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள், இந்தச் சட்டை யாருடையது என்று'' என்றார். நீதிபதி கேட்டபோது, ''சட்டை என்னுடையதுதான்'' என்றார் வியாபாரி.

''இந்தக் கழுதைகூட அவருடையதுதான் என்பார்'' என்றார் ஹாஜா. ''ஆம், கழுதை என்னுடையதுதான்'' என்றார் வியாபாரி.

உடனே நீதிபதி வியாபாரியிடம், ''ஹாஜா எவ்வளவு பெரிய மனிதர்! அவரைப் போய் இப்படி அவமானப்படுத்துகிறாய். என்னை வேறு முட்டாளாக்கப் பார்க்கிறாய்?'' என்று திட்டி அனுப்பி விட்டார்.

நீதிமன்றம் கலைந்தது. வியாபாரி செய்வதறியாது நின்றிருந்தார். ஹாஜா சிரித்துக் கொண்டே வியாபாரியிடம் வந்து, ''கடவுள் பெயரில் ஏமாற்று வேலைகள் செய்யாதே. இந்தா உன் பணம், உடை, கழுதை எல்லாவற்றையும் எடுத்துக் கொள்'' என்று கூறிக் கொடுத்து விட்டுச் சென்றார்.

விண் வெளியில் மஹா மண்டூர் மண்ணாங்கட்டி!



எம்.சோலையன்

[இந்தக் கதையைக் கவனமாகப் படியுங்கள்! கதையின் முடிவில் வேண்டுகோள் ஒன்று உள்ளது. அதனை 'நிறைவேற்றுபவர்' இரண்டு கோடியே இருபத்திரண்டு இலட்சம் ரூபாயைத் தட்டிக்கொண்டு போகலாம்!]

மஹாமண்டு 1-ஏ,

அன்றைய செய்தித் தாளின் விளம்பரப் பகுதியைப் படித்தவர்கள் எல்லோரும் 'ஆ'வென்று வாயைப் பிளந்தார்கள். என்ன காரணம் என்று கேட்கிறீர்களா? கீழ்க்கண்ட விளம்பரத்தை நீங்களும் படித்துப் பாருங்களேன்!

தேவை! தேவை!!
வடிகட்டிய முட்டாள் தேவை!!!

மக்குப் பிளாஸ்திரிகளுக்கும், மடசாம்பிராணிகளுக்கும் ஒரு நற்செய்தி!

விண்வெளிக்குச் சென்று திரும்பும் அதிர்ஷ்டம் மஹாமண்டு ஒருவருக்கு அடிக்கவிருக்கிறது!

விண்ணப்பதாரர் ஏதேனும் ஒரு வகுப்பில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் ஃபெயிலாகிப் படித்திருக்க வேண்டும்!

பள்ளிக்கூடத்தில் மழைக்குக்கூட ஒதுங்காதவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்!

பதினைந்து வயதிற்குக் குறைவானவர்களே விண்ணப்பிக்கலாம்.

தாங்கள் பெற்றுள்ள பட்டங்களைக் குறிப்பிட்டு (அடு மடையன், மஹாமண்டு போன்றவை) விண்ணப்பிக்கவும்.

-மேற்கண்ட விளம்பரத்தை 'லகோ' சங்கத்தார் வெளியிட்டிருந்தனர்.

'லகோ' சங்கத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? புதுமையான காரியங்களை ஆற்ற விரும்பிய சில லட்சாதிபதிகளும், கோமுஸ்வரர்களும் ஒன்றுய்க் கூடினார்கள். லட்சாதிபதி மற்றும் கோமுஸ்வரர் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார்கள். அதுவே 'லகோ சங்கம்' ஆகும்.

இச்சங்கத்தின் தலைவர் லண்டப் பிரசண்டன் ஆவார். இவர் ஒரு தடவை லண்டன் போனாலும் போய் வந்தார். அன்றிலிருந்து இவர் பேச்சில் அடிக்கொரு தடவை 'லண்டன்' என்ற வார்த்தை இடம் பிடித்துக் கொண்டது. யாராவது 'அக்கூ' என்று தும்மினால் போதும்! ''ஆஹா! இது என்ன தும்மல்! நான் லண்டனில் இருந்தபோது ஒருவர் நூற்றெட்டுத் தடவை தும்மினார், பாருங்கள்! அந்தக் கட்டிடமே ஆட்டங்கண்டு விட்டது!'' என்று ஆரம்பிப்பார். இதனால்தான் அவருக்கு லண்டப் பிரசண்டன் என்ற பட்டப் பெயர் நிலைத்து விட்டது!

இந்த நேரத்தில்

அமெரிக்கர்கள் ஆறு எலிக் குஞ்சுகளை ராக்கெட்டில் வைத்து விண்வெளிக்கு அனுப்பியிருந்தார்கள். இந்தியாவின் இன்சாட் 1—பி சென்ற அதே ராக்கெட்டில் மூட்டு வீக்கமுள்ள எலிகளும் பறந்து போயின!

ரஷ்யர்கள் விடுவார்களா? முடக்கு வாதமுள்ள குரங்குகளை ராக்கெட்டில் முடக்கி வைத்து விண்ணில் முடுக்கி விட்டார்கள்!

'விண்வெளி என்பது ஹனுமான் கொண்டு வந்த சஞ்சீவி மலை போன்று சக்தி வாய்ந்தது!' என்று எல்லோரும் நினைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

விண்வெளிக்குப் போனால் கிழவர்கள் குமரர்களாக மாறலாம் என்னும் வதந்தியும் அடிபட்டது!

'லகோ' சங்கத் தலைவர் லண்டப் பிரசண்டன் மட்டும் சும்மா இருப்பாரா? அவருக்கு வேறு வகையான ஞானோதயம் ஏற்பட்டது! 'நோய் வாய்ப்பட்ட விலங்குகளை அனுப்புவது போல, அறிவில் மந்தமான சிறுவர்களை விண்வெளிக்கு அனுப்பினால், ஒருவேளை அவர்கள் புத்திசாலிகளாக மாறி வரக் கூடுமே! ஆஹா! அப்படி மட்டும் நடந்து விட்டால், பணத்தைக் குவித்து விடலாமே!'

அவருடைய மனத் திரையில் மக்குப் பிள்ளைகள் எல்லோரும் ஒரு பெரும் கியூவில் பணத்துடன் வந்து நிற்பது தெளிவாகத் தெரிந்தது!

லண்டப் பிரசண்டனுக்கு உடனே மூளை நிபுணர் முனியாண்டியின் நினைவு வந்தது! அவரைக் கலந்து ஆலோசித்தார்.

மூளையில் நூறு கோடி உயிரணுக்கள் (நியூட்ரான்கள்) இருக்கின்றனவாம்! அவை ஒன்றையொன்று தொடாத வண்ணம் இடையிடையே ரசாயனப் பொருள் திரவ வடிவில் உள்ளதாம்! இந்த ரசாயனப் பொருளில் மாற்றம் ஏற்பட்டால் அறிவுத் திறன் கூடவும் குறையவும் செய்யலாம்!

இது போதாதா? விண்வெளியில் கட்டாயம் முட்டாள் அறிஞனாவான் என்று லண்டப் பிரசண்டன் முடிவுக்கு வந்து விட்டார்.

விண்வெளி ஆய்வு நடத்த அரசின் அனுமதியையும் வாங்கிக் கொண்டார்.

காட்டாங்குளத்தூரில் 'அம்போ' விண்வெளி நிலையம் உருவாகியது!

விண்வெளிக்கு இரு சிறுவர்களை அனுப்ப முடிவாயிற்று. அவர்களில் ஒருவன் முட்டாள்! மற்றவன் விண்கலத்தை இயக்கவல்ல புத்திசாலியாக இருக்க வேண்டும்!

முதலில் புத்திசாலியைத் தேர்ந்தெடுக்க 'லகோ' சங்கத்தார் பேட்டி ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். சரியாக நூறு சிறுவர்கள் பேட்டியளிக்கக் காத்திருந்தனர். முதல் சிறுவன் அறைக்குள் நுழைந்தான்.

''ஹி... ஹி...! இவன் என் பேரன் மயில்சாமி! ஹி... ஹி...!'' என்றார் தலைவர் லண்டப் பிரசண்டன்.

''ஆஹா! முகத்திலே என்னமாய் அறிவொளி வீசுகிறது!'' என்றார் ஓர் உறுப்பினர்.

''சரி! பேட்டியை முடித்துக் கொள்ளலாம்!'' என்று கொட்டாவி விட்டார் அடுத்த உறுப்பினர்.

மயில்சாமி தேர்ந்தெடுக்கப்பட்டான். மீதி தொண்ணூற்று ஒன்பது சிறுவர்களும் பேட்டி காணப்படாமலேயே திருப்பி அனுப்பப்பட்டனர்.

அப்புறம்தான் முட்டாள் தேவை என்ற விளம்பரம் வெளி வந்தது. ஆனால், இதற்கு ஒரே ஒரு சிறுவன் தான் விண்ணப்பித்து இருந்தான்! ஏன் என்று கேட்கிறீர்களா? தன்னை முட்டாள் என்று கூறிக் கொள்ள எவனும் விரும்புவானா என்ன?

* * *

நழுவிக் கீழே சரிகிற முழுக்கால் சட்டையை மேலே இழுத்துப் பிடித்தபடி, ஒழுகுகிற மூக்கை 'ஜிர்'ரென்று உள்ளே இழுத்தவாறு வந்தான் அச் சிறுவன்!

''எந்த ஊரிலிருந்து வருகிறாய்?'' என்று லண்டப் பிரசண்டன் கேட்டார்.

''எங்க ஊரு மஹாமண்டூருங்க! பேரு மண்ணாங்கட்டிங்க!'' என்று கைகளைக் கட்டியவாறு பதிலளித்தான் அவன்.

''ஆஹா! சரியான பேர்வழி அகப்பட்டிருக்கிறான்!'' என்று உறுப்பினர் சிலர் முணுமுணுத்துக் கொண்டார்கள்!

''இவ்வளவு நாளா என்ன வேலை பார்த்துக்கிட்டு இருந்தே!'' என்று கேட்டார் உறுப்பினர்.

''இதுக்கு முன்னாடி பண்ணையார் பாவாடைராயர் கிட்டே எடுபிடி வேலை செஞ்சேனுங்க! ஒருநாள் களத்து மேட்டிலே நெல்லு மூட்டையைக் கவனமாப் பார்த்துக்கோடான்னு சொல்லிப்புட்டுப் போனாருங்க!'' என்று கதை சொல்ல ஆரம்பித்தான் மண்ணாங்கட்டி.

''ஓஹோ... நீ தூங்கியிருப்பே!'' என்று குறுக்கிட்டார் லண்டப் பிரசண்டன்.

''தூங்குவேனுங்களா? நல்லாக் கண்ணைக் கொட்டக் கொட்ட விழிச்சுக்கிட்டே பார்த்துக்கிட்டு இருந்தேனுங்க! யார் யாரோ முகமூடி போட்டுக்கிட்டு வந்து, எல்லா மூட்டைகளையும் தூக்கிக்கிட்டுப் போனாங்க! நான் நல்லாப் பாத்துக்கிட்டுத்தான் இருந்தேனுங்க! அப்படியிருந்தும் முதலாளி திரும்பி வந்ததும் என் சீட்டைக் கிழிக்க அனுப்பிட்டாருங்க! கேட்டீங்களா அநியாயத்தை? அவரு பார்த்துக்கத்தானே சொன்னாரு?'' என்று

மண்ணாங்கட்டி கூறியதும் உறுப்பினர் களின் முகம் மலர்ந்தது!

சிறுவனின் முட்டாள்தனத்தை அளந்து கணக்கிட மனோதத்துவ நிபுணர் ஒருவரும் வந்திருந்தார்.

''விண்வெளிக்குப் போய் என்ன செய்யலாம்னு நினைக்கிறே?'' என்று அவர் ஒரு கேள்வியை வீசினார்.

''ஹி... ஹி... அங்கே இருக்கிற மண்ணைக் கொஞ்சம் வெட்டி எடுத்து வருவேனுங்க! மம்மட்டியெல்லாம் நல்லாப் புடிச்சு வெட்டுவேனுங்க! குளம் குட்டையைப் பார்த்துக் குளிச்சுப் பிட்டுச் சுத்தமா வருவேனுங்க! அம் புட்டுத்தானுங்க!'' என்று பணிவுடன் முடித்தான் மண்ணாங்கட்டி.

அங்கிருந்த மனோதத்துவ நிபுணர் முதல் விஞ்ஞானிகள் வரை எல்லோரும் அவனுடைய முட்டாள் தனத்தைச் சிலாகித்துப் பேசிக்கொண் டார்கள்.

அப்போது வெளியே ''காள்.... காள்...'' என்று கழுதை கத்தும் சத்தம் கேட்டது.

''என் கழுதை தானுங்க! 'அண்டார்க்டிக்காவில் கழுதை'ங்கிற சினிமாப் படத்திலேகூட நடிச்சிருக் குங்க!'' என்று சொன்னான் மண்ணாங் கட்டி. ஓடிப் போய் உடனே கழு தையை உள்ளே கொண்டு வந்து நிறுத்தியும் விட்டான்!

''அடடே! ஆமா! அதே கழுதை! அதே நாலு கால்! அதே ஒரு வால்! அதே கழுதை! நான் பார்த்தேன் படத் திலே!'' என்று ஓர் உறுப்பினர் உளறினார்.

அடுத்த கணம் கழுதை திடீரென்று கீழே சாய்ந்தது!

''என்னப்பா ஆயிற்று?'' என்று கேட்டார் லண்டப் பிரசண்டன்.

''ஒண்ணுமில்லீங்க! அதுக்கு மூட்டு வீக்கம் இருக்குதுங்க... அதனாலே...'' என்று மண்ணாங்கட்டி இழுத்தான்.

''பேஷ்! பேஷ்! விண்வெளிக்கு நீயும் போகிறாய்! உன் கழுதையும் போகிறது!'' என்று முடித்தார் லண்டப் பிரசண்டன்.

பிறகு என்ன?

மயில்சாமிக்கும் மண்ணாங்கட்டிக்கும் பயிற்சிகள் தரப்பட்டன. மயில் சாமிக்குத் தனியாக விண்கலத்தை இயக்கும் முறைகள் கற்றுத் தரப் பட்டன. அப்போதெல்லாம் மண்ணாங் கட்டியும் அசடு வழிய முறைத்துப் பார்த்துக் கொண்டிருப்பான்! கழு தைக்கும் தனியே பயிற்சி தரப்பட் டது. 'கழுதையின் மூட்டுவீக்கம்' விண்வெளியில் தீருமா?' என ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது.

* * *

காட்டாங்குளத்தூர் 'அம்போ' விண்வெளி நிலையம்! மஹாமண்டு 1—ஏ கிளம்பத் தயாராக இருந்தது! அதற் கான கவுண்ட் டவுன் (குறைத்து எண்ணுதல்) ஆரம்பமாகி விட்டது!

''பத்து... ஒன்பது... எட்டு...''

அதே நேரத்தில் —

விண்வெளி நிலையத்திற்கு எதிரே 'பிகோ' சங்கத்தார் உண்ணாவிரதம்



இருந்தார்கள். 'பிகோ' சங்கம் என்பது, பிட்சாதிபதிகளும், கோவணாண்டிகளும் சேர்ந்து அமைத்த சங்கம் ஆகும்! இது 'லகோ' சங்கத்திற்குப் போட்டியாக அமைக்கப்பட்ட சங்கம்!

கோடிக் கணக்கில் பணம் செலவழித்து விண்வெளிக்கு ஆள் அனுப்புவது கூடாதாம்! 'பிகோ' சங்கத்தாரில் பலர் ஒரு காசுகூடச் செலவில்லாமல் (பட்டினியால்) விண்ணுலகு போயிருக்கிறார்களாம்!

காட்டாங்குளத்தூரின் சந்து பொந்துகளில் எல்லாம் பட்டிமன்றங்கள் நடந்தன!

''விண்வெளிக்குப் போவது வீணே!'' என்று ஒரு சாரார் கூறிவிட்டனர்!

''விண்வெளி நமக்குத் தேனே!'' என்று மறு சாரார் வழக்காடினர்.

இவ்வாறு அவர்கள் வார்த்தைகளால் அடித்துக் கொண்டிருந்தனர்.

இப்படிப்பட்ட கலவரங்களுக்கு இடையே 'சர்'ரென்று அம்பைப் போல விண்ணிலே பாய்ந்து சென்றது மஹாமண்டு 1—ஏ.

பட்டிமன்றத்தில் அடித் தொண்டையில் கர்ஜித்துக் கொண்டிருந்தவர்களும், 'பட்டினி' மன்றத்தில் வாய் வறண்டு கிடந்தவர்களும் ஒரு கணம் வாயைப் பிளந்து, விண்ணைப் பார்த்தார்கள்!

'கடமுடா' என்ற முழக்கத்துடன் பெரும் புகையைப் பின்புறம் கக்கிய வண்ணம் ராக்கெட் மஹாமண்டு 1—ஏ மேலே, மேலே, மேலே போவதை அவர்கள் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

டாஸ்கியின் சவாரி

மஹாமண்டு 1—ஏ வெகு கம்பீரமாகச் சீறிக்கொண்டு தரையை விட்டு மேலே கிளம்பியது!

அப்போது படுக்கை போன்றிருந்த இருக்கைகளில் சாய்ந்திருந்த சிறுவர் இருவரும் இருக்கையோடு சேர்த்து அழுத்தப்பட்டார்கள்! விண்கலம் மேலே போகப் போக அழுத்தம் அதிகரித்துக் கொண்டே போனது! கிட்டத்தட்ட அவர்களுடைய உடல்கள் நசுக்கப்படுவது போன்ற அழுத்தம் அது! அவர்களால் சரியாக மூச்சு விடவும் முடியவில்லை!

விண்கலம் ஒரு குறிப்பிட்ட உயரம் அடைந்ததும் இந்தப் பிரச்னைகள் தீர்ந்தன!

நிம்மதிப் பெருமூச்சுடன் மண்ணாங்கட்டி அதிலிருந்து மயில்சாமியைப் பார்த்தான். மயில்சாமியோ தெர்மாஸ் குடுவை ஒன்றைச் சாய்த்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன அது?'' என்று கேட்டான் மண்ணாங்கட்டி!

''கீரி!'' என்று சுருக்கமாகப் பதில் தந்தான் மயில்சாமி.

கீரியா? மண்ணாங்கட்டிக்குத் தூக்கி வாரிப் போட்டது! யாருக்கும் தெரியாமல் கீரிப் பிள்ளையைக் குடுவையில் போட்டு மயில்சாமி கொண்டு வந்து விட்டானா? இதை வைத்து ஆராய்ச்சி செய்யப் போகிறானா? ஒருவேளை கூடவே பாம்பும் கொண்டு வந்திருப்பானோ?

விண்வெளியில் பாம்பும் கீரியும் என்ன செய்யும்? கராத்தே முறையில் சண்டை போடுமா? இல்லை, கட்டித் தழுவிச் சமாதானம் செய்து கொள்ளுமா?

மண்ணாங்கட்டி நடுங்கித்தான் போனான்.

''திறக்காதே! அதை வெளியில் விடாதே!'' என்று அலறினான் அவன்.

''ஏன் திறக்கக் கூடாது!'' என்று உறுமிய மயில்சாமி, ''கோடார்டுக்கு நன்றி'' என்று கூறிய வண்ணம் குடுவையைத் தன் வாய்க்கு நேராகக் கவிழ்த்தான். (டாக்டர் ராபர்ட் ஹட்கிங்ஸ் கோடார்டு முதன்முதலாக ஏவுகணை ஒன்றைச் செலுத்தி விண்ணாராய்ச்சிக்கு அஸ்திவாரம் போட்ட அற்புத மனிதர்!)

அடுத்த கணம்—

அவன் முகம் ஏழெட்டுக் கோணலாக மாறியது! குடுவையை அப்படியும், இப்படியுமாகச் சாய்த்து ஆட்டிப் பார்த்தான்! ம்ஹூம்! அதிலிருந்த பொருள் கீழே விழவேயில்லை!


இதற்குள் மிஷன் கண்ட்ரோலிலிருந்து குரல் வந்தது!

''வணக்கம், வீரர்களே! மயில்சாமி! யாருக்கும் தெரியாமல் கொண்டு வந்த குடுவையைக் கீழே வைத்துவிடு! உனக்கிருக்கும் பதற்றத்தில் உன் இதயத் துடிப்பு அதிகமாகி விட்டது!''

மயில்சாமி மலைப்புடன் குடுவையைக் கீழே போட்டான்!

எல்லாச் செயல்களையும் அவர்கள் டி. வி. மூலம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே! இதயத் துடிப்பைக்கூட உடலில் பொருத்தப்பட்ட கருவி அளந்து தகவல் அனுப்பி விடுகிறது!

மண்ணாங்கட்டியைப் பார்த்து அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தான் மயில்சாமி!



"ஹி... ஹி...! பாதாங்கீரி என்றால் எனக்கு உயிர்! யாருக்கும் தெரியாமல் கடத்தி வந்தேன்! ஆனால் குடிக்க முடியவில்லை! எப்படிச் சாய்த்தாலும், பாதாங்கீரி வாயில் விழ மாட்டேன் என்கிறது!" என்று அலுத்துக் கொண்டான் மயில்சாமி.

'பாதாங்கீர்' என்பதை அவன் 'கீரி' என்று தவறாக உச்சரித்துக் கொண்டிருந்தான்.

(பாதாங்கீர் அவன் வாயில் ஊற்றாததன் காரணம் தெரியுமா? எடையற்ற விண்வெளியில் இருக்கும் எடையில்லை! அதனால் அது அவனுடைய வாயில் கொட்டவில்லை!)

மண்ணாங்கட்டி எதுவும் பேசாமல் கண்களை மூடிக்கொண்டான்.

"உனக்கென்ன ராகேஷ் சர்மா என்ற நினைப்போ? வாயைத் திறக்க மாட்டேன் என்கிறாயே!" என்றான் மயில்சாமி.

அப்பொழுது 'அண்டார்க்டிக்கா' புகழ் கழுதை 'என்னை மறந்தீர்களோ?' என்று கூறுவது போல அலற ஆரம்பித்தது! கழுதையும் விண்வெளி உடை அணிந்து ஓர் இருக்கையில் கம்பீரமாகச் சாய்ந்து கிடந்தது!

"நண்பர்களே! ஆரஞ்சு ஜூஸை அருந்திக் களைப்பாறலாமே!" மிஷன் கண்ட்ரோல் நினைவூட்டியது.

பற்பசை ட்யூப் போன்றிருந்த குழாய்களை வாயில் வைத்துக்கொண்டு அவர்கள் நசுக்கினார்கள்! ஆரஞ்சு ஜூஸ் உள்ளே போயிற்று! (இப்படித்தான் விண்வெளியில் பானங்களை அருந்த முடியும்!)

கழுதைக்கும் காகித ஜூஸ் கிடைத்தது!

பூமியை வலம் வர ஆரம்பித்தது மஹாமண்டு 1—ஏ.

"மண்ணாங்கட்டி! அந்தரத்தில் மிதப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும்!" இது மிஷன் கண்ட்ரோலிலிருந்து வந்த அறிவிப்பு.

மண்ணாங்கட்டி உடனே தன் உடலோடு நாற்காலி போன்றதொரு சாதனத்தைப் பொருத்திக் கொண்டான். விண்கலத்தின் பின்புறக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். பத்து நிமிடங்கள் விண்வெளியில் எவ்விதப் பிடிப்பும் இல்லாமல் மிதந்தான்!

அப்போது—

வந்ததே ஆபத்து!

மிகப் பெரியதொரு விண்கல் ஒன்று அவனை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தது!

ஒருகணம் அவன் தாமதித்தாலும் விண்கல் அவனைப் பொடிப் பொடியாக்கிக் கொண்டு போய்விடும்!

நாற்காலி போன்ற சாதனத்தில் நிறையப் பீச்சக்கருவிகள் இருந்தன. சட்டென்று அடியிலிருந்த பீச்சக் கருவியைத் திறந்து விட்டான். மறுகணம் இடதுபுறம் இருந்த பீச்சக்கருவியையும் திறந்தான்!

அவ்வளவுதான்!

அக்கருவிகளிலிருந்து மிகுந்த விசையுடன் நைட்ரஜன் வாயு வெளியேறியது!

ஒரு 'டைவ்' அடித்துத் தலைகீழாகச் சாய்ந்தான் அவன்! அடுத்த நொடியில் இடதுபுறமாக மிகுந்த வேகத்துடன் பறந்து போய்க் கொண்டிருந்தான்!

இப்படியாக அவனை நோக்கிப் பாய்ந்து வந்த விண் கல்லுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு உயிர் தப்பினான் அவன்!

விண்கல் 'ஏமாற்றத்துடன்' கீழே போய்க் கொண்டிருந்தது!

மண்ணாங்கட்டி மீண்டும் பழைய பாதைக்குத் திரும்பி வந்தான். அவனுக்கு என்னவோ விண்வெளியில் விண்கல்லுடன் பலீஞ்சடுகுடு ஆடியது போல் இருந்தது!

''பட்டவனுக்குப் பாடவே! பல்லு ரெண்டும் போகவே! போகவே!...'' உற்சாகமாகப் பாடியவாறு ராக்கெட்டை அடைந்தான் அவன்.

உள்ளே இருந்த மயில் சாமியோ, ''அட, பயலே! மக்கண்லாசையும், ஸ்டுவர்டையும் மிஞ்சி விட்டாயே?'' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

(மக்கண்லாசும், ஸ்டுவர்டும் முதன் முதலாக விண்ணில் சுதந்திரமாக நடமாடிய அமெரிக்க வீரர்கள்.)

விண்கலத்திற்கு உள்ளே வந்த மண்ணாங்கட்டி கழுதையின் இருபுறமும் பெட்டி போன்ற சாதனங்களைச் சேர்த்துக் கட்டினான். கழுதையை வெளியே நடத்தி வந்தான். விண்கலத்திற்கு வெளியே வந்ததும் கழுதைமீது அமர்ந்து கொண்டான்!

கழுதையின் பக்கங்களில் உள்ள பெட்டிகளில் நிறைய பீச்சுக் கருவிகள் இருந்தன. அவற்றைத் திருகினானோ இல்லையோ! கழுதையுடன் அவன் அந்தரத்தில் பறக்க ஆரம்பித்தான்!

''கழுதை மீதேறி விண்வெளியில் பறந்த முதல் மனிதன் மண்ணாங்கட்டி!'' என்று உலகு எங்கும் வானொலிகள் அலறின. தொலைக்காட்சியில் மண்ணாங்கட்டியின் கழுதைச் சவாரியைப் பார்த்து மக்கள் மிகவும் ரசித்தார்கள்!

மண்ணாங்கட்டி தன் சாகசத்தை முடித்துக் கொண்டு கழுதையுடன் விண்கலத்துக்குத் திரும்பினான்.

இப்பொழுது விண்கலம் பூமியை வலம் வருவதை நிறுத்தி விட்டது. புறப்பட்ட இடத்தை நோக்கிப் பயணமானது! மணிக்கு 30,000 கி. மீ. வேகத்தில் அது பூமியை நெருங்கிக் கொண்டிருந்தது.

மஹாமண்டு 1—ஏ வாயு மண்டலத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இந்த வேளையில் வேகத்தைக் குறைத்தாக வேண்டும். இல்லையேல் விண்கலம் நொடியில் எரிந்து போகும்!

''மயில்சாமி! ரெட்ரோ ராக்கெட் டைப் பயன்படுத்து! வேகத்தைக் குறை! Use Retro Rocket என்று மிஷன் கண்ட்ரோல் கட்டளையிட்டது.

மயில்சாமிக்குக் கையும், காலும் ஓடவில்லை! அவனுக்கு 'மூடு' அவுட் ஆகி இருந்தது! மணிக்கு ஒரு தடவை பாதாங்கீர் குடிப்பது அவன் வழக்கம்! வெகுநேரமாக அவன் பாதாங்கீர் குடிக்கவில்லை அல்லவா?

எனவே ரெட்ரோ ராக்கெட்டைப் பயன்படுத்தும் விதத்தை அவன் மறந்து விட்டிருந்தான். அலிபாபாவின் அண்ணன் குகையைத் திறக்கும் மந்திரச் சொல்லை மறந்தது போல் ஆயிற்று அவன் கதை!

மயில்சாமிக்கு முன்னால் நூற்றுக் கணக்கான கருவிகள் இருந்தன. வெவ்வேறு வண்ணங்களில் எச்சரிக்கை விளக்குகளும், டயல்களும் அவனைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டின. அவன் தலையில் கையை வைத்துக் கொண்டு கண்ணீர் விட்டான்!

பட்டென்று மண்ணாங்கட்டி அவனைப் பிடித்து அப்பால் தள்ளினான். இருக்கையில் அமர்ந்துகொண்டு மிஷன் கண்ட்ரோலுடன் அவன் தொடர்பு கொண்டான்.

''ஹலோ! மிஷன் கண்ட்ரோல்! நான் மண்ணாங்கட்டி பேசுகிறேன்! ரெட்ரோ ராக்கெட்டை இயக்கத் தேவையான பட்டன்களைத் தட்டிவிட்டேன்! தொடர்ந்து என்ன செய்ய வேண்டும்?''

நல்லவேளை! மண்ணாங்கட்டியின் குறுக்கீட்டால் ராக்கெட் நாசமாகாமல் தப்பியது! குறைந்த வேகத்துடன் அது வாயு மண்டலத்திற்குள் நுழைந்தது.

மிஷன் கண்ட்ரோலில் எல்லோருக்கும் வியப்பு! மண்ணாங்கட்டி புத்திசாலி ஆகி விட்டானே! விண்வெளி செய்த மாயமே மாயம்! தொடர்ந்து தரப்பட்ட ஆணைகளைச் சரிவர நிறைவேற்றினான் அவன்.

பயிற்சிக் காலத்தில் அவன் எப்படி இருந்தான்? அவனுக்குக் கற்றுக் கொடுப்பதற்குள் எல்லோருக்கும் போதும் போதும் என்றாகிவிடும்! ஆனால் இப்போது? சொல்லித் தராத விஷயங்களையெல்லாம் சரியாகச் செய்கிறானே!

மயில்சாமி முன்னரே செய்த சில முட்டாள்தனங்களால் அரபிக் கடலில் இறங்க வேண்டிய மஹாமண்டு 1—ஏ இந்துமஹா சமுத்திரத்தில் இறங்க ஆரம்பித்தது. (ஒருவேளை மஹா மண்டு மஹாசமுத்திரத்தில்தான் இறங்கும் போலும்!)

பாராசூட்டுகளை விரித்துக்கொண்டு விண்கலம் மஹாசமுத்திரத்தில் மிதந்தது. மண்ணுங்கட்டியும் மயில்சாமியும் மிதவைகளைக் கட்டிக் கொண்டனர். கழுதையின் உடலிலும் மிதவைகளைக் கட்டிக் கடலில் தள்ளினர். தாங்களும் கடலில் குதித்தனர். ஆனால், அவர்களைத் தூக்கிச் செல்ல மீட்பு விமானம் ஏதும் வரவில்லை! ஏனெனில் அவர்களை அரபிக் கடலில் அல்லவா தேடிக் கொண்டிருந்தது மீட்பு விமானம்?

சற்று நேரத்திற்கெல்லாம் விண்கலத்தை மிதக்க வைத்த பாராசூட்டுகள் சுருங்கிக் கொண்டன! கலத்தில் ஏதோ கோளாறு. விண் மஹாமண்டு 1—ஏ அவர்கள் கண் எதிரே மஹா சமுத்திரத்தில் சங்கமம் ஆகியது!

கடலில் மிதந்தபடி அந்தக் கோரக் காட்சியைச் சிறுவர்கள் கண்டனர். 'அண்டார்க்டிக்கா' புகழ் கழுதையோ அலற ஆரம்பித்தது! சட்டென்று தன் கையிலிருந்த ஏதோ ஒன்றை அதன் வாயில் திணித்தான் மண்ணுங்கட்டி. கழுதையின் அலறல் அடங்கியது!

வானம் இருண்டு கொண்டு வந்தது. மின்னல் இடி வேட்டுடன் மழைச்சாமியின் புறப்பாடு விமரிசையாக நடக்கும்போல் தெரிந்தது!

அப்போது நீரைப் பிளந்து கொண்டு மலைபோன்ற உருவம் அவர்களை நெருங்கி வந்தது.

''ஆ! தொலைந்தோம்! திமிங்கிலம்! திமிங்கிலம்!'' என்று அலறினான் மயில்சாமி.

மண்ணுங்கட்டி அவ்வுருவத்தை உற்று நோக்கினான்.

''பயப்படாதே, மயில்சாமி! அது டால்ஃபின்! மனிதர்களிடம் — குறிப்பாகச் சிறுவரிடம் அன்பு காட்டும் மிருகம் அது!'' என்று ஆறுதல் கூறினான்.

டால்ஃபின் ஆமோதிப்பது போலத் தலையை அசைத்துக்கொண்டு மிக நெருங்கி வந்தது.

''இனியும் மீட்புப் படையை எதிர்பார்த்துப் பயனில்லை!'' என்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள்.

கழுதையை டால்ஃபினின் முதுகில் ஏற்றினார்கள்! தாங்களும் ஏறிக்கொண்டார்கள்!

அவ்வளவுதான்!

சிரிக்குது பார்!

பொன்னிறப் பின்னணியில் — நிலா
பூத்துச் சிரிக்குது பார்!
நன்னிறம் வெண்ணிறமே — நிலா
நாடெல்லாம் சுற்றுது பார்!

நீலக் கருவானில் — நிலா
நீந்தியே ஆடுது பார்!
ஞாலத்துக் கெல்லாமே — நிலா,
ஞாயிறும் ஒன்றேதான்!

ஓலமிட்டோடுகின்றோம் — நாமே
ஒன்றுதல் இன்றிநிதம்!
சீலம் இதுவோ சொல்! — புவிச்
செம்மறை வள்ளுவம்பார்!

ஓயாமல் ஓதுகின்றோம்! — உளம்
ஒன்றுதல் எப்பொழுதோ!—நமைக்கண்டு
(பொன்னிற...)



'நடாதூர் நம்பி'

டால்பின் 'விர்'ரென்று கிளம்பி ஏதோ ஒரு திசையில் விரைந்தது!

''தொலைந்தோம்! நடுக்கடலுக்குக் கொண்டு போய் நம்மை விழுங்கப் போகிறது!'' என்று அரற்றிக்கொண்டிருந்தான் மயில்சாமி. இன்னும் அவனுக்கு ஐயப்பாடு தீரவில்லை.!

ஆனால், மூன்று மணி நேர நீச்சலுக்குப் பிறகு அக்கருணையுள்ள பிராணி அவர்களைக் கரைக்குக் கொண்டு வந்து விட்டது! ''அதோ தெரிகிறது நமது விண்வெளி நிலையம்!'' என்று குதித்துக் கொண்டே கூறினான் மண்ணுங்கட்டி.

மீதி என்ன?

“என்னிடம் ஆறு மாம்பழங்கள் இருந்தன முதலில் நான்கும், பின்பு இரண்டும் தின்றேன். மீதி என்ன இருக்கும்?”

“கொட்டை இருக்கும்”

-ஜி. ராஜசேகர்



அவர்களுக்கு உதவிய டால்பினால் மீண்டும் நடுக்கடலுக்குச் செல்ல முடியவில்லை! அலைகளுடன் போராடி எதிர் நீச்சலிட்டுப் போக அதனால் முடியவில்லை! கரையோரமாக நீந்தி நீந்திக் களைப்படைந்துவிட்டது அது! இறுதியில் கரையோர சீதோஷ்ணநிலை ஒத்து வராததால் தன் உயிரையும் தியாகம் செய்து விட்டது!

சிறுவர்கள் டால்பினுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி விட்டு, விண்வெளி நிலையத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். அங்கே அவர்களுக்குப் பெரிய வரவேற்பு காத்திருந்தது!

நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் தெளிவாகப் பதில் சொன்னவன் மண்ணுங்கட்டியே!

''கழுதை மீது அந்தரத்தில் செய்த சவாரி எப்படி இருந்தது?'' என்று கேட்டார் நிருபர் ஒருவர்.

அப்போது கழுதை தன் வாயைத் திறந்து கத்த ஆரம்பித்தது! ஆனால், இதென்ன! கழுதையின் கர்ண கடூரமான குரலுக்குப் பதில், குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் இசை வெளி வருகிறதே!

அவ்வினிய குரலைக் கேட்ட ஒருவர், 'கத்துங் கழுதையோசை - சற்றே வந்து காதில் விழ வேணும்!'' என்று பாடக்கூட ஆரம்பித்து விட்டார்!

அதற்குப் பிறகு மக்குப் பிள்ளைகளின் பெற்றோர்கள் கணிசமான தொகையை முன்பணமாகக் கட்டினர். தங்கள் பிள்ளைகளை விண்வெளிக்கு அனுப்பி, புத்திசாலிகளாக மாற்றப் பதிவு செய்து கொண்டனர்!

அது மட்டுமா?

கழுதைகளின் சொந்தக்காரர்கள் வேறு கியூவில் வந்து நிற்க ஆரம்பித்தனர். அவர்களுடைய கழுதைகளையெல்லாம் இன்னிசை விற்பன்னராக மாற்ற வேண்டுமாம்!

இதற்கிடையில் 'மண்டுப்பயல் புத்திசாலியாய்த் திடீரென மாறுவதாவது?' என்று யாரோ திடீரென ஐயத்தைக் கிளப்பி விட்டார்கள்.


மண்ணுங்கட்டியும் தலைமறைவாகி விட்டான்! அவனுடன் 'இருந்த 'அண்டார்க்டிக்கா' புகழ் கழுதையும் தலைமறைவாகி விட்டது!

பிறவியிலேயே மண்ணுங்கட்டி அறிவாளி எனவும், இடையில் அவன் மண்டு போல நடித்ததாகவும் வதந்தி உலவியது! கழுதை இசை பாடிய விஷயம் அதன் வாயில் திணிக்கப்பட்ட டேப் ரிக்கார்டரின் கைங்கர்யம் என்றும் பேசிக் கொண்டார்கள்!

ஆனால் 'லகோ' சங்கத்தார் தம் நம்பிக்கையை இழந்த பாடில்லை. தங்கள் கட்சியை நிரூபிப்பதற்காகக் காணமற்போன மண்ணுங்கட்டியை இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

தயவு செய்து யாராவது மண்ணுங்கட்டியைத் தேடிப் பிடித்துக் கொடுங்களேன்! கண்டுபிடித்துக் கொடுத்தால் இரண்டு கோடியே இருபத்திரண்டு லட்சம் ரூபாயை 'லகோ' சங்கத்தார் பரிசாக அளிப்பார்...

என்ன, கிளம்பி விட்டீர்களா? வெரிகுட்! பெஸ்ட் ஆஃப் லக்!



ஊருக்கு வெளியில், ஆற்றங் கரைக்குப் பக்கத்தில், தோப்புக்கு நடுவில் அமைந்திருக்கிறது சர்வசக்தி அம்மன் கோயில். சுற்றிலும் உள்ள பத்துப் பதினைந்து கிராமங்களிலும் சர்வசக்தி அம்மன் கோயிலென்றால் பயபக்தியோடு வழிபடுவார்கள். அம்மனுக்கு வேண்டிக் கொண்டால் எல்லாக் குறைகளும் தீர்ந்து விடுமென்று அவர்களுக்கு நம்பிக்கை.

ஆடி வெள்ளிக்கிழமைகளில் அம்மனுக்கு அலங்காரம், அபிஷேகம், ஆராதனைகள் எல்லாம் விமரிசையாக நடைபெறும். தோப்பு முழுவதுமே மக்கள் கூட்டம் வெள்ளமாக நிறைந்து விடும். அம்மனுக்கு வேண்டிக்கொண்டு விளக்கேற்றினால், நினைத்த காரியம் கைகூடும் என்கிற நம்பிக்கை ஆழமாக மக்களிடத்தில் படிந்திருந்தது.

கடைசி வெள்ளிக்கிழமை ஊரிலுள்ள பொது மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அம்மனுக்கு அபிஷேகம் செய்வது வழக்கம். இந்த வருஷமும் அப்படியே செய்வதாய்த் தீர்மானமாயிற்று. அறங்காவலர்கள் ஆலோசனையின் பேரில் விழாவைச் சிறப்பாய் நடத்தி... இரவில் அம்மன் வீதியுலாக் காட்சி நடத்த வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள்.

எல்லாவற்றோடும் இந்த வருஷம் புதிதாய் ஒன்று செய்ய வேண்டுமென்று சிலர் சொன்னார்கள். அதன்படி, கடைசி வெள்ளிக்கிழமை மத்தியானத்தில் கஞ்சி காய்ச்சி ஏழை மக்களுக்கு வழங்க முடிவு செய்தார்கள்.

கஞ்சி வழங்குவதற்கான ஏற்பாடுகள் மளமளவென்று நடந்தன. யாரும் எதிர்பாராத வண்ணம் மக்கள் கூட்டம் பெருகிவிட்டது. ஏழை எளிய மக்கள், பிச்சை எடுத்துப் பிழைக்கும் வழிப் போக்கர்கள், ஊனமுற்றவர்கள் இவர்களோடு வசதியான குடும்பத்து மக்களும் போட்டி போட்டுக் கொண்டு கூடி விட்டார்கள். அம்மன் சன்னதியில் கஞ்சி வாங்கிக் குடித்தால் அம்மன் அருள் கிட்டும் என்ற நம்பிக்கைதான் காரணம்!

பாலு சோர்ந்து போய்த் திண்ணையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தான். பசி வயிற்றைக் கிள்ளியது. ''அம்மா வீட்டைப் பூட்டிக் கொண்டு அதிகாலையில் நடவுக்குப் போனாள். 'சீக்கிரம் வந்துடுவேன். வந்ததும், இருவரும் கோயிலுக்குப் போய்க் கஞ்சி வாங்கிக் குடிக்கலாம்' என்று கூறிச் சென்றாள். ஆனால், இன்னும் வரவில்லையே! இனியும் தாமதித்தால்

கஞ்சியெல்லாம் தீர்ந்து விடுமே!'' என்று கவலைப்பட்டான்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். அதற்கு மேலும் அவனால் பொறுத்திருக்க முடியவில்லை. விருட்டென்று எழுந்தான். பாதி கிழிந்து போயிருந்த மேல் சட்டையை எடுத்து மாட்டி... தலைமுடியை விரலால் ஒதுக்கிக் கொண்டான். எண்ணெய்ப் பசையில்லாமல் அது படியுமா? படியாமல் சிலும்பிக் கொண்டிருந்தது. கஞ்சி வாங்கப் பாத்திரத்திற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பூட்டிய வீட்டுக்குள் எப்படி நுழைய முடியும்? பக்கத்து வீட்டில் அலுமினியக் குவளை ஒன்றைக் கெஞ்சிக் கேட்டு வாங்கிக் கொண்டு கிளம்பினான்!

அம்மாடியோவ்...! என்ன கூட்டம்! இதில் எப்படி உள்ளே நுழைந்து வாங்க முடியும் என்று திகைப்பாக இருந்தது. டிரவுசரை இழுத்து நன்றாக இறுக்கிக் கட்டிக் கொண்டான். கூட்டத்தில் நுழைந்து விலக்கி... பெரியவர்களுக்கிடையில் இருக்கும் இடைவெளியைப் பயன்படுத்தி, மூச்சுத் திணறிக் கஞ்சித் தொட்டிக்கருகே சென்று விட்டான். கூட்டம் அதிகரித்து விட்டதால், அளவு ஒரு குவளையாகக் குறைந்து விட்டது. அதிகமாகக் கொடுத்தாலும் பாலுவிடம் இருப்பது ஒரு குவளைதானே! ஒரு வழியாக, கஞ்சியைக் குவளையில் வாங்கிக் கொண்டு கவனமாய்க் கூட்டத்தைக் கடந்து வெளியில் வந்தான். ஓர் ஓரமாகச் சென்று குடிப்பதற்காக அண்ணாந்தான்.

அப்போது அவன்கண்களில் பட்டாள். முனியம்மா கிழவி. கால் ஊனமாயிருந்தும் தெருவிலிருந்து இவ்வளவு தூரம் காலை இழுத்து இழுத்துக் கஞ்சிக்காக வந்து சேர்ந்துவிட்டாள். அவளால் எப்படி இந்தக் கூட்டத்தின் உள்ளே புகுந்து வாங்க முடியும்? பாலுவுக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''இந்தா பாட்டி, இதைக் குடி. நான் போய் வேறே வாங்கியாறேன்'' என்று பாட்டி வைத்திருந்த பாத்திரத்தில் குவளையிலிருந்த கஞ்சியை ஊற்றினான்.

முன்னைவிடக் கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டிருந்தது. பாலு சிறிது சிறிதாக முன்னேறினான். இதோ கஞ்சி ஊற்றும் இடத்தை நெருங்கி விட்டான். குவளையை நீட்டினான். கஞ்சி ஊற்றப் போன பூசாரி, குவளையில் ஏற்கெனவே கஞ்சிப் பசை இருப்பதைப் பார்த்து விட்டார். அவருக்கு ஆத்திரம் வந்தது... அவனை நிமிர்ந்து பார்த்து... கண்கள் சிவக்க, ''புத்தி கெட்ட மூதேவி, மூளைச்சு மூணு இலை வரலே! அதுக்குள்ளே திருட்டுப் புத்தியா? ரெண்டாம் தடவை கஞ்சிக்கு வந்திருக்கே! ஒருத்தனே பல தடவை கஞ்சி வாங்கினா, மத்தவங்க என்ன செய்யுறது?'' கையிலிருந்த பித்தளைக் கரண்டியால் நெற்றியில் ஓங்கி அடித்தார்.

'அம்மா!' என்று அலறிக்கொண்டு அங்கேயே உட்கார்ந்து விட்டான் பாலு.

சிறிது நேரம் சென்றது. பசிக் கிறக்கத்துடனும், நெற்றியில் வலியுடனும் வீடு வந்த பாலுவிடம், ''பாலு, பசியோட இருப்பியே! இந்தா, வரும் வழியிலே மாரியம்மன் கோயில்லே கஞ்சி வாங்கி வந்தேன். அம்மாடியோவ்! என்ன கூட்டம்! அதனாலே தான் நேரமாயிடுச்சு. உம், சாப்பிடு'' என்று தன் கையிலிருந்த பாத்திரத்தை நீட்டினாள்.

அம்மா கொடுத்த கஞ்சியைக் குடித்ததும் பாலுவின் பசி பறந்தோடி விட்டது! ஊனமுற்ற கிழவிக்கு உதவி செய்ததைப் பற்றி அம்மாவிடம் கூறிக் கொண்டிருக்கும் போதே, அவனது நெற்றி வலியும் முற்றிலும் நீங்கி விட்டது!


வெளிநாடுகள்

''எங்கேயோ வெளிநாடுகளெல்லாம் போய் வந்ததாச் சொன்னியே, எந்தெந்த நாடு?''

''ஓரத்த நாடு, கோரநாடு, ராம் நாடு...''

-கீழை அ. கதிர்வேல்






எத்தனை எத்தனை வித்தைகள்!



5 மீட்டர் உயரத்தில் தொங்கும் டென்னிஸ் பந்து அல்லது கூடைப் பந்தை வாயால் கௌவ வேண்டுமா? நீரிலே வெகு தூரத்தில் எறிந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டு திரும்பிவர வேண்டுமா? நீரில் மிதந்து செல்லும் சிறிய படகை இழுத்து வந்து குறிப்பிட்ட இடத்தில் நிறுத்த வேண்டுமா?

'எதற்கும் நாங்கள் தயார்' என்கின்றன இதோ இந்த இரு படங்களிலும் உள்ள டால்பின்கள்.

ஒரே சமயத்தில் இரு டால்பின்கள் நீரிலிருந்து எழும்பி, மேலேயுள்ள வளையங்களில் புகுந்து வெளி வருவதையும், ஒரு டால்பினுக்கு கேலா ஜிஜாட்ஜ் என்பவர் பயிற்சி அளிப்பதையும் இப்படங்களில் காணலாம்.



இரயில் வண்டியைப் பற்றி...

* உலகத்திலேயே முதல் புகைவண்டி இங்கிலாந்தில் ஸ்டாக்டனுக்கும் டார்லிங்டனுக்கும் இடையில் 1825—ஆம் ஆண்டில் 38 ரயில் பெட்டிகளுடனும் பயணிகளுடனும் சரக்குகளுடனும் ஓடியது.

* இந்தியாவில் முதல் ரயில் வண்டி 16.4.1853 அன்று பம்பாய்க்கும், தாணாவுக்கும் (சுமார் 21 மைல்) ஓடியது. அதற்காக அரசாங்க விடுமுறை விடப்பட்டது.

* இந்தியாவில் முதன்முதலில் தாணாவுக்கு அருகில் குர்லா மலையைத் துளைத்து இருப்புப் பாதை போடப்பட்டது.

* 15.8.1854 அன்று ஹௌரா ஸ்டேஷனிலிருந்து 24 மைல் தூரமுள்ள ஹூக்ளிக்கு முதல் பாஸஞ்சர் வண்டி விடப்பட்டது.

* தமிழ்நாட்டில் 1.7.1856 அன்று வியாசர்பாடிக்கும் வாலாஜா ரோட்டுக்கும் (63 மைல்) இருப்புப் பாதை திறக்கப்பட்டது.

* 1874—க்கும் 1879—க்கும் இடையில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாகப் பலர் உயிரிழந்தனர். உணவுப் பொருட்கள் ஓரிடத்திலிருந்து பிரிதொரு இடம் செல்லுவதற்காக முதலில் 5000 மைல் இருப்புப்பாதையும் பின்னர் படிப்படியாக இந்தியா முழுமையும் இருப்புப்பாதை போடுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

* சுதந்திர இந்தியாவில் இன்று சுமார் 61,000 கிலோமீட்டர் இருப்புப் பாதை உள்ளது.

* சுமார் 7000 இரயில்வே ஸ்டேஷன்கள் இந்தியாவில் உள்ளன.

* நம் நாட்டில் இன்று தினமும் சுமார் 10,000 ரயில்கள் ஓடுகின்றன.

* நம் நாட்டில் தினமும் சுமார் 10 மில்லியன் பிரயாணிகள் பயணம் செய்கின்றனர்.


* மேலும் பஞ்ச காலங்களில் தண்ணீர் வண்டிகளையும் இரயில்வே இலாகா ஏற்பாடு செய்து நாட்டுக்கு நன்மை செய்கிறது.

* அவ்வப்போது ஏற்படும் பிரயாண நெரிசல்களைத் தவிர்க்கக் கூடுதல் வண்டியும் ஏற்பாடு செய்கிறது.

இல்லஸ்டிரேட்டட் வீக்லி, இரயில்வே நூற்றாண்டு விழா மலரிலிருந்து தொகுத்தவர்: **ஆர். ரமேஷ்** (55) சென்னை—5.

திரும்பி வந்த காசு

செருவை நாகராசன்



பட்டுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கி செல்லும் பேருந்து அது. வழிநெடுகிலும் சிற்றூர்கள்; அன்று பட்டுக்கோட்டைச் சந்தை; எனவே பேருந்து முழுவதும் காவி ஏறிய ஆடைகளும் எண்ணெய் காணாத தலைகளும்தான் அதிகம். பேருந்தில் பளிச்சென்று தெரிந்தவர்கள் நானும் எனக்கு எதிரேயிருந்த பெரியவர் ஒருவரும்தான்

பெரியவருக்கு வயது ஐம்பது இருக்கும். கனத்த கட்டையான உடம்பு; வெண்மையான உடை படித்த களை அவர் முகத்தில். எனவே பேச்சுத் துணைக்கு நாங்கள் ஒருவரை யொருவர் பற்றிக் கொண்டதில் வியப்பில்லை.

முதலில் பெரியவர்தான் என்னிடம் பேச்சுக் கொடுத்தார். பிறகு நான் பிளஸ்–2 படிக்கிறேன் என்பது தெரிந்ததும் பெரியவர், தாம் பெற்ற பிள்ளைகளைப் பற்றியும் அவர்கள் படிப்பு முடிந்து பெரிய வேலையில் இருப்பது பற்றியும் பெருமையாகச் சொல்லிக் கொண்டார். பிறகு, வாழ்க்கையில் எப்படி நாம் ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும், எவ்வாறு ஈவு இரக்கம் காட்டவேண்டும், எத்தகைய குறிக்கோளுடன் வாழவேண்டும் என்றெல்லாம் அறிவுரை சொல்லிக் கொண்டே வந்தார். இடையிடையே தாம் பெற்ற அனுபவங்களையும் இன்னல்களை எதிர்கொண்ட முறையையும் விரிவாக எடுத்துச் சொன்னார்.

அவர் சொன்ன எல்லாவற்றையும் நான் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். 'இவரைப் போல் நல்லறிவும் நற்குணமும் கொண்ட பெரியவர்களை இந்நாளில் பார்ப்பதே அரிது' என்று நினைத்துக்கொண்டேன்.

ஆவணம் கைகாட்டியில் பேருந்து நின்றது. நான்கு சாலைகள் சந்திக்கும் இடம் அது; எனவே நல்ல கூட்டம்.

பெரியவர் வெளியே கையை நீட்டி வாழைப் பழம் விற்றுக் கொண்டிருந்த ஒரு கிழவரை அழைத்தார். பழமிருந்த மூங்கில் தட்டுடன் கிழவர் வேகமாக வந்தார்.

''நல்ல பழமாக ஒரு ரூபாய்க்குக் கொடு'' என்றார் பெரியவர்.

கிழவர் பழங்களை எண்ணிப் பெரியவரிடம் அளவுக்கு மீறிய பணிவோடு நீட்டினார். பிறகு, தமது பொக்கை வாயால் சிரித்துக்கொண்டு காசு வாங்கக் காத்திருந்தார். பெரியவர் காசை எடுத்ததும் அவரது இரண்டு கைகளும் ஏனம் போல் குவிந்தன.

ஒரு எட்டணா. ஐந்து பத்து காசுகளைத் தம் சட்டைப் பையிலிருந்து வெளியே எடுத்த பெரியவர், கிழவரின் கைகளை நோக்கி அலட்சியமாகத் தூக்கி வீசினார். நான் திடுக்கிட்டேன்.

பெரியவரா இப்படிச் செய்கிருர்?

வீசிய காசுகள் கிழவரின் கைகளில் விழாமல் தவறித் தரையில் விழுந்து உருண்டோடின. கிழவர் அவசரம் அவசரமாகக் குனிந்து பொறுக்க ஆரம்பித்தார். பாவமாக இருந்தது! பக்கத்திலிருந்த ஒருவர் பழம் கேட்டும். அவரால் விற்பனை செய்ய முடியவில்லை. அதற்குள் வண்டி புறப்பட்டுவிட்டது!

என் இளம் இரத்தம் கொதித்தது. எவ்வளவு வசதியிருந்தும், பெரியவராய் இருந்தும் என்ன பயன்? ஏழை எளியவர்களை மதிக்கும் நற்குணம் இல்லையே! நான் அவரைப் பற்றி எவ்வளவு உயர்வாக நினைத்துக் கொண்டிருந்தேன்! படித்திருக்கிறோம் என்ற திமிரும், பணத் திமிரும் அவரைப் பாழியாக்கி விட்டனவே!

பேருந்து கிளம்பவும் நான் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டேன்; பெரியவருடன் அதிகம் பேசவில்லை.

அடுத்து கிரமங்கலத்தில் பேருந்து நிற்கவும், வெள்ளரிப் பிஞ்சு விற்கும் சிறுவர்கள் ஓடி வந்தனர். பேருந்துச் சாளரங்களின் வழியே பல கைகள் வெளியே நீண்டன.

பெரியவரும் ஒரு சிறுவனை அழைத்தார்.

''முதலில் காசை எடுங்கள்; சில்லறையாக இருக்கிறதா?'' என்ருன் சிறுவன்.

பெரியவருக்குக் கோபம் வந்துவிட்டது. ''காசை எடுத்துக்கொண்டா ஓடி விடுவார்கள்? என்னவோ பறக்கிருயே!''

சிறுவன் விட்டுக் கொடுக்கவில்லை. ''முதலில் வெள்ளரிப் பிஞ்சுகளை வாங்கிக் கொள்வீர்கள்; பிறகு ஐந்து ரூபாய்த் தாளை நீட்டுவீர்கள் சில்லறைக்கு நாங்கள் எங்கேபோவோம்''

''சரி சரி! இந்தா காசு; பேசாமல் வெள்ளரிப் பிஞ்சைக் கொடு'' என்று சிறுவனிடம் நீட்டினுர் பெரியவர். ''இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குப் பேசத்தான் தெரிகிறது; மற்றபடி செய்கையில் ஒன்றும் இல்லை'' தமக்குள் முணுமுணுத்துக் கொண்டார் பெரியவர்.

சிறுவன் வெள்ளரிப் பிஞ்சுகளை அள்ளிப் பெரியவரிடம் நீட்டியபோது, பெரியவர் கீழே குனிந்து பையில் எதையோ தேடிக் கொண்டிருந்தார்.


சிறுவனுக்குப் பொறுக்கவில்லை. பெரியவர் நிமிர்ந்த அடுத்த விநாடியே நீட்டியும், நீட்டாமலும் இருந்த அவரது கைகளில் வெள்ளரிப் பிஞ்சுகளைப் போட்டுவிட்டு, அடுத்த பகுதிக்கு அவசரமாக விரைந்தான்.

வெள்ளரிப் பிஞ்சுகள் பெரியவரது கைக்குள் அடங்காமல் பேருந்தின் உட்புறத்தில் விழுந்து, நாலா பக்கங்களிலும் உருண்டோடின. அந்த வெள்ளரிப் பிஞ்சுகளைத் திரட்டப் பெரியவர் பட்ட பாட்டைப் பார்க்க வேண்டுமே!

''காலிப் பயல்! கையில் கொடுக்காமல் வீசி விட்டுப் போகிருன். எல்லாம் நாலு காசு கிடைக்கும் திமிர்; வேறென்ன?'' பெரியவரது வாய் அவனைத் திட்டித் தீர்த்தது.

என் இதழ்களில் இளநகை நெளிந்தது.

இப்படிப்பட்டவர்களெல்லாம், 'கல் வந்து தாக்கி விட்டதே!' என்றுதான் துடிக்கிருர்களே தவிர, அது திரும்பி வந்த கல் என்பதையோ, கல்லை வீசியது நம் கைதான் என்பதையோ கொஞ்சங்கூட எண்ணிப் பார்க்க மாட்டார்களா?



'டை' பாட்டு

வள்ளல் தருவது கொடை.
கேள்விக்குக் கிடைப்பது விடை.

தண்ணீர் வருவது மடை.
மழைக்கு உதவுவது குடை.

சித்திரையில் வருவது கோடை.
மார்கழியில் வருவது வாடை.

நாமெலாம் அணிவது ஆடை
நறுமலர் பறித்திடக் கூடை.

—மாஸ்டர் வி. ஏ. பி. சர்மா, சாத்தூர்.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran



கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

பிறந்த மாதம்-ஜூலை

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

